மலர் : 56

# சத்தியத்தின் குரல்

# THE VOICE OF TRUTH

INTERNATIONAL TAMIL EDITION

Volume - 56

# ✯ சத்தியத்தின் குரல் ✯

## Editorial Team


Founding Editor
**J.C.Choate**

Managing Editor
**S.Rajanayagam**

Guest Editors
Byron Nichols
Jerry Bates
Louis Rushmore
P.R. Swamy
P.C. Philemon rajah
B. Arjunan

Staff Writers
Wayne Barrier
Paula Bates
Shane Fisher
Emily Fisher
Abel R. Nayagam
Kingsly rajah

Translation : **B. Benny Martin**

Publishing Consultant
**Betty Choate**




தேவையான பிரதிகளுக்கு...
தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்
86-A, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.
தமிழ்நாடு, இந்தியா.
**Cell : 98427 30382, 99655 30385**

Copies can be had from
**Tamil World Soul Winning Campaign**
**86-A, Dharapuram Road,**
**Kangayam - 638701. TN. India.**
**Cell : 98427 30382, 99655 30385**

**Gracious Word**
Post Box 15, Arasaradi,
Madurai - 625 016.
**Cell : 92 4421 4421, 92 4420 4420**

**The Word Of Christ**
Post Box 5,
Batlagundu, - 624 206
**Cell : 94435 58041**



# காலத்தின் அடையாளங்கள்

## Signs of the Times

*Louis Rushmore*

**ஜ**னங்களின் கற்பனைத் திறனை பெருக்கவும், தீப்பொறி பிரசங்கியார்கள் உலகத்தின் முடிவைக் குறித்து முன்னறிவிக்கவும் உலகளாவிய அளவில் பெருஞ்சேதத்தை ஏற்படுத்தும் சம்பவத்தை போல் எதுவும் அமைவதில்லை. உலகத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகள் இயேசு கிறிஸ்துவின் நிச்சயமான வருகைக்கான அடையாளமாகவும், உலகத்தின் முடிவின் அடையாளமாகவும் பலரால் பார்க்கப்படுகிறது. உலகத்தின் முடிவைப் பற்றிய இந்த யூகங்கள் எல்லாம் ஜனங்களின் தவறான புரிந்து கொள்ளுதலை ஆதாரமாகக் கொண்டதாகவும், மதத்தலைவர்கள் வேத வாக்கியங்களை தவறாகப் பயன்படுத்துவதை ஆதாரமாகவும்தான் கொண்டுள்ளன. உலகத்தின் முடிவுக்கு உகந்த வசனமாக பலரால் (மத்தேயு 24:6–7) வசனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. ‘யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள், கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள், இவைகளெல்லாம் சம்பவிக்கவேண்டியதே, ஆனாலும், முடிவு உடனே வராது.




ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். (மத்தேயு 24:6,7).

அப்போஸ்தலர்கள் 24 ஆம் அதிகாரத்தில் இயேசுவிடம் இரண்டு கேள்விகளைக் கேட்டார்கள்.3 பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள் (மத்தேயு 24:3). ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களின் இரண்டு கேள்விகளுக்கும் பொறுமையாக பதில் அளிக்கிறார். முதலாவது, எருசலேம் பட்டணத்திலிருந்த தேவ ஆலயத்தின் அழிவு, இரண்டாவது, இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது உண்டாகும் உலகத்தின் முடிவு.

இங்கு நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களிடம் கள்ளத் தீர்க்கதரிசிகள் மற்றும் கள்ளக் கிறிஸ்துக்களை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று திரும்பத் திரும்பச் சொல்வதை நம்மால் கவனிக்க முடியும் (மத்தேயு24:4,5). மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மத்தேயு 24:11ல் இவ்விதமாய் சொல்கிறார். அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள் (மத்தேயு 24:11). இயேசுவின் இந்த வார்த்தைகள் நாம் வாழும் இந்த 21ஆம் நூற்றாண்டிலும் நமக்குக் கச்சிதமாகப் பொருந்துகிறது. இன்றும் நாம் கள்ள தீர்க்கதரிசிகளாலும், கள்ளக் கிறிஸ்துக்களாலும் வஞ்சிக்கப் படக்கூடாது என்று அவர் எச்சரிக்கிறார். அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் இதைப் பற்றி இவ்விதமாய் சொல்கிறார். பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்(1 யோவான் 4:1).

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருடைய சீஷர்கள் கேட்ட கேள்விக்கு பதில் அளித்த பிறகு தொடர்ந்து பேசும்போது காலத்தின் அடையாளங்களைப் பற்றி பேசுகிறார். அதாவது, காலத்தின் அடையாளங்கள் என்பது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்த உலகில் ஊழியம் செய்த நாட்களில் வாழ்ந்த சந்ததியைக் குறிக்கிறது. இதைப் பற்றி அவர் 24:34ல் பேசுகிறார். இவைகளெல்லாம் சம்பவிக்கு முன்னே இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்தேயு 24:34). எனவே, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன **காலத்தின் அடையாளம்** என்பது முதல் நூற்றாண்டுக்கு மாத்திரம் பொருந்தக் கூடியதாகவும், அதிலும் குறிப்பாக எருசலேம் தேவாலயம் அழிக்கப்படுவது தொடர்பாகவும்தான் இருக்கிறது. பெரும்பாலான சொல் அகராதிகளில் சந்ததி என்னும் வார்த்தைக்கு **பெற்றோருடைய பிறப்புக்கும், குழந்தைகளுடைய பிறப்புக்கும்** இடைப்பட்ட சராசரி காலகட்டம் என்று பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதத்தில் பார்த்தால் ஒரு சந்ததி என்பது சுமார் 30 வருடங்களை குறிக்கும். இயேசு கிறிஸ்து இவ்விதமாய் சம்பவிக்கும் என்று சொன்ன எல்லாமே 30 வருடங்களுக்குள் சம்பவிக்க வேண்டியவைகளாகத் தான்தான் இருந்தது. எனவே, இயேசு கிறிஸ்து எருசலேம் பட்டணத்தின் தேவாலய அழிவைப் பற்றி சொன்னவைகள் எல்லாம் 30 ஆண்டு கால இடைவெளிக்குள் நடந்தேற வேண்டியவவைகளாகத்தான் இருந்தன. அந்தச் சம்பவங்களுக்கும், நாம் வாழும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நடக்கும் சம்பவங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

ஒவ்வொரு சந்ததியும் யுத்தங்களையும், யுத்தங்களைப் பற்றிய வதந்திகளையும், தேசத்துக்கு விரோதமாக தேசம் எழுவதையும் பார்த்துக் கொண்டுத்தான் இருக்கிறது. அதைப்போல் இவ்வுலகம் பஞ்சங்களையும்

கொள்ளை நோய்களையும், பூகம்பங்களையும் எதிர்கொண்டுத் தான் வருகிறது. எனவே, இவைகளெல்லாம் உலகத்தின் முடிவுக்கு அடையாளங்கள் அல்ல. மத்தேயு 24 ஆம் அதிகாரத்தில் நடக்கப்போவதாக இயேசு சொன்ன சம்பவங்கள் எல்லாம் முதல் நூற்றாண்டிலேயே நடந்து விட்டன. அதாவது, முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சந்ததியே அந்த சம்பவங்களுக்கு சாட்சியாகிவிட்டது. மேலும், நம் ஆண்டவர் ஜனங்கள் மலைகளுக்கு ஓடிப் போவது குறித்தும்[ 24:16]; கர்ப்பவதிகள் குறித்தும் பால் கொடுக்கிறவர்களைக் குறித்தும் [24:19]; ஓய்வு நாளைக்குறித்தும் [24:20] சொன்னவைகளுக்கும் இயேசுவின் இரண்டாம் வருகை அல்லது உலகத்தின் முடிவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. மேலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது ஜனங்கள் மலைகளுக்கு ஓடிப் போவது என்பது எந்த அர்த்தத்தையும் கொடுக்கவில்லை. அதாவது, அவருடைய வருகையின் போது ஜனங்கள் எங்கே ஓடிப் போனாலும் அவருடைய கண்களிலிருந்து தப்ப முடியாது. அதைப்போல இயேசுவின் இரண்டாம் வருகை ஓய்வு நாளில் இருந்தால் அது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஆனால், அதே நேரத்தில் மேற்சொல்லப்பட்ட சம்பவங்களெல்லாம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீஷர்கள் கேட்ட முதல் கேள்விக்கு அதாவது, எருசலேம் தேவாலயத்தின் அழிவு சம்மந்தமாக அவர்கள் கேட்ட கேள்விக்கு இயேசு பதில் அளித்ததின் பின்னணியில் இந்த சம்பவங்கள் பொருள்படுகிறதாகவே இருக்கின்றன. ரோம சேனை எருசலேமின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்ற அப்பட்டணத்திற்குள் பிரவேசித்தால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும்படியாக கிறிஸ்தவர்கள் மலைகளுக்கு ஓட வேண்டியதாக இருக்கும். அதைப் போல் ரோமப் படைகள் எருசலேம் நகரத்தை முற்றுகையிட்டால் கர்ப்பவதிகளும், சிறு குழந்தைகளும் ரோம படைக்கு பயந்து ஓடும்போது பல்வேறு இன்னல்களை சந்திக்க நேரிடும். அதிலும் குறிப்பாக, ரோமப் படைகள் ஓய்வு நாளன்று படையெடுத்து வந்தால் நியாயப் பிரமாணத்தின் படி ஓய்வு நாள் அன்று பட்டணத்தின் வாசல்கள் மூடப்பட வேண்டும் என்பதால் ஜனங்கள் மலைகளுக்கு ஓடுவது கடினமாய் இருக்கும் என்று தான் எருசலேமின் அழிவைப்பற்றி இயேசு எச்சரித்துக் கொண்டு இருந்தார்.

மேற்சொல்லப்பட்டவைகளை வைத்து நாம் பார்க்கும் போது, மத்தேயு 24 ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் யுத்தங்களும், யுத்தங்களைப்பற்றிய வதந்திகளும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சந்ததிக்கு மாத்திரமே பொருந்தக் கூடியதாயிருக்கிறது. உலகில் வாழும் ஒவ்வொரு சந்ததியும் யுத்தங்களையும், பூகம்பங்களையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறது. எனவே, இவைகளெல்லாம் உலகத்தின் முடிவுக்கு அடையாளங்கள் அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

✝



**நிர்வாக ஆசிரியர் உரை**

## மகிமையான நற்செய்தி

## Glorious Gospel

**E.Z.S. ராஜநாயகம்**

அப்போஸ்தலன் பவுலடியார் கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் நான்காம் அதிகாரத்தில், **மகிமையான நற்செய்தி** பற்றிக் கூறியுள்ளார். இப்பகுதியில், நற்செய்தியோடு **மகிமை** என்ற மகத்தான வார்த்தையை இணைக்க ஆவியானவர் பவுலுக்கு அனுமதி தந்துள்ளார். ஏன் இப்படி எழுத ஆவியானவர் அனுமதித்தார்? இதன் பொருள் தான் என்ன? நற்செய்தி அல்லது சுவிசேஷம் மகிமையை சார்ந்திருப்பதே இதற்குக் காரணம். அப்படியானால், அது எந்த மகிமையை என்ற கேள்வி இங்கே வருகிறது அப்படித்தானே இதைத் தெரிந்து கொள்ள நாம் அந்த வசனத்தைக் குனிந்து பார்ப்பது அவசியம் - **தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி...** [11 கொரி 4:4] என்று இவ்வசனத்தில் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும். இங்கே, நற்செய்தியோடு மகிமையைச் சேர்த்த அப்போஸ்தலன் பவுல், மகிமையோடு **கிறிஸ்துவையும்** இணைத்து, **கிறிஸ்துவின் மகிமையான நற்செய்தி** என்று குறிப்பிடுகிறார். அதாவது, மகிமையானது, கிறிஸ்துவுக்கும், நற்செய்திக்கும் நடுவில் வருகிறது. இதன் பொருள் கிறிஸ்துவிடமிருந்து மகிமை நற்செய்திக்குக் கிடைக்கிறதாகவே உள்ளது. இன்னும் அதாவது, பூவாகிய கிறிஸ்துவிட மிருந்து, மணமாகிய மகிமை, நார் என்ற நற்செய்திக்குக் கிடைத் திருப்பதாகவே உள்ளது. ஆகையால், நற்செய்தியின் மகிமையாகிய மணத்தை நாம் முழுமையாக நுகர வேண்டுமானால், நற்செய்திக்கு மணம் தந்த நற்செய்தி நாயகராகிய கிறிஸ்துவின் மகிமையை நாம் ஆராய்வது அவசியமாகிறது.

### I பூமிக்கு வருவதற்கு முன்னான கிறிஸ்துவின் மகிமை.

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் நம்முடைய முயற்சியின் முதல் கட்டமாக, கிறிஸ்து பூமிக்கு வருவதற்கு முன்பாகக் கொண்டிருந்த மகிமை பற்றிப் பார்ப்போம்.

யோவான் பதினேழாம் அதிகாரம் கர்த்தராகிய இயேசுவின் ஊக்கமான ஜெபத்தைத் தாங்கி நிற்கும் ஓர் உன்னத அதிகாரம். சிலுவைப்பாடுகள் தன்னை எதிர்நோக்கியிருந்த அந்தப் பாரமான வேளையில் ஜெபித்த இந்த

ஜெபத்தின் ஊடே **பிதாவே உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்** [17:5] என்று மன்றாடினார். இந்த மன்றாட்டின் வார்த்தைகளை நாம் ஊன்றிக் கவனித்தால், ஓர் ஏக்கம் அங்கே தெரிவதை நம்மால் உணரமுடியும். ஆம், தான் விட்டு வந்ததை மீண்டும் அடைய, ஒரு குழந்தை தாயின் பாலுக்கு ஏங்குவது போல ஏங்குகிறார். அப்படியானால், அவர் விட்டு வந்த அந்த மகிமை எப்படிப்பட்ட மகிமையாக இருந்திருக்கும்? யாருக்குத் தெரியும் என்கிறீர்களா? நியாயம் தான்.

ஒருவேளை இயேசு தன் உள்வட்டத்துச் சீடர்களாகிய பேதுரு, யோவான், யாக்கோபு ஆகியோரைக் கூட்டிக் கொண்டு மறுரூபமலை என்றழைக்கப்படும் தாபோர் மலைக்குச் சென்று மறுரூப காட்சியைக் காட்டினாரே, அங்கு சென்றால் ஏதாகிலும் நமக்குத் தெரியலாமோ? அப்படியே எதையாவது அங்கே நம்மால் அறிந்து கொள்ள முடிந்தால் கூட, அது வஸ்திரத்தின் ஓரத்தைத் தொடுவது போல் தான் இருக்குமேயொழிய முழுமையானதாக இருக்காது. ஏனெனில், பூமிக்கு வருவதற்கு முன்னான அவரின் மகிமை ஈடு இணையில்லாததாகவே இருந்துள்ளது. எதற்கும் முயற்சிப்போம் வாருங்கள்.

**அவர் ஜெபம் பண்ணுகையில், அவருடைய முகம் மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது. அன்றியும் மோசே, எலியா என்னும் இரண்டு பேரும் மகிமையோடே காணப்பட்டு.. என்றுள்ளது [லூக். 9:28] இன்னும், பேதுருவும் அவனோடிருந்தவர்களும் நித்திரை மயக்கமாயிருந்தார்கள். ஆகிலும் அவர்கள் விழித்து அவருடைய மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்** [9:32] என்றுள்ளது. இந்தக் காட்சியை, லூக்கா நற்செய்தியாளன் மாத்திரமல்ல. மத்தேயுவும் [17:2], மாற்குவும் [9:3] தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இங்கே பேதுருவும் அவனோடிருந்தவர்களும் கிறிஸ்துவின் மகிமையைக் கண்ணிமைக்கும் நேரம் கண்டுள்ளார்கள். இது அவர்களுக்குப் பெரும் இன்ப அதிர்ச்சியைத் தந்துள்ளது.

எப்படியெனில், இந்தக் காட்சியை யோவான் அப்போஸ்தலனால் தன் வாழ்க்கையில் மறக்கவே முடியவில்லை. ஆகவே தான், இது நடந்து பல ஆண்டுகள் கழித்து, ஆவியானவரின் துணையோடு தான் எழுதின யோவான் நற்செய்தி நூலில் இப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். – **அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது**' [யோவான் 1:14] என்று. பரலோகில் தேவாதி தேவனோடு தான் நித்திய காலமாகக் கொண்டிருந்த

இப்படிப்பட்ட மகிமையை மீண்டும் பெற்றுக் கொள்ளத்தான் யோவான் 17–ம் அதிகாரத்தில் ஏக்கத்தோடு மன்றாடினார்.

II. **நித்திய மகிமைக்குச் சொந்தமானவரின் பூலோக வருகை**

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் தம்முடைய முயற்சியின் அடுத்த கட்டமாக, நித்திய மகிமைக்குச் சொந்தமானவரின் பூலோக ஊழியம் பற்றிப் பார்ப்போம்.

இப்படி, நித்திய மகிமைக்குச் சொந்தமாக இருந்த இயேசுவைப் பிதாவானவர் இப்பூமிக்கு அனுப்பினார். ஆம், யோவான் 3:16–ல் **தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்** என்று பார்க்கிறோம். இப்படியாக வந்த இயேசுவானவரின் மகிமை பற்றி அப்போஸ்தலனாகிய பவுலடியார் தன்னால் நேசிக்கப்பட்ட பிலிப்பு பட்டணத்து சபையாருக்கு எழுதும் போது இப்படியாகக் கூறுகிறார்.– **அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின** பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் – (பிலி. 2:6,7) என்று.

இயேசுவானவரின் இந்த மகிமையை, அவர் இப்பூவுலகம் வருவதற்கு முன் சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஏசாயா தீர்க்கன் அவருடைய மகிமையைக் கண்டதாக யோவான் அப்போஸ்தலன் கூறுகிறார். '**அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும் படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடின மாக்கினார் என்றான். ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு, அவரைக் குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்னான்** என்று (யோவான் 12:41). அதுமாத்திரமல்ல, இயேசு தம்முடைய மகிமையை தமது செயல்களின் மூலம் பூமியில் வெளிப்படுத்தினார் என்று யோவான் 2:11–லும் பார்க்கிறோம். **இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீஷர்கள் அவரி டத்தில் விசுவாசம் வைத்தார்கள்.**

இப்படி, நித்திய மகிமைக்குச் சொந்தக்காரராகிய இயேசுவானவர், தம்முடைய மகிமையைத் துறந்து, பூமிக்கு வந்து, மகிமையின் ஊழியத்தைச் செய்து, தனது தியாகத்தின் மூலம் தமக்கு நற்செய்தியைக் கொடுத்துள்ளபடியால், நற்செய்தியை மகிமையின் நற்செய்தி என்றழைப்பது எல்லாவகையிலும் நியாயமாகவே உள்ளது.

III. **நித்திய மகிமைக்கு அழைத்துச் செல்லும் நற்செய்தி**

நற்செய்தியின் மகிமையை அறிந்து கொள்ளும் நம்முடைய முயற்சியின் இன்னுமொரு கட்டமாக நித்திய மகிமைக்கு நம்மை அழைத்துச் செல்லும் நற்செய்தியின் மகிமை பற்றிப் பார்ப்போம்.

நித்திய மகிமையோடிருந்து அதைத் துறந்து பூமிக்கு வந்து, தமது மகிமையை வெளிப்படுத்தி நற்செய்தியைத் தந்தவர், அந்த மகிமைக்குள் நாமும் பிரவேசிக்க முடியும் என்று சொல்லியுள்ளார். நற்செய்தியின் மூலம் கிடைக்கும் ஏராளமான ஆசீர்வாதங்களுக்கு மகுடமாக இது உள்ளது.

இரட்சகராகிய இயேசுவானவர் சிலுவைக்குப் போவதற்கு முன்பாக, தான் சீடர்களை விட்டுப் போகிறேன் என்று சொன்னதினிமித்தம் கலங்கிப் போயிருந்த சீடர்களிடம், **உங்கள் இருதயம் கலங்கா திருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்** என்று ஆரம்பித்து, **நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும் படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்** (யோவான் 14:3) என்றார். அப்படியானால், அவர் இருக்கும் இடம் எது? அப்போஸ்தலன் பேதுரு, பெந்தெகொஸ்தே நாள் பிரசங்கத்தில், இயேசுவானவர், பிதாவின் வலது கரத்தில் உயர்த்தப்பட்டு இருக்கிறார் (அப். 2:33) என்று அறிவிக்கிறார். அந்த இடம் மகிமையான இடம் என்று வெளிப்படுத்தல் நூலில் இருந்து நாம் புரிந்து கொள்ள முடியும். (வெளி 21:23)

இந்த மகிமையான இடத்தில் தான், தன்னுடையவர்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவதாக தன் ஜெபத்தில் மன்றாடுகிறார். **பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால் நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்** (யோவான் 17:24) என்றார். இயேசுவின் விருப்பத்தை கவனித்தீர்களா? **நீர் எனக்குத் தந்தவர்கள்** என்பது இங்கே யாரைக் குறிக்கிறது? அங்கே அவரோடு இருந்த சீடர்களை மாத்திரம் குறிக்காமல், இன்றளவும் அவரைப் பின்பற்றுகிற அதாவது, அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை அப்படியே ஏற்று நடக்கிற யாவரையும் குறிக்கிறது. இதன் மூலம் கிறிஸ்துவின் சுவிசேஷ அழைப்பை ஏற்றுக் கொள்பவர்கள் அனைவரும் அவருடனே இருக்க விரும்புகிறார்.

ஆக, இங்கே நற்செய்தியானது, யாரெல்லாம் அதன் உபதேசத்துக்குக் கீழ்ப்படிகிறார்களோ அவர்கள் ஒவ்வொருவரையும் கிறிஸ்து அடைந்த மகிமைக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுத் தருகிறது. இந்த பாக்கியம் இதை வாசிக்கும் நமக்குச் சொந்தமாக வேண்டுமென்றால், நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி விசுவாசித்து (மாற்கு. 16:16), மனந்திரும்பி (அப். 2:38). இயேசுவைத்

தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு [ரோமர் 10:9,10] பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் [அப். 22:16]. அப்பொழுது நாம் கர்த்தராலே அவருடைய சபையில் சேர்க்கப்படுவோம் [அப். 2:47], நாம் கிறிஸ்துவினுடையவர்களாக மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருந்து [வெளி 2:10], அவருடைய வருகைக்குக் காத்திருந்தால் [1 கொரி. 1:7] இயேசுவின் விருப்பப்படி மகிமைக்குள் பிரவேசிப்போம்.

ஆகையால் அருமையானவர்களே, இந்த மகிமையான நற்செய்திக்கு நம்மில் யாரும் இன்னும் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், இன்றே நற்செய்தியின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுப்போம். தேவ சமாதானம் உங்களனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!

# ஈவுகள்

**1. பாராட்டு என்னும் ஈவு**

விமர்சகர்கள் உறவை முறித்துப்போடுகிறார்கள். உற்சாகப்படுத்துபவர்கள் கட்டி எழுப்புகிறார்கள். ஒருவரை ஒருவர் நாம் பாராட்டப் பழகிக் கொள்ள வேண்டும்.

**2. புரிந்து கொள்ளுதல் என்னும் ஈவு**

மற்றவர்கள் நம்மை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று ஆதங்கப்படுகிறோம். ஆனால், நாம் மற்றவர்களைப் புரிந்து கொள்வதில் தவறிழைத்து விடுகிறோம்.

**3. விட்டுக்கொடுத்தல் என்னும் ஈவு:**

வாழ்க்கையில் நாம் எப்போதுமே வெற்றி பெற்றுக் கொண்டே இருக்க வேண்டிய அவசியமில்லை. மற்றவர்கள் வெற்றி பெறவும் நாம் இடங் கொடுக்க வேண்டும்.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| காலத்தின் அடையாளங்கள் | Louis Rushmore | *...1* |
| மகிமையான நற்செய்தி | E.Z.S. Rajanayagam | *...4* |
| ஏன் அநேக ஜனங்கள்... | J.C. Choate | *...11* |
| சபை கூடிவருதலின் முக்கியத்துவம் | Jerry Bates | *...15* |
| கிறிஸ்தவத்தின் முரண்பாடுகள்... | Shane Fisher | *...19* |
| முயற்சியின் சிகரம் | E.Z. Selvanayagam | *...25* |
| விரிவான வாசல் இடுக்கமான வாசல் | Benny Martin | *...29* |
| கர்த்தருக்காக காத்திருங்கள் | P.C.Philemon Rajah | *...33* |
| கிறிஸ்து எனக்கு ஜீவன்... | B. Arjunan | *...37* |

## தேவன் - God

| | | |
|---|---|---|
| இயேசுவின் தாழ்மை | Royce Frederick | *...41* |
| கல்வாரியின் மூன்று சிலுவைகள் | Cliff Holmes | *...47* |

## தேவனுடைய வார்த்தை - Word Of God

| | | |
|---|---|---|
| வேதாகமத்தின் தாக்கம் | T. Pierce Brown | *...49* |
| தேவனுடைய சித்தத்தின்... | Ronald D. Reeves | *...51* |
| கடைத்தொகை | Denny Petrillo | *...52* |

## இரட்சிப்பு - Salvation

| | | |
|---|---|---|
| என் பெயர் அங்கே... | Rodney Nulph | *...54* |
| இரட்சிக்கப்பட ஒருவன் என்ன... | David Conley | *...57* |

## சபை - The Church

| | | |
|---|---|---|
| ஐக்கியத்திற்கு நம்மை நாம்... | Brian Kenyon | *...59* |
| சபை தலைமைத்துவம் | Tom Baxley | *...61* |
| சபை வளர்ச்சி என்பது... | Dan R. Owen | *...62* |
| ஆபிரகாமின் சந்ததி | Dwight Fuqua | *...64* |

## வாழ்வதற்கான உபதேசம் - Doctrine to Live


| | | |
|---|---|---|
| கிருபையிலிருந்து கற்று... | Wayne Barrier | *...66* |
| இவைகளையெல்லாம் அஞ்ஞானி... | Beth Johnson | *...68* |


## செயலில் கிறிஸ்தவம் - Christianity in Action


| | | |
|---|---|---|
| சுய சேவை செய்யும் உலகில்... | Emily Fisher | *...71* |
| நியாயமான சோதனை | Aaron Cozort | *...75* |


## ஆராதனை - Worship


| | | |
|---|---|---|
| கொடுத்தல் | Dean Kelly | *...77* |
| இயேசுவை பிரசங்கியுங்கள் | Cecil May. Jr | *...79* |


## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை - Daily Christian Living


| | | |
|---|---|---|
| தனிமை | Michael Brooks | *...80* |
| கிறிஸ்துவின் சேனையில்... | Ardron Hinton | *...84* |
| விசேஷமாக உண்டாக்கப்பட்டார்கள் | Betty Burton Choate | *...86* |


## கிறிஸ்தவ இல்லம் - Christian Home


| | | |
|---|---|---|
| புத்தியுள்ள மகன் புத்தி இல்லாத மகன் | Aaron Cozort | *...92* |
| தன் குமாரனை தேவனுக்கு | Gary C. Hampton | *...94* |
| தீமோத்தேயுவின் தாய் | Ernest S. Underwood | *...96* |


## வேதாகம கதாபாத்திரம் - Bible Character


| | | |
|---|---|---|
| அலைந்து திரியும் கூடார... | Rebecca Rushmore | *...102* |
| பவுல் கொரிந்தியர்களுக்கு... | Hiram Kemp | *...106* |



1932 – 2008

## ஏன் அநேக ஜனங்கள் தவறான உபதேசத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்?

## Why do so many people accept false doctrines?

*J.c choate*

***வே***தாகமத்தை வாசிப்பவர்களிடத்திலும், தேவனுடைய சித்தத்தை அறிந்தவரிடத்திலும் பொதுவாக எழும் கேள்வி என்னவென்றால், **ஏன் அநேகர் தவறான உபதேசத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்?** என்பதாக இருக்கிறது. அதோடு கூட, ஏன் ஜனங்கள் எளிதாக வஞ்சிக்கப்பட்டு தவறான பாதைக்கு கொண்டு போகப்படுகிறார்கள்? ஜனங்களால் உண்மைக்கும், பொய்க்கும் உண்டான வித்தியாசத்தை காண முடியவில்லையா? என்றும் அவர்களுக்கு கேள்விகள் எழும்புகின்றன.

நாம் இந்த காரியத்தை சற்று ஆழமாகப் பார்த்தால், நிச்சயமாகவே பலர் வஞ்சிக்கப்பட விரும்புகிறார்கள். இவ்வகையான ஜனங்கள் தங்கள் பெற்றோர்களால் போதிக்கப்பட்ட உபதேசத்தோடு ஒத்துப்போகிற உபதேசங்களையும் , ஏற்கனவே தாங்கள் நம்புகிற உபதேசத்தோடு ஒத்துப் போகிற உபதேசத்தையும் எதிர்பார்க்கிறார்கள். அது மாத்திரமல்ல, தங்கள் வாழ்க்கை முறைக்கு எந்த உபதேசம் ஒத்துப் போகிறதோ அந்த உபதேசத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். இன்னும் சிலர் பிரபலமானவர்களால் ஈர்க்கப்பட்டு பிரபலமானவர்களின் வார்த்தைகளை அநேகர் நம்பி அவர்களைப் பின்பற்றுவதால் அந்த வார்த்தைகள் தான் நிச்சயமாக உண்மையாக இருக்க வேண்டும். அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் உண்மையை நிராகரிக்கிறேன் என்று சொல்லும் அளவுக்கு வஞ்சிக்கப்படுகிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல், இது உலகத்தின் காரியங்களால் வஞ்சிக்கப்படுகிறவர்களுக்கும் உண்மையாய் இருக்கிறது என்று சொல்லுகிறார்.‘சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது, தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் சாக்குப் போக்குச்சொல்ல இடமில்லை.

அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார், அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத்தொழுது சேவித்தார்கள். அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ஆமென்.

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள், உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறுபண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம்பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவஅன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் [ரோமர் 1:18–32].

இந்த நாட்களில் பல அப்பட்டமான பொய்கள் காலப்போக்கில் உண்மைகளாக தரம் உயர்த்தப்படுகின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் சொன்னது போல இந்த உலகம் பல கொடூரமான பாவங்களைக் கூட அது பரவலாக பல இடங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறபடியால், அது கலாச்சார ரீதியாக சரியானது என்று ஏற்றுக் கொள்கிறது. முதல் உலகில் நாம் பார்க்கும் போது ,தவறான காரியங்கள் கூட உண்மையாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. எத்தனை முறை சிலுவையில் தொங்கிய கள்வன் ஞானஸ்நானம் பெறாமலேயே இரட்சிக்கப்பட்டான் என்னும் தவறான உபதேசம் எந்த ஒரு பாவியும் இன்று ஞானஸ்நானம் பெறாமலே இரட்சிக்கப்பட முடியும் என்பதை நிரூபிப்பதற்காக காலகாலமாக தவறாக போதிக்கப்பட்டு வருகிறது. எல்லா சபைகளும் ஒன்று தான் என்று எத்தனை முறை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதைப்போலவே, ஒருவர் விசுவாசித்ததினால் மாத்திரம் இரட்சிக்கப்பட முடியும் என்றும், எல்லா மனிதர்களும் பாவத்தில் தான் பிறந்தார்கள் என்றும் ஆயிரக்கணக்கான தவறான மத உபதேசங்கள் பல நூற்றாண்டுகளாக உண்மைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தவறான உபதேசங்கள் அல்லது கள்ள உபதேசங்கள் பெரும்பாலான பிரசங்கியார்கள் மற்றும் உபதேசியார்களால் மிகவும் பிரபலமான முறையில் உலகெங்கிலும் எடுத்துரைக்கப்படுவதால் அவைகள் எல்லோராலும் அறியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. கள்ள உபதேசங்கள் ஜனங்களைக் கவரும் வகையில் அச்சு ஊடகம், வானொலி, தொலைக்காட்சி, அழகான கட்டிடங்களில் கூட்டங்கள் போன்றவைகள் மூலமாக அறிவிக்கப்படுகின்றன. அநேகர் இந்தக் கள்ள உபதேசங்களை ஏற்றுக் கொள்கிறபடியால் அவைகள் உண்மைகளாக எண்ணப்படுகின்றன. ஆனால், மறுமுனையில் நாம் பார்க்கும் போது, கர்த்தருடைய சபைகள் சிறியவைகளாகவே இருக்கின்றன. முழு சத்தியத்தையும் பிரசங்கிக்க நம்மிடம் சில பிரசங்கியார்களே இருக்கிறார்கள். அது மாத்திரமல்லாமல், நாம் மற்றவருடைய தவறுகளை கண்டித்து வேதாகமத்திற்கு திரும்புங்கள் என்று நாம் ஜனங்களை கேட்டுக் கொண்டால் நிராகரிக்கப் படுகிறோம், விமர்சிக்கப்படுகிறோம். இவர்கள் மட்டும்தான் பரலோகம் போவார்கள் என்று பரிகாசம் பண்ணப்படுகிறோம். சில வேளைகளில், பலவீனமான சகோதரர்கள் விமர்சனங்களுக்கும், நிராகரிப்புகளுக்கும் அடிபணிந்து கர்த்தருடைய சபையை விட்டு விட்டு மார்க்க பிரிவினைக் கூட்டங்களில் சேர்ந்து விடுகிறார்கள். இது சோக கரமானது, பெரும் பான்மை ஒன்றை ஏற்றுக் கொள்கிறது என்பதற்காக அது சரியாகிவிடாது. இயேசு கிறிஸ்து தாமே இவ்விதமாய் சொல்லி இருக்கிறார்.

‘ இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள், கேட்டுக்குப் பேகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.

ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும்,வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர் [மத்தேயு 7:13,14]. நம் ஆண்டவர் பெரும்பான்மை பக்கத்தில் இருந்தாரா அல்லது சிறுபான்மை பக்கத்தில் இருந்தாரா?

தேவனுடைய வசனமே சத்தியம் என்பதை நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் [யோவான்17:17]. சத்தியம் மாத்திரமே நம்மை எல்லாவற்றிலிருந்தும் விடுதலையாக்கும் [யோவான் 8:32]. இயேசு கிறிஸ்து இவ்விதமாய்ச் சொன்னார் அதற்கு இயேசு: நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் [யோவான் 14:6]. இறுதியாக, இயேசு கிறிஸ்து நாம் அவரையும் அவருடைய வார்த்தையையும் தள்ளினால் கடைசி நாளில் அவருடைய வார்த்தை தான் நம்மை நியாயம் தீர்க்குமென்று அறிவித்திருக்கிறார் [யோவான் 12:48].

பெரும்பாலானோர் ஒன்றை நம்பி அதை நடைமுறைப்படுத்தலாம். அதிகமானோர் அதைச் செய்வதினால் அது சரியாகி விடாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். மனிதர்களிடத்திலும், அவர்களுடைய உபதேசங்களிடத்திலும் தவறுகள் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறபடியால் மனிதர்களையும், அவர்களுடைய உபதேசங்களையும் நாம் பின்பற்றக் கூடாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் தேவனுடைய வார்த்தையைக்கேட்டு அதை விசுவாசித்து, அவருக்கு கீழ்ப்படிவது தான், அப்போதுதான் நாம் சரியானவர்களாக இருப்போம். தேவனுடைய வழிக்கு எதிராக எல்லோரும் இருந்தாலும் கூட அதுதான் சரியாக இருக்கும். எனவே, நீங்கள் நித்தியமாக இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் தேவனுடைய வழியில் காரியங்களை செய்யுங்கள்.

✝

---

**நாம் வாழும் இவ்வுலகில் நம் மீது வேண்டுமென்றே தவறான தகவல்களும், ஏமாற்றுக் கணைகளும் தொடுக்கப்படுகின்றன. நம்பிக்கை என்னும் வார்த்தை பின்னுக்கு தள்ளப்படுகிறது. ஒரு காரியம் உண்மையாய் இருக்கிறதா இல்லையா என்பதை விசாரிப்பது கூட முக்கியமற்றதாகிவிட்டது. அதற்கு பொழுதுபோக்கு அம்சங்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் கூட கொடுக்கப்படுவதில்லை என்பது வேதனையிலும் வேதனையாகும்.**



## சபை கூடி வருதலின் முக்கியத்துவம்

## The importance of Assembling Together

*Jerry Bates*

**ஆ**ராதனை என்பது நீண்ட காலமாகவே நாம் தேவனுக்கு செய்யும் கிறிஸ்தவ சேவையின் முக்கியப் பகுதியாக பார்க்கப்படுகிறது. எனவே தான், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பரிசுத்தவான்களோடு ஒன்று கூடுவதையும் , ஒன்றான மெய் தேவனை ஆராதிப்பதையும் எதிர்நோக்குகிறார்கள். இருந்த போதிலும், சில வேளைகளில் ஒருவர் சபை கூடி வருவதிலிருந்து தடுக்கப்படுகிறார். அது ஒரு நெடிய நீண்ட வியாதியாக இருக்கலாம், இயற்கை பேரிடராக இருக்கலாம். அல்லது சமீபத்தில் உலகம் முழுவதையும் தாக்கிய கொரோனா கொள்ளை நோயாக இருக்கலாம். இத்தகைய சூழ்நிலைகளில் கிறிஸ்தவர்களால் தேவனை ஆராதிக்கும்படி ஒன்று கூட இயலாது. சமீபத்திய கொரோனா கொள்ளை நோயின் போது உலகம் முழுவதும் இத்தகைய சூழல் நிலவியதை நம் கண்களால் கண்டோம். பெரும்பாலான தேசங்கள் பொது முடக்கத்தை அறிவித்தபடியால் உலகம் முழுவதிலுமுள்ள கிட்டத்தட்ட எல்லாம் சபைகளுமே அந்த கொடிய கொள்ளை நோயிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளும்படியாக ஒன்று கூடாமல் இருந்தார்கள். இருந்தபோதிலும், தேவனுக்கு ஏறெடுக்கப்பட்ட ஆராதனை நின்றுவிட்டது அல்லது முடங்கி விட்டது என்று பொருள் படாது.

ஆராதனை என்பது ஒரு நபர் தேவனுக்குச் செய்யும் தனிப்பட்ட சேவையாகும். இது ஒருவருடைய உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்து வரவேண்டும். அதனால்தான் ஒருவர் எங்கிருந்தும் தேவனை துதிக்க முடியும் என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. கொரோனா காலகட்டத்திலும் கூடக் கிறிஸ்தவர்கள் சபையாக ஒன்று கூடி தேவனை ஆராதிக்காவிட்டாலும் கூட தங்கள் குடும்ப அளவிலே அல்லது ஒரு சிறு கூட்டமாக வீடுகளில் கூடி ஆராதித்தார்கள். உலகம் முழுவதும் **ஆன்லைன்** ஆராதனைகள் தேவனுடைய பிள்ளைகளால் ஏறெடுக்கப்பட்டன. பலர் ஆன்லைன் ஆராதனைகளை தேவன் ஏற்றுக் கொள்வாரா என்று கேள்வி எழுப்பினார்கள். அது மாத்திரமல்ல, நாம் இவ்விதமாக வீட்டிலிருந்து கொண்டு தேவனை ஆராதிக்க வாய்ப்பு இருக்கும் பொழுது நாம் ஏன் சபையாக ஒன்று கூடி தேவனை ஆராதிக்க வேண்டும்? என்றும் சிலர் கேள்வி எழுப்புகிறார்கள். அப்படியென்றால், கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க ஒன்று கூடாமல் ஆங்காங்கே தங்கள் வீடுகளில் தனியாக ஆராதிக்க தொடங்கி விடுவார்களா? இவைகள்

எல்லாம் சிந்திக்கத் தக்க சரியான கேள்விகள் தான். இருந்தபோதிலும், தனி ஆராதனை கூட்டு ஆராதனை போல் சிறப்பாய் இருக்குமா?



இந்த தனிப்பட்ட ஆராதனையின் மிகப் பெரிய ஆபத்து என்னவென்றால், இது நாம் செய்ய வேண்டிய ஒரு சடங்காச்சாரமாக காலப்போக்கில் மாறிவிடும். அது மட்டுமல்லாமல், இது தனிப்பட்ட ஆராதனையாக இருக்கிறபடியால் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் ஆராதித்துக் கொள்ளலாம் எனும் மனநிலை ஏற்பட்டு விடும். பொதுவாக, ஒரு கூட்டு ஆராதனை என்றால் அநேக காரியங்கள் திட்டமிடப்பட்டு அங்கு செயல்படுத்தப்படும். ஆனால், தனிப்பட்ட ஆராதனையில் ஒருவர் வேறு காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதே திடீரென வந்து சில நிமிடங்கள் ஆராதித்து விட்டு பின்பு பழைய படியே தான் செய்து கொண்டிருந்த செயல்களில் ஈடுபட முடியும். தனிப்பட்ட ஆராதனையில் ஓர் ஒழுங்கும், கிரமமும் இல்லாமல் போவது மாத்திரமில்லாமல் பயபக்தியும் இல்லாமல் போய்விடும்.

மேலும், பலர் ஆராதனையின் நோக்கத்தை மறந்து விட்டது போல் தெரிகிறது. ஆம், ஆராதனை என்பது பிரதானமாக நம் சிருஷ்டிகராகிய தேவனை கனப்படுத்தும் செயலாகும். ஆனால், ஆராதனையின் நோக்கம் இன்னும் ஒன்றுண்டு.எபிரெயர் ஆசிரியர் நம்மை இவ்விதமாய் உற்சாகப்படுத்துகிறார். **சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்**'[எபிரேயர் 10:25]. இந்த வசனப் பகுதியில் நாம் சோர்ந்து போவது எளிதாய் இருக்கிறபடியால் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்த வேண்டும் என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதை நாம் சபை கூடி வரும் போது தான் சிறந்த முறையில் செய்ய முடியும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தும்படி புத்தி சொல்லப்பட்டிருக்கிறோம்.11 **ஆகையால் நீங்கள் செய்துவருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.** [1 தெசலோனிக்கேயர் 5:11]. இந்த வசனத்தில் தெசலோனிக்கே பட்டணத்தார் ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாக்குவதில் பரபரப்பாக இருந்தார்கள். எனவே, தொடர்ந்து அவர்கள் அப்படிச் செய்யும்படியாக அவர்களுக்கு புத்திமதி சொல்லப்பட்டது. நாம் சக கிறிஸ்தவர்களோடு ஒன்று கூடும் போது தான் ஒருவரை ஒருவர்

உற்சாகப்படுத்த முடியும், ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாக்க முடியும். எனவே, ஒருவர் சபை கூடி வரத் தவறும்போது அவர் மற்றவர் களை உற்சாகப்படுத்துவதற்கு பதிலாக சோர்வடையச் செய்கிறார். எனவே, ஆராதனையின் மற்றுமொரு நோக்கம் சக கிறிஸ்தவர்களை உற்சாகப்படுத்துவதாகவும், நம்மை நாமே உற்சாகப்படுத்துவதாகவும் உள்ளது.

அது மாத்திரமில்லாமல், நாம் ஓர் ஆவிக்குரிய குடும்பமாக மற்றவர்கள் மீது அக்கறை கொண்டு அவர்களுடைய தேவையின் போது உதவி செய்ய வேண்டும். இது பொருளாதார உதவியாகவும் இருக்கலாம், அதைவிட மேலாக, மற்றவரிடத்தில் அன்பு, அக்கறை, இரக்கம் போன்றவைகளைக் காட்டுவதாக இருக்க வேண்டும். இவ்விதமான உதவிகள் தடுமாறும் கிறிஸ்தவர்களை அதிகமாக உற்சாகப்படுத்தும். ஆனால், நாம் சபை கூடி வராவிட்டால் அங்கத்தினர்களின் தேவைகளை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? நாம் தொழில்நுட்ப காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறபடியால் தேவனுடைய வார்த்தைகளை பல்வேறு ஊடகங்கள் வாயிலாக பெற்றுக் கொள்ள முடியும். ஆனாலும் கூட, நாம் சபையாக ஒன்று கூடி தேவனுடைய வார்த்தைகளைப் பெற்றுக் கொள்வதுபோல் எதுவும் வராது அல்லது எதுவும் தாக்கத்தை ஏற்படுத்தாது.

எவ்விதத்தில் பார்த்தாலும் தனிப்பட்ட ஆராதனை சபையாக ஒன்று கூடி ஏறெடுக்கும் கூட்டு ஆராதனைக்கு இணையாகாது. ஒருவர் தனியாக வீட்டில் இருந்து கொண்டு ஆவிக்குரிய பாடங்களை பார்க்கலாம், கேட்கலாம். ஆனால், கூட்டு ஆராதனையில் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை நிச்சயமாக பெற்றுக் கொள்ளவே முடியாது. சக கிறிஸ்தவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிப்பதற்கு இணையாக அல்லது மாற்றாக எதையும் வைக்க முடியாது. அநேகர் இதை சமீபத்திய கொரானா கொள்ளை நோயின் போது கண்டு கொண்டார்கள். பல மாதங்களாக சபை அங்கத்தினர்களைப் பிரிந்து தனியாக ஆராதனை ஏறெடுத்து வந்த நாம் மறுபடியும் சக கிறிஸ்தவர்களோடு கூடி தேவனை ஆராதிப்பதில் ஆனந்தமடைகிறோம்.



நாம் தனியாக கிறிஸ்துவை நீண்ட காலம் பின்பற்றுவது என்பது கடினமான காரியமாகும். இதற்கு உதாரணமாக, தீயில் போடப்படும் ஒரு குச்சி பெரும்பாலும் பேசப்படுகிறது.. அந்த குச்சி மரக்கட்டைகளோடு சேர்ந்திருந்தால்தான் அது நன்றாக எரிந்து குளிர்காலத்தில் வெப்பத்தை கொடுக்கும். ஆனால் ,அந்த குச்சி தனியாகப் பிரிந்து எரிந்து கொண்டிருந்தால் அந்த ஒற்றைக் குச்சி சீக்கிரமாய் அணைந்து விடும். அதைப்போலவே ஒரு கிறிஸ்தவர் மற்ற கிறிஸ்தவர்களின் உற்சாகம், நட்பும் இல்லாமல் நீண்ட காலம் தேவனுக்கு பிரியமான ஆராதனை ஏறெடுக்க முடியாது. ஏனென்றால், ஒரு கிறிஸ்தவர் தனியாக ஆராதிக்கும் போது நாளடைவில் அவருக்கு சோர்வு ஏற்பட்டு, அவருடைய ஆவிக்குரிய அக்கினி அணைந்து போய்விடும்.

நாம் சக கிறிஸ்தவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்காமல் தனியாகவே தேவனை ஆராதிக்க முடியும் என்ற எண்ணத்தால் ஒருபோதும் வஞ்சிக்கப்பட வேண்டாம். நாம் அவ்விதமாக எண்ணினால் அழிவின் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்று பொருள்படும். அது மாத்திரமல்லாமல், அத்தகைய எண்ணம் மற்றவருடைய ஆவிக்குரிய நலன் மீதும் மிக மோசமான தாக்கத்தை அல்லது விளைவுகளை ஏற்படுத்தும். நாம் சக கிறிஸ்தவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிப்பதினால் அநேக நன்மைகள் உண்டு.. தேவன் அதை நன்றாய் அறிந்திருக்கிறபடியால்தான் நாம் தேவனை ஆராதிப்பதற்காக சபையாக ஒன்று கூட வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். ✝

---

**ஒன்றே**

- மாற்ற முடியாது வேதாகமம் ஒன்றே
- வெளிப்படுத்தப்பட்ட விசுவாசம் ஒன்றே
- தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய சரீரம் ஒன்றே
- சரீரத்தை ஆளுகை செய்கிற தலை ஒன்றே
- பிரதான கட்டளை ஆகிய ஞானஸ்நானம் ஒன்றே
- இரட்சிப்புக்கு சுவிசேஷம் ஒன்றே
- எல்லாம் மனுஷரும் சுற்றி நிற்க வேண்டிய சிலுவை ஒன்றே
- நித்திய ஜீவனுக்கு வழி வகுக்கிற இடுக்கமான வாசல் ஒன்றே
- கேட்டுக்கு போகிற விசாலமான வாசலும் ஒன்றே.



## கிறிஸ்தவத்தின் முரண்பாடுகள் எப்போதும் போரில், இருந்தபோதிலும் சமாதானத்தில்.

## Always at War, Yet at Peace

*Shane Fisher*

தமிழ் அகராதி paradox என்னும் ஆங்கில வார்த்தைக்கு முரண்பட்டது போல் இருந்தாலும் உண்மையான ஒரு கூற்று வாக்கியம் என்று விளக்கம் கொடுக்கிறது. வேதாகமம் முழுவதும் முரண்பாடு உள்ள வாக்கியங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. அவைகள் நாம் ஆழமான உண்மைகளை தியானிக்க உதவுகின்றன. இன்று நாம் ஆராயப்போகும் முரண் **எப்போதும் போரில், இருந்தபோதிலும் சமாதானத்தில்** என்பதாக இருக்கிறது.

இது முற்றிலும் முரண்பாடாகத்தான் தோன்றுகிறது. அப்படித்தானே? போர் நடந்து கொண்டிருக்கும் போது அங்கே சமாதானத்திற்கு இடமே இல்லை. ஏனென்றால், தேசங்கள் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளும் போது சமாதானம் எப்படி இருக்கும்? தேசங்களுக்கிடையேயான யுத்தத்தில் குண்டு மழை பொழியும். இந்த குறிப்பிட்ட இலக்குகளை குறிவைத்து விமானங்களில் இருந்து குண்டுகள் வீசப்படும். உலக வரலாற்றை நாம் சற்று புரட்டிப் பார்த்தால், போருக்குப் பின் போர் என்று தொடர்ந்து நடந்து கொண்டே தான் இருக்கிறது. உலகெங்கும் யுத்தங்கள் முடிந்தபாடில்லை. காரியங்கள் இப்படியாக இருக்கும்போது, ஒரு கிறிஸ்தவன் போரில் இருந்து கொண்டு எப்படி சமாதானத்திலும் இருக்க முடியும் என்று நீங்கள் கேள்வி கேட்கலாம். இந்த முரண்பாட்டிற்கு பின்னால் ஒளிந்திருக்கும் உண்மை என்னவென்றால், ஒரு கிறிஸ்தவர் எப்போதுமே ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டாலும் கூட அதே நேரத்தில் இயேசு அளிக்கும் சமாதானத்தையும் அனுபவிக்கிறார் என்பதாகும்.

### யுகயுகமாக நடந்து கொண்டிருக்கும் யுத்தம்

நீங்கள் ஒரு நிசப்தமான இரவு வேளையில் தூங்கிக் கொண்டிருப்பதாக கற்பனை செய்து கொள்ளுங்கள். உங்களைச் சுற்றிலும் ஒலிக்கும் அத்தனை சத்தத்திற்கு மத்தியிலும் நீங்கள் உறங்கிக் கொண்டு தான் இருக்கிறீர்கள். பொதுவாக இத்தகைய சூழ்நிலையில் நாம் ஆழமான தூக்கத்தில் இருந்தால் கூட வெளியே கேட்டுக் கொண்டிருக்கும் பயங்கரமான சத்தத்தைக் கேட்டு நாம் எழுந்து விடுவோம்.

ஆவிக்குரிய பிரகாரமாக, காணப்படாத உலகிலும் கூட மேற்ச்சொல்லப்பட்ட சம்பவம் உண்மையாகவே நடந்து கொண்டு தான் இருக்கிறது. சிருஷ்டிப்பின் ஆரம்பத்திலிருந்து திரைக்குப் பின்னால் ஒரு



யுத்தம் நடந்து கொண்டு தான் இருக்கிறது. ஆனால், நம்மில் அநேகர் ஆவிக்குரிய பிரகாரமாக உறங்கிக் கொண்டிருக்கிறோம் (ரோமர் 13:11-14; ஆதியாகமம்3:1-6). இந்த யுத்தமானது மனித இனத்தை அழித்து அதை சிருஷ்டிகருக்கு எதிராக முயற்சித்துக் கொண்டிருக்கும் சாத்தானால் தொடங்கப்பட்டது (2 கொரிந்தியர் 4:4; வெளிப்படுத்தின விசேஷம் 12:7-12; யோபு 1-2; மத்தேயு4:1-11).

தேவனுடைய அற்புதமான சிருஷ்டிப்பையும், நன்மையையும் கெடுக்க முயற்சிக்கும் ஓர் ஒட்டுண்ணிதான் இந்த சாத்தான்.

இறுதி உண்மை மீது தொடுக்கப்படும் போர் சாத்தான் நம்மிடத்தில் தேவன் இருக்கிறாரா, இல்லையா என்னும் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டால் அவன் அந்தத் தந்திரத்தை மிகச் சரியாகப் பயன்படுத்துவான். வேதாகமத்தின் தேவன் என்று ஒருவர் இருக்கிறாரா? அவர் இருக்கிறார் என்பதை நம்மால் எப்படிப் புரிந்து கொள்ள முடியும். நாம் வாழும் இப் பிரபஞ்சம் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஒரு வடிவமைப்பாளர் இருந்து தானே ஆக வேண்டும். (எபிரேயர்3:4) இன்று உலகில் காணப்படும் எல்லாவிதமான ஒழுக்க நெறிகளுக்கும் தேவன் தான் அஸ்திபாரமாக இருக்கிறார் (கலாத்தியர்5:19-21). ரோமர் 1:18-32).

### அறிவு மீது தொடுக்கப்படும் போர்

சாத்தான் சில குறிப்பிட்ட காரியங்கள் உண்மையா அல்லது பொய்யா என்பதை கூட நாம் அறிந்து கொள்ள முடியுமா என்று நாம் சந்தேகப்படுவதை விரும்புகிறான். நம்மால் எதையும் அறிந்து கொள்ள முடியாது என்பது நம்மை தர்ம சங்கடமான நிலைக்கு தள்ளிவிடும். இயேசு கிறிஸ்து ஒரு மனிதனால் சத்தியத்தை அறிந்து கொள்வது சாத்தியம் என்று போதித்தபடியால் ஒருவரால் சத்தியத்தை அறிந்து கொள்வது சாத்தியம் மாத்திரமல்லாமல், சத்தியத்தைக் குறித்த நிச்சயம் உடையவராகவும் இருக்க முடியும் (யோவான் 8:31.32). வேதாகமத்தை எல்லோரும் ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள முடியாது என்று நம்பும் மக்கள் அதிகம் இருக்கிறார்கள். இது மார்க்கப் பிரிவினை கூட்டத்திலிருந்து கட்டவிழ்த்து விடப்படும் கள்ள உபதேசங்களாகும். அப்படி என்றால் ஒரு நாள் மனிதனுக்கு தம்முடைய வார்த்தைகளை வல்லமையாக அறிவிக்க முடியவில்லையா? மனிதனால் புரிந்து கொள்ளும் அளவுக்கு தம்முடைய வார்த்தைகளை மனிதனுக்கு அறிவிக்க தேவனுக்கு போதுமான ஞானம் இல்லையா? தேவன் மனிதனிடமிருந்து தெளிவாக எதை விரும்புகிறாரோ அதை அவனுக்கு அறிவிக்க

தேவனுக்கு ஆசையில்லையா? எல்லோரும் வேதாகமத்தை ஒரே மாதிரியாகப் புரிந்து கொள்ள முடியாது என்று நம்புகிறவர்கள் தேவனுடைய முடிவில்லா பண்புகளை சந்தேகிக்கிறார்கள்.

**மனிதனுடைய ஆரம்பத்தின் மீது போர் தொடுக்கப்படுகிறது.**

முன்பை விட இந்த நாட்களில் பரிணாம வளர்ச்சிக் கொள்கைகள் நம்முடைய பாடத்திட்டங்களில், திடமாக தடம் பதித்து விட்டன. சாத்தான் நம்மை நம்முடைய ஆரம்பத்தின் மீது கை வைத்து விட்டால் அந்தக் கற்பனை உலகில் நம்மைத் தள்ளி தெரிந்து கொள்ளும் உரிமை என்று ஒன்றும் இல்லை, ஒழுக்க ரீதியான காரியங்களுக்கு ஆதாரம் என்று ஒன்றுமில்லை, வாழ்க்கைக்கு அர்த்தம் எதுவும் இல்லை. சரீர மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்க்கை இல்லை போன்றவைகளை எல்லாம் நம்மை நம்பச் செய்து விடுவான். மனித இனத்தின் அடையாளம் மற்றும் வரலாற்றின் மீது போர் தொடுக்கப்படுகிறது.

இயற்கைத்துவம் மற்றும் புத்த மதம் போன்றவைகளால் நம்முடைய உண்மையான ஆரம்பம் திரிக்கப்பட்டாலும் கூட, ஆதியாகமம் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள உண்மையான அடையாளத்தையும், உண்மையான வரலாற்றையும் நாம் புரிந்து கொள்ள சாத்தான் விரும்புவதில்லை. ஆதியாகமம் புத்தகத்தில் மனித இனம் தேவ சாயலில் படைக்கப்பட்டுள்ளது என்று நாம் வாசிக்கிறோம் [ஆதியாகமம் 1:26,27]. அவருடைய சிருஷ்டிப்பின் மகுடமாக நாம் இருக்கிறோம் [சங்கீதம் 8]. தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டிய நாம் எல்லோருமே ஒரு விதமாக பாவம் செய்து அவரிடமிருந்து பிரிந்து போனோம் [ரோமர் 3:23; எபேசியர் 2:1-2]. ஆதாம், ஏவாள் மற்றும் ஆபிரகாம் வம்சவழியில் ரட்சகர் ஒருவர் வந்து பிசாசை மேற்கொண்டு, மனித இனத்திற்கு பாவத்திலிருந்து விடுதலை கொடுக்க வேண்டுமென்பது தேவனுடைய சித்தமாய் இருந்தது. [ஆதியாகமம்3:15; 12:1-3].

ஒழுக்க நெறிகள் மீது போர் தொடுக்கப்படுகிறது. சாத்தான் பொய்க்குப் பிதாவாக இருக்கிறபடியால் அவன் நாம் அவனுடைய பொய்களை நம்பி அதைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறான்[ யோவான்8:44]. தேவனுடைய வார்த்தையின் சத்தியம் உங்களுடைய வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த அவன் விரும்புவதில்லை[ மத்தேயு13:19]. [அ ]புதிய ஏற்பாட்டின் கட்டளைகளுக்கு நாம் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை[ எபிரேயர்8:8-13; ஏசாயா 2:2-4]. [ஆ] கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை, சிறுபிள்ளைகள் மீது மோகம், கெட்ட வார்த்தைகள் குடிப்பழக்கம் மற்றும் பொருள் ஆசை போன்றவைகள் எல்லாம் பாவம் அல்ல [கலாத்தியர்5:19-21; ரோமர்1:18-32]. நாம் இவ்வுலகில் எப்படி நடந்து கொள்கிறோமோ அதற்கு நாம் பொறுப்பல்ல இவைகளுக்கெல்லாம் நாம் யாருக்கும் கணக்கு ஒப்பு விக்க வேண்டிய

அவசியமில்லை [பிரசங்கி 12:13,14; ரோமர் 6:23]. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட விவாகத்தில் ஓர் ஆணும், பெண்ணும் வாழ்க்கை முழுவதும் ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்போடு இருக்க வேண்டிய அவசியமில்லை [ஆதியாகமம் 2:24; மத்தேயு 5:31-32; 19:3-12]. தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமணத்திற்குப் புறம்பே விபச்சாரம்,வேசித்தனம் ,ஓரினச்சேர்க்கை ,சிறு பிள்ளைகளோடு தகாதஉறவு வைத்துக் கொள்ளுதல், மிருகங்களோடு தகாத உறவு கொள்ளுதல் போன்றவைகள் எல்லாம் பாவம் அல்ல போன்ற பொய்களையெல்லாம் சொல்லி நம்மை வஞ்சிக்க முயற்சிப்பான் [வெளிப்படுத்தல் 21:8].

மனித இனம் கடைசியாக சேரும் இடத்தின் மீது போர் தொடுக்கப்படுகிறது. சாத்தான் நம்மிடம் பரலோகம் அல்லது நரகத்தைப்பற்றி சந்தேகத்தை ஏற்படுத்த முயற்சிப்பான். அதிலும் குறிப்பாக, நரகம் என்பது நாம் உணர்வுடன் தண்டனையை அனுபவிக்கும் ஒரு நித்திய இடமாக இருக்காது என்னும் சந்தேகத்தை நமக்குள்ளாக ஏற்படுத்த முயற்சிப்பான் [யூதா 7, மத்தேயு25:41-46;மாற்கு 9:42-48; வெளிப்படுத்தல் 14:9-11].

வேதாகம உபதேசங்களின் மீது போர் தொடுக்கப்படுகிறது. இரட்சிப்பை பெற்றுக் கொள்ள ஆண்களோ அல்லது பெண்களோ எந்த ஒரு குறிப்பிட்ட பங்காற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான்[ 1 தீமோத்தேயு 2:8-15]. அதைப்போல் ஒருவர் இரட்சிப்பை பெற்றுக் கொள்ள தண்ணீர் ஞானஸ்நானம் பெற வேண்டிய அவசியம் இல்லை என்பதை நீங்கள் நம்ப வேண்டும் என்றும் சாத்தான் விரும்புகிறான்[ அப்போஸ்தலர்2:38; மாற்கு 16:16;1 பேதுரு 3:20,21]. நாம் யாருடைய அதிகாரத்தின் கீழும் எதையும் செய்ய வேண்டிய அவசியமில்லாதபடியால் புதிய உடன்படிக்கையில் எதை விரும்புகிறோமோ அதைச் செய்ய முடியும் [கொலோசெயர் 3:17]. நம்மால் இன்னும் சில காரியங்களைக் கூட பட்டியலிட முடியும். ஆனால் சாத்தான் நம்முடைய மனதை கேடாக்கத் தொடர்ந்து போர் செய்து கொண்டிருக்கிறான். சாத்தான் வேதாகமத்தில் தெளிவாக போதிக்கப்பட்டிருக்கும் சில குறிப்பிட்ட உபதேசங்களை நாம் விட்டுவிட வேண்டுமென்று விரும்புகிறான்.

**சமாதானக்கொடி**

அவருடைய வம்சாவளி [ஏசாயா 11:1]. 'ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்'[ஏசாயா 11:1]. தேவனுடைய சிருஷ்டிப்பின் பின் பல பகுதிகளை குறி வைத்த சாத்தான் தேவனுக்கு விரோதமாகப் போரிட மனித இனத்தை தூண்டி விடுவதில் உண்மையாகவே வெற்றி கண்டிருக்கிறான். நாம் சுயநலவாதிகளாக இருக்கவும், தேவனோடு போர் செய்யவும், நமக்குள்ளேயே போரிடவும் நம்மை நாம்

அனுமதித்திருக்கிறோம். இத்தகைய சூழ்நிலையில் நாம் தேவனோடு சமாதானமாய் இருக்க முடியுமா, ஒருவரோடு ஒருவர் சமாதானமாய் இருக்க முடியுமா நமக்குள்ளேயே நாம் சமாதானமாய் இருக்க முடியுமா? இந்த இக்கட்டான சூழ்நிலைக்கு தீர்வு தான் என்ன? இதற்கான தீர்வு தேவனிடத்தில் தாமே காணப்படுகிறது. அதாவது, தாவீதின் வம்சத்தில் மனித சாயலில் பிறந்த தேவனிடத்தில் தான் இதற்கான தீர்வு உள்ளது [மத்தேயு 1:1]. தேவனாகிய இயேசு கிறிஸ்து மனிதனால் உருவாகவில்லை. மாறாக பரிசுத்த ஆவியினால் உருவானார் [மத்தேயு 1:20].

அவர் நம்முடைய பாவங்களுக்காக அந்தக் கோரச்சிலுவையில் தம்முடைய ஜீவனை விட்டார். அவருடைய அபிஷேகம் ஞானத்தையும், உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார் [ஏசாயா 11:2]. இயேசு மேசியாவாக தெரிந்து கொள்ளப்பட்டார். மேசியா என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். இயேசு தன்னுடைய ஞானஸ்நானத்தின் போது பரிசுத்த ஆவியானவராலே வலிமைப்படுத்தப்பட்டார் [மத்தேயு 3:13-17; அப்போஸ்தலர் 10:38].

**அவருடைய நிர்வாகம் (ஏசாயா 11:3-5).**

கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு சுகந்த வாசனையாயிருக்கும். அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச்செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.

நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும் [ஏசாயா 11:3-5]. இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்படி இவ்வுலகத்திலிருந்து பரமேறினபோது அவருடைய கரங்களில் தேவனுடைய ஆளுகையும், எல்லா அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டது [எபிரேயர் 1:1-4; மத்தேயு 28:18-20;மாற்கு 16:17-20]. இயேசு நீதி,உள்ளவராய் இருக்கிறபடியால் அவரே மிகச் சிறந்த ராஜாவாக இருந்து எல்லோரையும் சமமாக நடத்துகிறார். அவருடைய ஆளுகை அல்லது நிர்வாகம் மிகச் சிறந்ததாய் இருக்கிறபடியால் நம்முடைய ஜீவியங்களில் அதை வெளிப்படுத்த ஆசைப்பட வேண்டும். அவர் மெய்யான சமாதானத்தை நம்முடைய வாழ்வில் கொண்டு வருகிறபடியால் நாம் தேவனோடும், அயலகத்தாரோடும், நமக்குள்ளும் சமாதானமாய் இருக்க முடியும்.

அவருடைய செயல்பாடுகள் ஏசாயா 11:6-16,10-11:10 அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின்

வேருக்காக ஜாதிகள் விசாரித்துக் கேட்பார்கள், அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும். அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம்விசை தமது கரத்தை நீட்டி.. (ஏசாயா 11:10,11).

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்து தம்முடைய பணியை நிறைவேற்றின போது சாத்தானுக்கும், அவனுடைய தீய சக்திகளுக்கும் அழிவு நாள் குறிக்கப்பட்டுவிட்டது. ஏனென்றால், தீமையினால் சீர்கெட்டு போயிருந்த உலகில் இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடைய நீதியின் ஆளுகை ஆதிக்கம் செலுத்தியது. நம் ஆண்டவராகிய கிறிஸ்து ஜீவன் தரும் அவருடைய சமூகத்தில் வாசம் செய்வதற்கான வாய்ப்பை பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை மீட்டதன் மூலமாக வழங்கினார் (யோவான் 10:10). நாம் சுவிசேஷத்தின் மூலமாக மீண்டுமாக தேவனோடு சரியான உறவு வைத்துக் கொள்வதற்கு அழைக்கப்பட்டிருக் கிறபடியால் நமக்கும், தேவனுக்கும் இடையேயான பகை உணர்வு முடிவுக்கு வந்திருக்கிறது. உண்மை உள்ள கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட்டிருந்தாலும் கூட எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை நம்மால் அனுபவிக்க முடியும் ( பிலிப்பியர் 4:7).

**முடிவுரை**

சாத்தான் தோற்கும் பக்கத்தில் இருக்கிறான். அவனுக்காக வைக்கப்பட்டிருக்கும் இடம் நித்திய நரகமாகும் (மத்தேயு 25:41). பிசாசு தன்னுடைய வல்லமையையும், அதிகாரத்தையும் பயன்படுத்தி மனிதர்களை தன்னுடைய பக்கத்தில் வரும்படி வஞ்சித்துக் கொண்டிருக்கிறான். இந்த முயற்சியை பிசாசு அவ்வளவு எளிதாக கைவிடப் போவதில்லை.

ஆனால், இயேசு கிறிஸ்து கொடியைப் பிடித்துக் கொண்டு உண்மையுள்ள கிறிஸ்தவ போர்ச்சேவகர்கள் அவர்கள் அந்தக் கொடியைச் சுற்றிலும் நின்று பிசாசுக்கு எதிராக போர் தொடுக்க வேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறார். இயேசு கிறிஸ்து எல்லோரும் அவருடைய சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டுமென்று என்று விரும்புகிறார் (ரோமர் 1:16). நாம் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்தக்கதாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ள வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார் (எபேசியர்6:10-18). இயேசு ஜெயித்துக் கொண்டிருக்கிறார்! நாம் விசுவாசத்தில் நல்ல போராட்டத்தை போராடுவோம்(2 தீமோத்தேயு 4:6-8). நம் இயேசு கிறிஸ்து திரும்பி வந்து போர் முடிவுக்கு வரும் அந்த வெற்றி தினத்திற்காக நாம் எதிர் நோக்குவோமாக . அதன் பிறகு நாம் எல்லோரும் நம் கர்த்தரோடு அந்த நித்திய சமாதானமான வீட்டிற்குள் போக முடியும்.

# முயற்சியின் சிகரம்

## The Summit of Effort

*E.Z. Selvanayagam*

ஒரு காலத்தில் தரம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கும் ரொம்ப மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால், இப்பொழுது எப்படிக் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பது, மார்க்கெட் பிடிப்பது என்பதில் மக்கள் அதிகக் குறியாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலர் தான் தரம் ஒழுக்கம், நீதி, நேர்மை என்றெல்லாம் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.

இந்த மனோநிலை மார்க்கத்தையும் விட்டு வைக்கவில்லை. எதிலும் விளம்பர மோகம், பேர், புகழ், மனிதர்கள் பாராட்டினால் போதும் கடவுள் என்ன நினைக்கிறார் என்பது பற்றிக் கவலையில்லை என்கிற எண்ணம் வளர்ந்து பெருகி வருகிறதைப் பார்க்கிறோம். இந்த இழிநிலை வருந்தத்தக்கது; தீமை பயப்பது, வெறுக்கத்தக்கது, இதைக் குறித்துக் கிறிஸ்தவ மக்கள், சான்றோர்கள் அதிக ஆழமாகச் சிந்தித்து இவை வளராமல் தடுக்க முற்பட வேண்டும்.

நல்ல இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வேதாகமம் குறிப்பாகப் புதிய ஏற்பாடு, வாழ்க்கைக்குத் தேவையான மற்றெல்லா விஷயங்களுக்கும் ஆலோசனைகள் நல்கி அறிவுரை வழங்குவதைப் போலவே இந்த விஷயத்துக்கும் நமக்கு வழிகாட்டுகிறது. நமக்கெல்லாம் நன்கு அறிமுகமாயிருக்கிற பவுல் அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் எவ்வாறு இந்த உன்னத மாண்பு இடம் பெற்றிருந்தது என்று கவனிப்போம்.

அவர் யூத மார்க்கத்தில் இருந்தபொழுது என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும், யூத மார்க்கத்தில் தேறினவனாய் என் பிதாக்களுடைய பாரம்பரிய, நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவனாக இருந்தேன் (கலா 1:14) என்கிறார். பின்னர் கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு அப்போஸ்தலனாக மாறின பிறகு அதே வைராக்கியத்தைக் கிறிஸ்துவின் பணியிலும் தொடர்ந்து காட்டி தனக்கு முன்பிருந்த அப்போஸ்தலர்களையெல்லாம் மிஞ்சி நிற்கிறார்.. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது என்று அவருடைய ஊழியத்தின் பிரயாசைகளைப் பற்றியும் (1 கொரி. 15:10) அவர்கள்மேல் வைத்த அன்பின் மிகுதியைப் பற்றியும் (II கொரி 2:4) சபைகளுக்காக பாடுபட்டதைப் பற்றியும் (II கொரி. 11:23-28). அவருடைய எழுத்துக்கள் முயற்சியின் சிகரத்தைச் சுட்டுவதாகவே

இருப்பதைக் கவனித்துப் பாருங்கள். இவைகளைச் சொல்லி அவர் பெருமைபட்டுக் கொள்ளாமல் நாமும் கூட செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் நம்மால் இயன்ற மட்டும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று உற்சாகமூட்டுவதற்காக எழுதுகிறார் என்று கொள்ள வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த முயற்சியின் சிகரம் என்னும் உன்னத நிலையை அடைவது பற்றி இன்னும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசுகிறார். உரோமாபுரியிலுள்ள திருச்சபை நம்பிக்கையில் பெருக வேண்டும் என்று ஜெபிக்கிறார் [ரோமர். 15:13] கொரிந்து பட்டணத்துத் திருச்சபைக்கு மற்ற விஷயங்களில் தேறியிருக்கிறது போல தர்ம காரியத்திலும் பெருக வேண் டும் என்று அறிவுறுத்துகிறார். [II கொரி 8:7] உங்கள் அன்பானது.

> இயேசு கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுபவர்கள், மாந்தர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், சிறந்த பண்புகள் எல்லாவற்றைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருங்கள் என்று புத்திமதி கூறுகிறார் [பிலி. 1:9, 4:8]. கொலோசே பட்டணத்துத் திருச்சபை விசுவாசத்திலே உறுதிப்பட்டு ஸ்தோத்திரத் தோடே அதில் பெருகுவீர்களாக என்கிறார் [கொலோ 2:7] மேலும், தெசலோனிக்கே திருச்சபைக்கு இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும். நற்காரியங்களில் தேறவேண்டும் என்றும் சகோதர அன்பில் பெருக வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார் [தெச. 4:1,10]

இப்படி ஏறக்குறைய நாம் அறிந்த மக்கள் யாவரும் முயற்சியின் சிகரத்தை எட்டவேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலன் மட்டுமே வலியுறுத்துகிறார் என்று எண்ணி ஒதுக்கி விடக்கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த உன்னதநிலை அடைவதைப்பற்றி மௌனமாயிருக்கவில்லை. உங்கள் நீதி வேதபாரகர், பரிசேயர் நீதியைக்காட்டிலும் அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்றும் ஆலோசனை கூறுகிறார். [மத் 5:20,48] ஆக, இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள் மாந்தர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதைப் பின்பற்றி பவுல் அப்போஸ்தலனும் எதிர்பார்க்கிறார். அப்படியானால் நாம் அதை அசட்டை செய்யக்கூடாது.

இவ்வாறாக நாம் முயற்சியின் உச்சநிலையை அடைய வேண்டும் என்று செயல்படும் போது ஏற்படும் விளைவுகள் யாவை? நாம் செய்கின்ற பணியில் சில உடனடி மாற்றங்கள் தென்படும். தம்முடைய பணிகள் நேர்த்தியாகவும், சரியாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணுவோம். அன்றன்றுள்ள பணிகளை அன்றன்று செய்து முடிக்கப்

பிரயாசப்படுவோம். நாம் நம்முடைய காரியங்களை ஒழுங்காகவும், பாங்காகவும் செய்ய முற்படும்பொழுது தேவன் கூட மகிமைப்படுகிறார். ஆகையால், நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள் என்றும் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள் என்றும்... எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக என்றும் வாசிக்கிறோம் (1கொரி. 10:31, கொலோ 3:17, 1 பேதுரு 4:11).

நம்மால் அதிகமாகச் செய்ய முடிந்தும் குறைவாகச் செய்து விட்டு திருப்தியடைந்தவர்களாய்க் காணப்பட்டால்; நாம் யாருக்காகப் பணி செய்கிறோமோ அவரை நாம் மதிக்கவில்லை அல்லது அவரில் அன்புகூரவில்லை என்று நம்மைக் கவனிக்கிற மக்க ளுக்கு தெரியாமற்போகாது. நாம் யாருக்காகப் பணிபுரிகிறோமோ அவரின் எண்ணங்கள், சிந்தனைகளை, கொள்கைகளை நாம் உண்மையாகவே மதிக்கிறவர்களாயிருந்தால் நாம் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்ய முயற்சிப்போம்

நாம் முயற்சியின் உச்சிக்கு ஏறிப்போக வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படும்போது சில சங்கடமான உண்மைகள் நமக்குத் தெரியவரும். நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாக இருக்கிறோம். தவறு செய்கிறவர்களாக இருக்கிறோம் என்பதும், நாம் நினைக்கிறபடி நாம் ஒன்றும் அவ்வளவு சிறந்தவர்களல்ல என்கிற உண்மையும் தெளிவாகத் தெரியவரும். இந்த இடத்தில் நம்மால் முடிந்த அளவு, என்பது பரிபூரணத்தைக் குறிக்காது என்பதை நினைவில் கொள்க: எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக என்றே பொருள்படும். ஒருவேளை நம்மால் முடிந்த அளவு சிறந்தது என்பது பரிபூரணத்தை விட மிக மிகக் குறைவாகக் கூட இருக்கலாம். ஆனால், அது ஆண்டவருக்குப் பிரிய மானது. நம்மால் இயன்றதை வஞ்சகம் இல்லாமல் செய்து விட்டோம். அதுதான் தேவன் விரும்புவது, ஏழை விதவை போட்ட காணிக்கையை இயேசு பாராட்டினதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு பைசா என்பது செல்வந்தர்கள் போட்ட காணிக்கைகளை விட அதிகம் என்பதனால் அல்ல; தனக்கு இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள் என்பதே பாராட்டப்படுவது (மாற்கு 12:42-44)

ஒரு காரியத்தை நினைவில் வையுங்கள். உங்கள் முயற்சியின் சிகரத்தை எட்ட நீங்கள் பாடுபடும் பொழுது உங்கள் திறமையின் தரம் நாளுக்குநாள் பட்டை தீட்டப்பட்ட வைரம் போல் பிரகாசம் அடைகிறது. உங்கள் ஆர்வம் புதிய புதிய எண்ணங்களைத் தோற்றுவித்து புதிய புதிய கோணங்களில் காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

இப்படி நீங்கள் முயற்சியின் உச்சியை அடையப் பாடு படுகிற போது சில எதிர்மறை விளைவுகளும் உண்டாகலாம். மேலும், மேலும் நீங்கள் உற்சாகமடையும்போது ஏற்படுகிற வேலைப்பளு அந்தவிதமான சிந்தை இல்லாத உங்கள் உடன் வேலையாட்களுக்கு தொய்வைக் கொடுக்கலாம். அவர்கள் தாங்கள் அடைந்த சாதனை போதும் என்று மெத்தனமாக இருப்பார்கள். அதனால் சில வேளைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றி மெல்ல வாக்குவாதத்துக்கும், சச்சரவுக்கும் கூட இழுத்துச் சென்றுவிடும். பிரிந்து செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் கூட உருவாகலாம் [அப்: 14:39] அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்து போய் போதிய ஆதரவு இல்லையே என்று அவர்களுடைய இழுப்புக்கு உடன்பட்டு உங்கள் முயற்சியைத் தளர விட்டு விடாதீர்கள். பொறுமையாய் இருங்கள்; தைரியம் இழக்காமல் தனிமையாகவே செயல்படுங்கள். மற்றவர்களுக்கு முன் மாதிரியாகச் செயல்படுங்கள். வேதாகமத்தை எடுத்து குணக்குன்று களாகத் திகழ்ந்த சான்றோர்கள் விசுவாசிகள் ஆகியவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள். ஒருவேளை அது உடனடியாகப் பலன் தராமல் போகலாம். சிறுகச் சிறுக அது மற்றவர்களையும் ஆட்கொள்ளும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

சபையில் செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்துமே விருப்பப்பட்டு செய்யப்படும் தன்னார்வப் பணிகளே சில பேர் இப்படி அப்படி போக்குக் காட்டி விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். இந்தப் பணிகளுக்கு கண்காணிகளும் மேஸ்திரிகளும், கிடையாது குறைவாகச் செய்கிறவர் களுக்கோ மோசமாகச் செய்கிறவர்களுக்கோ தண்டனை ஏதும் கொடுப்பாரில்லை. சம்பளப் பிடித்தம் கிடையாது. ஆனால், தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் யாருக்கு எத்தனை தாலந்துகள் கொடுத்தோம் என்பதை மறந்து விடமாட்டார்.

ஆகவே, சகோதரர்களே! தாய்குலமே! மனுஷர் பார்க்க வேண்டும் என்று பார்வைக்கு ஊழியம் செய்யாமலும் கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்படுவான் என்பன போன்ற அறிவுரைகளையும் எச்சரிப்புகளையும் மனதில் கொண்டு உங்களால் முடிந்த அளவு நம்முடைய வாழ்க்கையில் நற்பண்புகளைப் பெருக்கி தேவனுக்குப் பிரியமாய் நடக்க முயலுவோமாக! ✝

---

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:18). சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்பவர்களை அதை நிராகரிக்கவர்கள் பரிகாசம் செய்யும் போது நாம் ஒருபோதும் ஆச்சரியப்படக்கூடாது. நாத்திகர்களும், மதச்சார்பற்றவர்களும் எவ்வளவு தைரியமடைகிறார்களோ அவ்வளவு மோசமாக கேலியும் கிண்டலும் இருக்கும்.

# விரிவான வாசல் இடுக்கமான வாசல்

## Broad Gate, Narrow Gate

*பென்னி மார்டின்*

***வா***ழ்க்கை என்பது தீர்மானங்களால் நிறைந்திருக்கிறது. ஒவ்வொருவரும் செய்யவும், செய்யாமலிருக்கவும் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. வாழ்க்கையில் நாம் எடுக்கும் தீர்மானங்களே நம் வெற்றி அல்லது தோல்வியைத் தீர்மானிக்கின்றன. முன்யோசனையின்றி, முட்டாள்த்தனமாக நாம் எடுக்கும் சில முடிவுகள் முடிவேயில்லாத துயரத்திற்குள் நம்மைத் தள்ளிவிடுகின்றன. எங்கே போகலாம் எங்கே போகக்கூடாது என்றும், யாரிடம் பழகலாம் பழகக்கூடாது என்றும் வாழ்க்கையில் வழக்கமாக சில தீர்மானங்களை எடுக்கிறோம். நம் ஆண்டவராகிய இயேசு வாழ்க்கையில் நாம் தீர்க்கமாக எடுக்க வேண்டிய தீர்மானங்களைக் குறித்து, நாம் மலைத்து நிற்கும் மலைப் பிரசங்கத்தில் விவரமாக விவரித் திருக்கிறார். அதிலும் குறிப்பாக மத்தேயு7:13,14 வசனங்களில் அவர் சொல்லியிருக்கிற காரியங்களை யார்தான் மறுக்கமுடியும், மறக்க முடியும்? **இடுக்கமான வாசல் வழியாய் உட் பிரவேசியுங்கள் கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்; ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்.** உதாரணமாக, இரு சாலைகள் பிரிகின்ற ஓர் இடத்தில் நீங்கள் நிற்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு சாலை குண்டும் குழியுமாக கரடுமுடாக காட்சி அளிக்கிறது. இன்னொரு சாலை நேராகவும், அழகாகவும் காட்சி அளிக்கிறது. அது பயணிப்பதற்கு பக்குவமாகத் தெரிகிறது. நீங்கள் எந்த பாதையில் பயணம் செய்ய விரும்புவீர்கள்? பலர் இந்த இரண்டாவது வகை சாலையில் பயணிக்கவே விரும்புவார்கள்.

மேற்கண்ட உதாரணத்தை ஆவிக்குரியப் பிரகாரமாக பொருத்திப்பார்போம். நாம் எல்லோருமே ஆவிக்குரிய பயணத்தை மேற்கொண்டுள்ளோம். உலகத்தோடு ஒத்துப்போய் அவர்கள் செய்கின்ற காரியங்களை நாமும் செய்துவிட்டால் அந்த விசாலமான பாதையில் பயணிப்பது எளிதே. அப்பாதையில் ஒருவர் பயணிக்கும்போது எவ்வித தியாகத்தையும் செய்ய வேண்டியதில்லை. அதே நேரத்தில், இடுக்கமான வாசல் வழியாய் பயணிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால், அதில் பயணிக்கவோ அதைக் கவனிக்கவோ பெரும்பாலானவர்கள் விரும்புவதில்லை. மத்தேயு 7:13,14 வசனங்களில் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து **இரண்டு**

**வகையான வழிகளையும், இரண்டு வகையான மக்களையும், இரண்டு வகையான இடங்களையும்** பற்றி பேசுகிறார். அவைகளை நாம் சற்று விரிவாக இப்போது பார்ப்போம்.

### I. விரிவான வாசல்

உலகிலுள்ள பெரும்பாலான மக்களுக்கு இவ்வாசலில் செல்லத்தான் ஆசை. இவ்வாசலில் பயணிக்க எதையும் பணயம் வைக்கத் தேவையில்லை. எந்த வியூகமும் எந்த தியாகமும் தேவையில்லை. அதுமட்டுமல்லாமல், இவ்வாசலில் எவ்விதக் கட்டுப்பாடும் உல்லாசத்திற்கான தட்டுப்பாடும் இல்லாத காரணத்தால் இங்கு தங்கு தடையின்றி மக்கள் வெள்ளம் புரண்டோடும். மனித வரலாற்றின் சுவடுகளைப் புரட்டிப்பார்த்தால் மனித இனத்துக்கு இந்த விரிவான வாசல் மீது ஓர் இனம் புரியாத ஆசை இருந்து வந்திருக்கிறது. நாம் வேதாகமத்தில் பார்க்கும் போது கூட இஸ்ரவேல் ஜனங்களுடைய வாழ்க்கை முறை விரிவான வாசலில் தறிகெட்டுத் திரியும் வாழ்க்கை முறையாகவே இருந்திருக்கிறது. அதன் காரணமாகவே அவர்கள் தேவ கோபாக்கினைக்கு ஆளாகி அழிக்கப்பட்டார்கள். இன்று கூட பலர் கிறிஸ்துவத்தை தழுவாமல் இருப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களுள் ஒன்று, கிறிஸ்துவத்திற்குள் வந்தால் நீங்கள், அதை செய்யக் கூடாது, இதை செய்யக் கூடாது என்று தடைகளை விதிக்கிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். அதையும் மீறி நீங்கள் இப்படியே வாழ்ந்தால் பரலோகம் எனும் சொர்க்கத்தை இழந்துவிடுவீர்கள் என்று சொன்னால், சுதந்திரமில்லாமல் சொர்க்கமே கிடைத்தும் என்ன பயன்? என்று நம்மைப் பார்த்து கேட்கிறார்கள்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, கேட்டுக்குப் போகிற வாசல் விரிவாகவும் விஸ்தாரமாகவும்தான் இருக்கும். அது மட்டு மல்லாமல் பலர் உலகத்தின் பெரும்பாலான மக்கள் ஒன்றைத் தெரிந்து கொண்டால், பின்பற்றினால் அது சரியானதாகத்தான் இருக்கும், சிறந்ததாகத்தான் இருக்கும் எனும் மனப்பான்மையை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லாக் காலத்திலேயுமே பின்பற்றுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள், ஜீவனுள்ள தேவனை உண்மையைப் பின்பற்று கிறவர்கள் குறைவாகத்தான் இருக்கிறார்கள் இதன் பொருள் தேவன் சிறந்தவரல்ல என்றாகி விடுமோ? நிச்சயமாக இல்லை.

### II. இடுக்கமான வாசல்

இந்த வாசல் ஜீவனுக்குப் போகிற வழிக்கு ஆரம்பமாயிருக்கிறது. ஆனால், ஏன் இந்த வாசல் இடுக்கமாயிருக்கிறது? ஏனென்றால், இதில் ஒருவர் பிரவேசிக்க தன்னை வெறுத்தலும், கீழ்படிதலும் அவசியமாயிருக்கிறது (மத்தேயு 16:24). இவ்வுலகில் பெரும்பாலான

மக்கள் இந்த இடுக்கமான வாசல் வழியாகப் பயணிக்க விரும்புவதில்லை. ஏனென்றால், இதில் பயணிக்க நீதியாக நேர்மையாக வாழ வேண்டியது அவசியமாயிருக்கிறது [அப்போஸ்தலர் 10:35]. தொன்று தொட்டு நாம் பார்க்கும்போது மக்கள் அநீதியாகவே வாழ்ந்து பழகியிருக்கிறபடியால் இந்த நெருக்கமான பாதையில் பயணிப்பதற்கு அவர்களுக்கு கசக்கிறது. மேலும், அவர்கள் இப்பாதையில் பயணிப்பவர்களைப் பார்த்து குறுகிய மனப்பான்மை உடையவர்களென்றும், ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள்ளேயே முடங்கிக்கிடப்பவர்களென்றும் குறை கூறுகிறார்கள். ஆனால், இந்த இடுக்கமான வாசல் நம்மை நேராகப் பரலோக வாசலுக்கு அழைத்துச் செல்கிறது என்பதை அவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். மேலும், மத்தேயு 9:14ல், இயேசு கிறிஸ்து இந்த வழியைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர் என்று சொல்கிறார். கடந்தகாலச் சம்பவங்களை நாம் வேதாகமத்தின் பக்கங்களில் புரட்டிப்பார்த்தால், நோவாவின் நாட்களில் அந்த ஜலப்பிராயத்தின் போது நோவா மற்றும் அவருடைய குடும்பத்தார் உட்பட எட்டுபேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டார்கள். லட்சகணக்கான மக்கள் நோவாவின் பிரசங்கத்திற்கு செவி மடுக்க மறுத்து மடிந்துபோனார்கள்! வனாந்திர யாத்திரையில் சுமார் ஆறு லட்சம் பேர் பயணம் செய்திருந்தாலும் கூட, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானான் தேசத்தில் யோசுவா, காலேப் ஆகிய இரண்டுபேர் மாத்திமே பிரவேசித்தார்கள்.

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே! மேற்சொல்லப்பட்ட காரியங்களை வைத்துப் பார்த்தால் ஆவிக்குரிய பயணத்தில் நாம் எந்த நிலையில் இருக்கிறோம் என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம். கேட்டுக்குப் போகிற விரிவான வழியில் பயணிக்கிறோமா? தீமையை அல்லது நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் இடுக்கமான வழியில் பயணிக்கிறோமா? வானவராம் இயேசுவை வாழ் வாதாரமாகக் கொண்டு வாழும் நாம் துன்மார்க்கருடைய ஆலோசனையின் படி நடக்கக்கூடாது என்றும், பாவிகளுடைய வழியில் நிற்கக்கூடாதென்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறோம் [சங்கீதம் 1:1]. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் பணம், பதவி, புகழ் போன்றவைகளை நாடி விரிவான விசாலமான வழியில் பயணிக்கிறார்கள். நீதி, நியாயம், நேர்மை போன்றவைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, மனம்போன போக்கில் போய் வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆனால், இந்த உலகமும் உலகத்தில் உள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்து போகும்.

அந்த இடுக்கமான பாதையில் இயேசுவை நோக்கி பயணிக்கும் போது இடையில் தோன்றும் தடைக்கற்களையெல்லாம் வெற்றிப்படிகளாக மாற்ற அவரால் முடியும். நம்மைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவாலே எல்லாவற்றையுஞ் செய்ய நமக்கு பெலனுண்டு [பிலிப்பியர் 4:13].

இவ்வுலக வாழ்க்கையானது கொஞ்ச காலந்தான். இங்கே நாம் அதிக நாட்கள் வாழும் படியாக நம் சரீரம் வடிவமைக்கப்படவில்லை. நாமும் பாடுகள் நிறைந்த இப்பாழாய்ப் போன உலகில் அதிக நாட்கள் வாழ விரும்பவில்லை. நம் ஜீவன் கொஞ்ச காலந்தோன்றிப் பின்பு தோன்றா மற் போகிற புகையைப் போலிருக்கிறது என்று யாக்கோபு சொல்கிறார். இப்படி நாம் வாழும் இந்த கொஞ்ச நாட்களில் இந்த இடுக்கமான அல்லது நெருக்கமான வழியில் பயணித்து தேவனோடு நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொள்வோம். அதற்கு தேவன் தாமே உதவிசெய் வாராக! ஆமென்.

✝

## இதயத்திலிருந்து வரும் இசை தேவனுக்கு இனியப்பாடலாயிருக்கிறது.

*அப்போஸ்தலர் 16: 25: நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி தேவனைத் துதித்துப்பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 16:25).*

*1 கொரிந்தியர் 14:15 இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம்பண்ணுவேன் கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன். நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன்.*

*யாக்கோபு 5:13 உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன். ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.*

*எபேசியர் 5:19 'சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி.*

*கொலோசெயர் 3:16 கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக, சங்கீதங்களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பக்தியுடன் பாடி.*

*எபிரேயர் 13:15. ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்.*

# கர்த்தருக்காக காத்திருங்கள்!

## Wait For The Lord

### P.C. பிலேமோன் ராஜா

**காத்திருத்தல்** என்பது மனித வாழ்வில் கலந்த ஒன்றாக இருந்தாலும், இந்த அவசரமான உலகத்திலே எல்லாமே மிகவும் அவசரமாகிவிட்ட படியினாலே, காத்திருத்தல் என்பதே மனிதனுக்கு கவலைக் குரியதாக மாறிவிட்டது. வேக தடையில் கூட வேகமாக செல்லும் அளவிற்கு, எங்கும் அவசரம், எதிலும் அவசரம். ஆறு மாத சாகுபடி, மூன்று மாத சாகுபடியாக மாறிவிட்டது. உண்ணும் உணவகங்களில் கூட துரித உணவகங்களே (Fast Food & Drive Inn) அதிகமாக பெருகிவிட்டது. மனிதன், அவசர அவசரமாக பிறந்து, சாப்பிட்டு, வளர்ந்து, பயணித்து சென்றும் விடுகின்றான்.

நிதானம், பொறுமை மற்றும் காத்திருத்தல் எல்லாம் அறிவிலித்தனமாகவும், எல்லாவற்றையும் வேகமாக செய்வது என்பது அறிவாளித்தனமாகவும் ஒரு மாயை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதினால் எந்த வேலையையும் சோம்பலாக, அஜாக்கிரதையாக செய்யுங்கள் என சொல்லவில்லை; அவ்வாறு பைபிளும் நம்மை ஊக்கப்படுத்தவில்லை. அதே வேளையில், நிதானத்துடன் பொறுமையாக காத்திருக்க வேண்டிய காரியங்களுக்கு நம்மை காத்திருக்க சொல்லுகின்றது. அவைகளில் பிரதானமானது கர்த்தருக்காக காத்திருத்தல் ஆகும். சங்கீதம் 27:14 **கர்த்தருக்குக் காத்திரு: அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திடமனதாயிருந்து, கார்த்தருக்கே காத்திரு.** ஆகையால், கர்த்தருக்கு காத்திருத்தலைப் பற்றி சற்று ஆழமாகவே படிப்போம்.

**கர்த்தருக்காக காத்திருந்தவர்கள்**

பைபிளில், பரிசுத்த காரியங்களுக்காக காத்திருந்தவர்கள் பட்டியல் மிகவும் நீண்டதாகும். சிமியோன் பாவிகளை மீட்கும்படியாக வந்த இரட்சணியமாக ஆண்டவர் இயேசுவை கைகளில் ஏந்தும்படி காத்திருந்தார் (லூக்கா 2:25), அப்போஸ்தலர்கள் பிதாவின் வாக்குத்தத்தம் பெற எருசலேமில் காத்திருந்தனர் (அப் 1:5–2:5)

அரிமத்திய ஊரானாகிய யோசேப்பு, தேவனுடைய ராஜ்ஜியம் வர காத்திருந்தார் (லூக்கா 23:50,52) விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாம், தேவன் தாமே கட்டி உண்டாக்கின் அஸ்பாரங்களுள்ள நகரத்திற்காக காத்திருந்தார் (எபி 11:10), முதலாம் நூற்றாண்டு சபையார் புதிய வானம் புதிய பூமி உண்டாக காத்திருந்தனர். 2 பேதுரு 3:12–14

மேலும், நாமும் கூட அப்போஸதலனாகிய பவுல் மற்றும் பிலிப்பிய சபையார் போல, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக காத்திருக்கின்றோம் [பிலிப்பியர் 3:20] **நம்முடைய குடியிருப்போ பரலோகத்திருக்கிறது. அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.**

**கர்த்தருக்காக காத்திருந்தலின் காலம்**

காத்திருத்தலின் காலம் என்பது மிகவும் கடினமானதாகவும், நம்மை சோர்வடைய செய்வதாகவும் இருக்கலாம். காத்திருக்கின்ற போது இருதயம் இளைத்துபோகலாம் [நீதிமொழி 13:12] அது மிகவும் வலி மிகுந்ததாகவும் இருக்கலாம் [ எரே 20:10].

ஒன்றை கவனிக்க தவற வேண்டாம். வலியை வெளிப்படுத்துகின்ற வேளையில் நம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்றார் [சங் 69:33], 25 ஆண்டுகள் காத்திருத்தல் கடினமாக இருந்தாலும், சோர்ந்து போகாமல் கர்த்தர் சொன்னதை நிறைவேற்றுவார் என்ற விசுவாசத்துடனே ஆபிரகாம் காத்திருந்தார் என்பதனை நினைவில்கொள்வோம். ரோமர் 4:17-21 அநேக ஜாதிகளுக்கு உன்ன தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேமவனுக்கு முன்பாக நம்மெல்லாரும் தகப்பனானான். உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும் அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும் சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

**கர்த்தருக்காக காத்திருத்தலின் பலன்**

காத்திருத்தலின் காலம் என்பது கடினமானதாக இருந்தாலும், கர்த்தரை நம்பி காத்திருப்பதோ, கர்த்தருக்காக காத்திருப்பதோ ஒரு நாளும் வீணாய் போகாது. அது மிகுதியான பலனை கொண்டு வந்தே தீரும் என்பதனை பைபிளிலிருந்து உதாரணங்கள் மூலமாகவும், நம் வாழ்வின் அனுபவங்கள் மூலமாகவும், நாம் திட்டமாக அறிந்திருக்கின்றோம்.

ஏசாயா 30:18 **ஆனாலும் உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார். உங்கள்மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார் ; கர்த்தர் நீதிசெய்கிற தேவன் ; அவருக்குக்காத்திருக்கிற அனைவரும் பாக்கியவான்கள்.**

நான் காத்திருக்கின்ற கர்த்தர் சகலத்தினையும் படைத்தவர் என்று எரேமியா சொல்கின்றார் [எரே 14:22]. கர்த்தருக்கு காத்திருப்பதையே நான் எப்போதும் தெரிந்துகொள்வேன் என்று சங்கீதக்காரன் தெரிவிக்கின்றார் [சங்கீதம் 84:10]. ஏன் ? எனெனில், கர்த்தருக்காக காத்திருப்பவர்களின் ஜெபங்கள் கேட்கப்படும் [சங்கீதம் 37:15; 40:1: மீகா 7:7], காத்திருப்பவர்களுக்கு அடைக்கலம் கிடைக்கும் [சங்கீதம் 59:9], காத்திருப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் [ஏசாயா 25:9], காத்திருக்கிறவர்கள் புதுபெலன் அடைவார்கள். அது நீதி மற்றும் மகிழ்வை தரும் [ஏசாயா 30:18]. கர்த்தருக்கு காத்திருத்தல் நம்மை வெட்கப்படுத்தாது ஏசாயா 49:23 ராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள்; தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள்; நான் கர்த்தர், எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்.

**கர்த்தருக்காக காத்திருத்தல் என்பது...**

கர்த்தருக்கு காத்திருத்தல் என்பது என்ன? கர்த்தருக்கு எவ்வாறு காத்திருக்க வேண்டும்? முதலாவதாக, கர்த்தருக்கு காத்திருத்தல் என்பது அவர் சமூகத்தில் தரித்திருப்பதாகும். சங்கீதம் 5:3 **கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருளுவீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன்.**

கர்த்தருடைய சமூகத்தில் தரித்திருப்பது, முன்பை விட காத்திருக்கின்ற நேரங்களில் அதிகமாக ஜெபியுங்கள். சபை கூடிவருகின்ற எதனையும் தவறவிட்டுவிட வேண்டாம். சோர்வின்றி ஜெபிப்போம் [லூக்கா 18:1]. அவர் பிரசன்னத்தில் எவ்வளவு அதிகமாக தரித்திருக்க முடியுமோ அவ்வளவு தரித்திருக்க வேண்டும் [சங் 37:7].

அடுத்ததாக, கர்த்தருக்கு காத்திருப்பது என்பது **அவருக்கு பயந்து, பரிசுத்தமாக வாழ்வதாகும்.** 2 பேதுரு 3:14 ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்.

ஆம், கறையற்ற மற்றும் பிழையற்ற வாழ்வு வாழ்வதே கர்த்தருக்கு காத்திருத்தலாகும். கர்த்தருக்காக காத்திருப்போர் மனம் போன போக்கில்

போய்விட முடியாது. தனக்கு இஷ்டமான வாழ்வியல் முறைமையை தேர்வு செய்யவும் முடியாது. கர்த்தருக்கு பயந்து, தாங்கள் வாழ்வை பரிசுத்தமாக மாற்றிக்கொள்ள வேண்டும் [சங்கீதம் 147:11: நீதிமொழி 20:22].

இறுதியாக, பிரியமானவர்களே! நாம் காத்திருக்கின்றோமே, அந்த கர்த்தர் நல்லவர். புலம்பல் 3:25 தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். அதுமட்டுமில்லை அவருக்காக நாம் காத்திருப்பதும் நல்லதாகும். புலம்பல் 3:26 கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது. ஆகையால் நம்பிக்கையுடன் கர்த்தருக்கு காத்திருப்போம். நாம் நம்புகிறது அவராலே வரும்! [சங்கீதம் 27:13].

✝

## வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் ஏழு விலையேறப்பெற்ற காரியங்கள்

1. **விலையேறப் பெற்ற விசுவாசம் 1 பேதுரு 1:7**
2. **விலையேறப்பெற்ற ரத்தம்1 பேதுரு 1:19**
3. **விலையேறப்பெற்ற மூலைக்கல்( 1 பேதுரு 2:4,6)**
4. **விலையேறப்பெற்ற கிறிஸ்து( 1 பேதுரு 2:7 ).**
5. **விலையேறப்பெற்ற ஆவி (1 பேதுரு3:4) .**
6. **விலையேறப்பெற்ற விசுவாசம் 2 பேதுரு 1:1**
7. **விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்கள் 2 பேதுரு 1:4 .**

# கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்

## For To Me To Live is Christ, And to Die is Gain

### B. அர்ஜூன்

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தைகளைச் சொல்லுகிறான்: **கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்**' என்று [பிலி.20. ஒருவனுக்கு கிறிஸ்து எப்படி ஜீவனாயிருக்க முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். இதற்கான விடையை பவுல் அதற்கு மேலுள்ள வசனத்தில் குறிப்பிட்டுள்ளார். '**நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப் போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும், கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும்**' [பிலி 1:20]. தேவனுடைய மனுஷன் உயிரோடிருக்கும்போது அவன் மூலமாக கிறிஸ்துவானவர் மகிமைப்படுகிறார். அவன் சாட்சியுள்ள மனிதனாக வாழும்போதும், சரீரத்திலே அங்கும் இங்கும் சென்று தேவனுடைய சுவிசேஷ வசனத்தை பிரசங்கிக்கும்போதும், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போதும், அவர்கள் மூலமாக கிறிஸ்துவானவர் மகிமைப்படுகிறார். ஒருவன் கிறிஸ்தவனாயிருந்தும் கிரியை செய்யாதவனாயிருந்தால் அவன் மரித்த சரீரத்திற்கு ஒப்பாக இருப்பான். '**சர்தை சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது: உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்**' என்கிறார் [வெளி. 3:1]. இன்றைக்கு இப்படிப்பட்ட சபைகளைப் பார்க்கிறோம். முதல் நூற்றாண்டிலும் இப்படிப்பட்ட சபைகள் இருந்திருக்கிறது. நீ கிரியை செய்யாத ஒரு கிறிஸ்தவனாக வாழ்ந்துகொண்டிருப்பாயானால் நீயும் சர்தை சபையைப்போல இருப்பாய். ஆகையால் உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிராமல் மனந்திரும்பி தேவனுடைய சித்தம் செய்ய உன்னை ஒப்புக்கொடு.

பவுல்: கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப் பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன்: இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறான் [கலா. 2:20]. பவுல் கிறிஸ்துவோடுகூட

சிலுவையிலறையப்பட்டவனாக இருந்தபோதும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறதாகவும் சொல்லுகிறார். ஆம், ஒவ்வொருவரும் பாவத்திற்குச் செத்து நீதிக்கு பிழைத்தவர்களாயிருக்கிறோம். ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். ஆக, இவ்விதமாக அவரோடுகூட மரித்த நாம் அவரோடுகூட பிழைத்தும் இருக்கிறோம். ஆகையால், பிழைத்திருக்கிற ஒவ்வொருவரும் அவருக்காக பிழைத்திருக்கிறோம். அநேகர் நான் பிழைத்திருக்கிறதோ என்னுடைய பிள்ளைக்காக பிழைத்திருக்கிறேன் அல்லது என்னுடைய பேரப்பிள்ளைகளுக்காக பிழைத்திருக்கிறேன் என்று சொல்லுவதை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒரு பிள்ளையோ அல்லது பேரப்பிள்ளையோ நம்மை பாவத்திலிருந்து மீட்கவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். எந்த ஒரு மனிதனும் ஒருமனிதனுடைய பாவத்தை மன்னிக்கவோ அல்லது அந்த பாவத்திலிருந்து அந்த மனிதனை மீட்கவோ முடியாது. நாம் இன்று பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு ஜீவனுள்ளவர்களாயிருக்கிறோம் என்றால் அதற்கு மூலகாரணமாக இருப்பவர் இயேசு. இதை அறிந்த பவுல் நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ. என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். நீங்களும் நானும் இன்று யாருக்காக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்?

இரண்டாவது, சாவு எனக்கு ஆதாயம் என்று சொல்லுகிறானே அது எப்படியாகும்? என்ற கேள்வி அநேகருக்கு எழும்புகிறது. ஒரு மனிதனுடைய சாவு ஆதாயமாக இருக்குமா? நிச்சயமாக கிறிஸ்துவுக்குள்ளாக ஒரு மனிதன் வாழ்ந்து சாகும்போது அது அவனுடைய வாழ்க்கையில் ஆதாயமாகவே இருக்கிறது. நாம் வாசித்தபடி 'நான் ஒன்றிலும் வெட்கப்பட்டுப்போகாமல், எப்பொழுதும்போல இப்பொழுதும், மிகுந்த தைரியத்தோடே ஜீவனாலாகிலும், சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று எனக்கு உண்டாயிருக்கிற வாஞ்சைக்கும் நம்பிக்கைக்கும் தக்கதாய் அப்படி முடியும் என்றான் அல்லவா? அந்தப்படியாக இந்த வசனத்தின் பிற்பகுதியில் சாவினாலாகிலும் கிறிஸ்து என் சரீரத்தினாலே மகிமைப்படுவாரென்று சொல்லியிருக்கிறான். இன்றைக்கு இந்த வசனத்தைப் படிக்கிறோம் என்றால் அது அப்போஸ்தலனாகிய பவுல் முதல் நூற்றாண்டு காலத்தில் செய்த ஊழியம். அவர் மரித்தும் அவருடைய வசனங்கள் நம்மை கிறிஸ்துவுக்கு நேரே வழிநடத்துகிறது. பல கல்லறைகளைப் பார்க்கிறோம். ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்ற வசனத்தை எழுதிவைத்திருப்பார்கள், அந்த நபர் தன்னுடைய விசுவாசத்தை காத்துக்கொண்டதையும் அவர் ஒரு கிறிஸ்தவராக இருந்து மரணம்வரை சத்தியத்திற்காக நிலைத்திருந்திரு பதையும் அந்த வசனம் நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர் மரித்தாலும்

கிறிஸ்துவின் நாமம் அவருடைய கல்லறையின் மூலமாக அங்கே மகிப்படுகிறதை நாம் அறிகிறோம்.

அதைப்போல யோப்பா பட்டணத்தில் வாழ்ந்த தொற்களைக்குறித்து நாம் அப் 9:36-39 முடிய உள்ள வசனங்களில் வாசிக்கிறோம். 'யோப்பா பட்டணத்தில் கிரேக்கு பாஷையிலே தொற்காள் என்று அர்த்தங் கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டு வந்தாள். அந்நாட்களில் அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்தி வைத்தார்கள். யோப்பா பட்டணம் லித்தா ஊருக்குச் சமீபமானபடியினாலே,பேதுரு அவ்விடத்தில் இருக்கிறானென்று சீஷர்கள் கேள்விப்பட்டு, தாமதமில்லாமல் தங்களிடத்தில் வரவேண்டுமென்று சொல்லும்படி இரண்டு மனுஷரை அவனிடத்திற்கு அனுப்பினார்கள். பேதுரு எழுந்து, அவர்களுடனே கூடப்போனான். அவன் போய்ச் சேர்ந்தபொழுது, அவர்கள் அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அப்பொழுது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே கூட இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து அவனைச் சூழ்ந்து நின்றார்கள். தொற்காள் மரித்தபோதும் அவள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்த வாழ்க்கை அந்தப்பட்டணத்திலே உள்ள விதவைகள் மூலமாக வெளிப்படுவதைக் காண்கிறோம். சரீரத்தின் மூலமாக கிறிஸ்துவின் நாமம் மகிமைப்பட்டது.

கிறிஸ்தவனுக்கு சாவு ஆதாயமாக இருக்கிறது. ஏனெனில், அவன் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவான், அவனை காத்தர் எழுப்ப வல்ல வராயிருக்கிறார். ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்' (கொரி.15:22). நாம் ஒவ்வொருவரும் ஆதாமுக்குள் மரிக்கிறோம். ஆதாம் மூலமாக பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது என்பதை அறிவீர்கள். ஆகையால், எல்லோரும் பாவத்தின் கீழ் அடிமைகளானோம். இப்பொழுதோ, கிறிஸ்துவுக்குள் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். 'பின்பு பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்: அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்: ஆவியான வரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார் என்று சொல்லிற்று (வெளி. 14:13), சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் சொல்லுகிறானே என்றால்: காத்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில், அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுகிறார்கள் என்று அர்த்தம்.


இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, வாசகரே, கிறிஸ்துவானவர் உன்னுடைய வாழ்க்கையில் உனக்கு ஜீவனாக இருக்கிறாரா? சாவுக்காக பயந்துகொண்டிருக்கும் உலகத்தில் சாவு உனக்கு எப்படிப்பட்டதா யிருக்கிறது? நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அல்லது உலகத்தானைப்போல வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா?

## தேவனை எல்லாவற்றிலும் முதலில் வைப்பவன் தேவன் தன்னோடிருப்பதைக் கடைசியில் காண்பான்.

எப்படியெனில் சரீரம் ஒன்று அவயங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவயங்களெல்லாம் அநேகமாயிருக்கும், சரீரம் ஒன்றாகவேயிருக் கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும் எல்லாரும் ஒரே ஆவி யினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகம்தீர்க்கப்பட்டோம். சரீரம் ஒரே அவயமாயிராமல் அநேக அவயவயங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதி னாலே அது சரீரத்தின் அவவயமாயிராதோ? காதானது நான் கண்ணாயிரா தபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால் செவி எங்கே? அது முழுவதும் செவியானால் மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவை யெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருக்கும், சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப் பார்த்து நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கி றோம்; நம்மில் இலட்சணமில்லாதவைகளே அதிக அலங்காரம் பெறும். நம்மில் இலட்சணமுள்ளவைகளுக்கு அலங்கரிப்பு வேண்டியதில்லை. சரீரத் திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக் குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத் தைக் கொடுக்க இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவய வம் பாடுபட்டாமல் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும். ஒரு அவயவம் மகிமைப்பட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமாயிருக்கிறீர்கள். ( I கொரி 12 : 12 - 27 ).

# இயேசுவின் தாழ்மை
# The Humility of Jesus

*Royce Frederick*



நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் தாழ்மையாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் (மத்தேயு 23:12). இயேசு கிறிஸ்து தாம் எதைச் சொன்னாரோ, அதைச் செய்தாரா? அவருடைய, வாழ்க்கையிலிருந்து சில உதாரணங்களை நாம் சிந்தித்துப் பார்ப்போம்.

அவர் இப்பாழாய் போன பூமிக்கு வருவதற்காக பரலோக மகிமையை விட்டார். இயேசு கிறிஸ்து தமக்கான அருமையான வீட்டையும் சௌகரியத்தையும் விட்டுவிட்டு நமக்காக இவ்வுலகத்திற்கு வந்தார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் (பிலிப்பியர் 2:5-7). ஆனால், உங்கள் சௌகரியங்களை எல்லாம் விட்டுவிட்டு கர்த்தருக்காக சேவை செய்ய உங்களால் முடியுமா? வசதியான வாழ்க்கையை உங்களுக்கு தந்தது யார் (யாக்கோபு1:17)?

அவர் தாழ்மையான பிறப்பை தெரிந்து கொண்டார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு ராஜாவின் அரண்மனையில் பிறக்கவில்லை. மாறாக, ஒரு தொழுவத்தில் பிறந்து, முன்னணையில் கிடத்தப்பட்டார் (லூக்கா 2:1-7). நம் அருமை இரட்சகர் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்து ஒரு தச்சனாக வேலை பார்த்து தம்முடைய பெற்றோர்களுக்கு உதவ வேண்டியதாக இருந்தது (மாற்கு 6:3). நீங்கள் உங்களை விட அதிகமான பொருட்கள் அல்லது விலையுயர்ந்த பொருட்களை வைத்திருப்பவர்கள் மீது பொறாமை கொள்கிறீர்களா?

அவர் குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களுக்கு கீழ்ப்படிந்தார். அவர்களுக்கு கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 2:51). எப்போதும்

பெற்றோருக்கு கீழ்ப்படிவதும், அவர்களைக் கனப்படுத்துவதும் எளிதானதா? கர்த்தருக்குள் பெற்றோருக்கு கீழ்ப்படிவது எப்போதும் சரியானதும் தேவனுக்கு பிரியமானதுமாருக்கிறது [கொலோ 3:20; எபேசியர் 6:1-3].

அவர் ஐசுவரியத்தையும், வீடுகளையும், நிலங்களையும் நாடவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்ற விரும்பின ஒருவரை இவ்விதமாய் எச்சரித்தார். அதற்கு இயேசு: நரிகளுக்குக் குழிகளும் ஆகாயத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்றார்'[லூக்கா 9:58]. நீங்கள் இந்த பூமிக்குரிய வாழ்க்கை அனுபவிக்க உங்கள் நேரத்தை விரயம் செய்கிறீர்களா? உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறது?' உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும். [மத்தேயு 6:21].

அவர் சென்ற பட்டணங்களில் நிராகரிக்கப்பட்டார். இருந்தபோதிலும் அவர் பழிவாங்க நாடவில்லை. அவருடைய சொந்த ஊர் மக்கள் அவரை ஊருக்கு புறம்பே தள்ளி, தங்கள் ஊர் கட்டப்பட்டிருந்த செங்குத்தான மலையின் சிகரத்தில் இருந்து அவரை தலைகீழாய் தள்ளி விடும்படிக்கு அவ்விடத்திற்குக் கொண்டு போனார்கள் [லூக்கா 4:29]. பின்பு இயேசு கிறிஸ்து கதரேனருடைய நாட்டில் பிசாசுகளை துரத்தினார் இருந்தபோதிலும் அங்குள்ள ஜனங்கள் அவருடைய வல்லமையை பார்த்து பயந்தார்கள் [மாற்கு 5:15]. அப்பொழுது, அந்தப் பட்டணத்தார் யாவரும் இயேசுவுக்கு எதிர் கொண்டுவந்து, அவரைக் கண்டு, தங்கள் எல்லைகளைவிட்டுப் போகும்படி அவரை வேண்டிக்கொண்டார்கள்' [மத்தேயு 8:34]. ஆனால், நம் அருமை இரட்சகர் அதற்கு கோபப்படுவதற்குப் பதிலாக படகுக்குள் ஏறி அவ்விடத்தை விட்டு கடந்து சென்றார். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் ஒரு சமாரிய கிராமம் இயேசு அதற்குள் செல்ல அனுமதி மறுத்தபோது அவருடைய சீஷர்கள் வானத்திலிருந்து அக்கினி வந்து அவர்களை அழித்து போட வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து அதற்காக சீஷர்களை கடிந்து கொண்டு மற்றும் ஒரு கிராமத்திற்கு சமாதானமாக கடந்து சென்றார் [லுக்கா 9:51-56]. நீங்கள் யாரோ ஒருவருக்கு தேவனுடைய வார்த்தையை போதிக்க முயற்சிக்கும் போது அந்த நபர் தேவனுடைய வார்த்தையை நிராகரித்தால் அந்த நபரை விட்டு விட்டு வேறொருவருடைய இருதயத்தில் விதையாகிய வார்த்தை முளைக்க முயற்சிப்பீர்களா? அவர்களைத் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை மற்றவர்கள் கேட்கத் தக்கதாக அழைப்பு விடுப்பீர்களா ? மற்றவர்களுக்கு தேவனுடைய வார்த்தையை போதிக்க முழு முயற்சி எடுப்பீர்களா?

அவர் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களோடு சகஜமாக பழகினார். நம்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எல்லோரையும் நேசித்து வரவேற்றாலும் கூட தீயவர்களோடு சகவாசம் வைத்துக் கொள்ள அவர் ஒருபோதும் விரும்பவில்லை. அதே நேரத்தில் அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் பழக வெட்கப்படவில்லை [மத்தேயு 9:10–13]. அவர் பலவிதமான பிரச்சனைகளில் சிக்கித் தவித்தவர்களை இவ்விதமாய் அழைத்தார். வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் [மத்தேயு 11:28]. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இரக்க குணம் உடையவராக இருந்தது அனேகர் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடு கேட்டதற்கான காரணங்களுள் ஒன்றாகும் [மாற்கு 12:37]. நாம் எப்போதுமே தேவ பக்தி உள்ள நண்பர்களை நாட வேண்டும் துன்மார்க்ர்களை அல்ல [1 கொரிந்தியர் 15:33;2 தீமோத்தேயு 2:22]. இருந்த போதிலும் நிச்சயமாக நாம் எல்லோரையும் வரவேற்க வேண்டும். [எபிரேயர் 13:2 ; யாக்கோபு2:1 ; ரோமர் 15:7].

அவர் பூமிக்குரிய புகழை விரும்பவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யாராலும் அறியப்படாத ஏழை குடும்பத்தில் பிறப்பதை தெரிந்து கொண்டார். நம் ஆண்டவர் அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார் [பிலிப்பியர் 2:7]. அதைப்போல இயேசு கிறிஸ்து தெருக்களில் நின்று கொண்டு சத்தமாக பிரசங்கித்து ஜனங்களின் கவனத்தை ஈர்க்க முயற்சிக்கவில்லை [மத்தேயு12:15–21]. சிலர் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இப்பூமிக்குரிய ராஜாவாக்க விரும்பியிருக்கிறார்கள், ஆனால், அவர் அதை மறுத்து விட்டார் [யோவான்6:15 ; மத்தேயு 4:8–10]. பிற்பாடு யோவான்18:36 ல் நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம். இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப் படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே, இப்படியிருக்க என் ராஜ்ஜியம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். [யோவான் 18:36]. நம் கர்த்தர் உலகப்பிரகாரமான புகழை நாடவில்லை. ஆனால், அவர் தம்முடைய தாழ்மையான சேவை மூலமாக புகழ்பெற்றார். நீங்கள் இவ்வுலகின் புகழையும், அங்கீகாரத்தையும் நாடுகிறீர்களா? [யோவான் 12:42–43 ; லூக்கா6:26 ; யாக்கோபு 4:4].

அவரை ஓய்வெடுக்க விடாமல் பின் தொடர்ந்த ஜனங்களுக்கு கூட அவர் உதவினார். இயேசு கிறிஸ்து யோவான் ஸ்நானனுடைய மரணத்தை குறித்துக் கேள்விப்பட்டபோது, அவ்வாறு தம்முடைய சீஷர்களை பார்த்து இவ்விதமாய் சொன்னார்'அவர் அவர்களை நோக்கி, வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார். ஏனெனில், வருகிறவர்களும் போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம்பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது [மாற்கு 6:31]. அப்படியே அவர்கள் தனிமையாய்

ஒரு படவில் ஏறி வனாந்தரமான ஓர் இடத்திற்கு போனார்கள். அப்போது திரளான ஜனங்கள் கால்நடையாய் வந்து அந்த கடற்கரையில் அவரை சந்தித்தார்கள். ஆனால், அந்த நேரத்தில் இயேசு பொறுமையை இழப்பதற்கு பதிலாக, அவர்கள் மீது மனதுருகி அவருடைய வியாதிகளை சுகமாக்கி அவர்களுக்கு உபதேசித்து அவர்களை போஷித்தார் [மத்தேயு 14:14–22]. ஜனங்கள் நம்மை ஓய்வெடுக்க விடாமல் இருந்தால் கூட நாம் அவர்களிடத்தில் அன்பாகவும், பொறுமையாகவும் இருப்போமா?

அவர் தேவனுடைய அதிகாரத்திற்கும் மனித அரசாங்கத்திற்கும் கீழ்ப்படிந்தார். இயேசு கிறிஸ்துவின் போதனை இவ்விதமாய் இருந்தது இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். [மத்தேயு 22:21]. நம் ஆண்டவர் பழைய பிரமாணமாகிய மோசேயின் பிரமாணத்திற்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்தார், அவர் தேவாலய வரியை கூட செலுத்தி இருக்கிறார். [கலாத்தியர் 4:4; மத்தேயு26:18;17:27]. உண்மையான தாழ்மை தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதை உள்ளடக்கியதாகும். மனிதருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிவதை அல்ல [மத்தேயு 15:13;2 யோவான்9; யூதா3]. மேலும், உண்மையான தாழ்மை என்பது அரசாங்கச் சட்டம் தேவனுடைய வார்த்தைக்கு எதிராக இல்லாத பட்சத்தில் அதற்கு கீழ்ப்படிவதை உள்ளடக்குகிறது [ரோமர் 13:1–7; 1 பேதுரு 2:13–17; அப்போஸ்தலருடைய நடபடிகள் 5:29].

அவர் தன்னுடைய சீஷர்களுக்கு ஊழியம் செய்தார். இயேசு கிறிஸ்து தாம் மரிப்பதற்கு முந்தின இரவு யூதாசின் கால்கள் உட்பட தம்முடைய சீஷர்களின் கால்களை கழுவினார் [யோவான் 13:1–17]. உங்கள் தகுதிக்குக் கீழானது என்று எந்த வேலையை நீங்கள் எண்ணுகிறீர்கள்?

அவர் ஜெபத்தில் தம்முடைய இருதயத்தை ஊற்றினார். இயேசு கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களை தேர்ந்தெடுப்பதற்கு முன்பாக இராமுழுவதும் தேவனை நோக்கி விண்ணப்பித்தார் [லூக்கா 6:12]. இயேசு கிறிஸ்து அடிக்கடி இரவு வேளைகளில் ஜெபித்திருக்கிறார் அல்லது அவ்வாறு ஜெபிப்பதற்காக அதிகாலையில் எழுந்திருக்கிறார் [மாற்கு1:35]. இயேசு தாம் மரிப்பதற்கு முந்தின இரவில் வியர்வையுடனும், கண்ணீருடனும் பாடுகளிடமிருந்தும், மரணத்திலிருந்தும் தன்னை தப்புவிக்கும்படி ஊக்கமாக ஜெபித்தார் [லூக்கா 22:44; எபிரெயர் 5:7]. இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து உம்முடைய சித்தத்தின்படி ஆகக் கடவது என்றும் ஜெபித்தார் [மத்தேயு 26:42]. நீங்கள் ஜெபத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றி ஜெபிக்கிறீர்களா? [1 பேதுரு 5:5–7] அதன்பின்பு நீங்கள் தேவனுடைய சித்தத்தை தாழ்மையாக ஏற்றுக் கொள்கிறீர்களா?

அவர் பரிகாசத்தையும், தவறாக நடத்தப்பட்டதையும் எவ்வித பழிவாங்கும் உணர்வுமின்றி சகித்துக் கொண்டார். மதத் தலைவர்கள்

போர்ச் சேவகர்கள் மற்றும் பிற மக்கள் அவருடைய கன்னத்தில் அறைந்தார்கள், காரித் துப்பினார்கள் , கசையடி கொடுத்தார்கள், அவமானப் படுத்தினார்கள், அவரைக் கடுமையாக பரிகாசம் செய்தார்கள் (மத்தேயு 27:27-44). ஆனால், இவைகளுக்கெல்லாம் இயேசு பதிலாக கோபமாக ஒரு வார்த்தை கூட பேசவில்லை (1 பேதுரு 2:21-24). மாறாக, அவர் இவ்விதமாய் ஜெபித்தார் அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள் (லூக்கா 23:34). சில வேளைகளில் ஜனங்கள் உங்களிடத்தில் அத்துமீறி நடந்து கொள்கிறார்களா? எல்லை மீறி விடுகிறார்களா? இருந்தபோதிலும், உங்கள் பொறுமையின் எல்லை என்ன?

அவர் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஜீவனை விட்டார். இயேசு கிறிஸ்து தான் பாடுபட்டு மரிக்கப் போவதைக் குறித்து முன்பே அறிந்திருந்தார் (மத்தேயு 16:21;17:22-23;20:17-29;1 பேதுரு 1:11). இருந்த போதிலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து விருப்பத்துடன் தான் அந்த சிலுவையை சுமக்கச் சென்றார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார் (பிலிப்பியர் 2:8). உங்கள் வாழ்க்கை ஒரு ஜீவபலியாக இருக்கிறதா? அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாம் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (1 யோவான் 3:16).

அவர் தம்முடைய மரணத்திற்குப் பிறகும், உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் தொடர்ந்து சேவை செய்தார். இயேசு கிறிஸ்து நமக்காக தன்னுடைய ஜீவனை விட்டது போதாதா? அதற்குப் பிறகு சேவை செய்வதிலிருந்து அவரால் ஓய்வு பெற்றிருக்க முடிந்திருக்கும் அல்லவா? தேவன் தம்முடைய உயிர்த்தெழுந்த குமாரனுக்கு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரத்தையும் கொடுத்தார் (மத்தேயு 28:18). இருந்தபோதிலும், நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சேவை செய்வதை ஒருபோதும் நிறுத்திக் கொள்ளவில்லை. நம் அருமை இரட்சகர் கடலோரத்தில் தம்முடைய சீஷர்களுக்கு உணவு சமைத்து கூட கொடுத்தார். அவர் உயிர்த்தெழுந்த கர்த்தராக இருந்த போதிலும் கூட ,தம்முடைய சீஷர்களுக்கு மீனையும் அப்பத்தையும் உண்டாக்கி அவர்களுக்கு கொடுத்து சேவை செய்திருக்கிறார். நீங்கள் போதுமான அளவு சேவை செய்திருக்கிறீர்களா? நீங்கள் சோர்வடைந்து கர்த்தருக்கு சேவை செய்வதிலிருந்து ஓய்வு பெற விரும்புகிறீர்களா? (கலாத்தியர் 6:9,10 ; 1 கொரிந்தியர் 15:58).

அவர் இன்னும் சேவை செய்து கொண்டுதான் இருக்கிறார். இயேசு

கிறிஸ்து தன்னுடைய வேலைகளை மாற்றி இருக்கிறார். ஆனால், சேவை செய்வதை அவர் ஒருபோதும் விட்டுவிடவில்லை. தேவன் இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, அவரை வலது பாரிசத்தில் உட்கார வைத்திருக்கிறார் (பிலிப்பியர் 2:9-11; அப்போஸ்தலர்2:33-34). இருந்தபோதிலும், இன்னும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு சேவை செய்து கொண்டும், நமக்காக வேண்டுதல் செய்து கொண்டும் இருக்கிறார் (ரோமர்8:34; எபிரேயர் 7:25).

இயேசு கிறிஸ்துவின் ஒட்டுமொத்த வாழ்வும் தாழ்மைக்கு உதாரணமாகும். இயேசு கிறிஸ்து உலகத்தை உண்டாக்கின தேவனுடைய குமாரன் இருந்தபோதிலும் கூட பாவம் நிறைந்த மக்கள் மத்தியில் வாசம் செய்தார் (யோவான்1:3;கொலோசெயர் 1:16). இருந்த போதிலும் , அவர் இவ்வுலகத்திற்குரிய ராஜாக்களைப் போல் பெருமையுடனும், பகட்டுடனும் உலா வரவில்லை. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தம்முடைய சீஷர்களைப் பார்த்து இவ்விதமாய்ச்சொன்னார்'அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது, உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக் காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மத்தேயு 20:28) ✝

### கிறிஸ்துவின் பதில்

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6)**

- **நான் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?**

**நானே வழி**

- **நான் எப்படி நிச்சயித்துக்கொள்ள முடியும்?**

**நானே சத்தியம்**

- **நான் எப்படி திருப்தியடைய முடியும்?**

**நானே ஜீவன்**

# கல்வாரியின் மூன்று சிலுவைகள்
# The Three crosses of Calvary
*Cliff Holmes*

***அ***ன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: ''நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (லூக்கா 23:39–43).

இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்த அந்த நாளில் கல்வாரி மலையில் வைக்கப்பட்டிருந்த அந்த மூன்று சிலுவைகள் சம்மந்தமான வசனங்களை நாம் கேட்டிருக்கிறோம், வாசித்திருக்கிறோம். அங்கு இருந்த ஒவ்வொரு சிலுவையும் நம் ஒவ்வொருவருக்கும் வித்தியாசமான அர்த்தங்களை கொடுக்கின்றன, அதைப்போல் ஒவ்வொரு சிலுவையும் நமக்கு வெவ்வேறு விதங்களில் முக்கியத்துவமாகின்றன.

### *சிலுவை எண் ஒன்று :*
### *யோசனையின்மை, கலகம் மற்றும் நிராகரிப்பின் சிலுவை.*

சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த கள்வன்களில் ஒருவன் தான் எதற்காக சிலுவையில் தொங்குகிறான் என்பதைப் பற்றி எவ்வித யோசனையும் இன்றி தன் கோபத்தையும், நிராகரிப்பையும் வெளிப்படுத்தும் விதமாக இயேசுவைப் பார்த்து நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று பரிகாசம் செய்தான். இக்கள்வன் கிறிஸ்துவை நிராகரித்தது மாத்திரமல்லாமல் தன் முழு கலகத்தையும் வெளிப்படுத்தும் விதமாக, தன்னுடைய பாவத்தால் தான் சிலுவையில் தொங்க வேண்டியதாயிற்று என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்தான்.

### *சிலுவை எண் இரண்டு:*
### *ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வேண்டுகோளின் சிலுவை*

இக்கள்வன் இயேசு கிறிஸ்துவை இகழ்ந்த அந்தக் கள்வனைக் கடிந்து கொண்டதன் மூலமாக தன்னுடைய மனந்திரும்புதலைக்

காட்டினான். இந்தக் கள்வன் நீ தேவனுக்கு பயப்படுகிறதில்லையா? என்று மற்ற கள்வனைப் பார்த்து கேட்டதினால் தங்களுடைய தர்ம சங்கடமான நிலைக்கு தாங்கள்தான் பொறுப்பு என்பதை உணர்ந்து கொண்டான். அது மாத்திரமல்ல, இவன் தேவ குமாரனுடைய பாவமற்ற தன்மையை அடையாளம் கண்டு கொண்டதனால் தான் அவரை ஆண்டவரே என்று அறிக்கையிட்டு இருக்கிறான். அதனால் தான் அவன் இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்ஜியத்தில் வரும்பேது அடியேனை நினைத்தருளும் என்றான். [லூக்கா 23:42]. இது உண்மையாகவே தன் பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, மனந் திருந்திய ஒரு பாவியிடமிருந்து வந்த ஒரு பணிவான வேண்டுகோளாகும்.



### *சிலுவை எண் மூன்று:*
### *நீதி,மீட்பு மற்றும் நிவாரணத்தின் சிலுவை*

நீதியுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய இந்த மனந் திரும்பிய பாவியின் இருதயத்தின் வேதனையை உணர்ந்தார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நொறுங்கொண்ட அந்த இருதயத்திற்கு தம்முடைய உதவும் கரத்தை நீட்டினார். இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிய அந்த மனந்திரும்பிய கள்வனுக்கு மீட்பை நல்கி, இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு பரதீசில் தேவனுடனும் ,கிறிஸ்துவுடனும் பரிசுத்த ஆவியானவருடனும் , தேவ தூதர்களுடனும் இருக்கும்படியான வாக்குத்தத்தத்தை அளித்தார்.

மேற்சொல்லப்பட்ட மூன்று சிலுவைகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இவைகள் தான். யோசனையின்மை கலகம் மற்றும் நிராகரிப்பின் சிலுவையினிடத்திற்கு அழைத்துச் செல்லும் வாழ்க்கையைத் தவிர்த்து விடுங்கள். மனந் திரும்புதலுக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினிடத்திற்கும் அழைத்துச் செல்லும் வாழ்க்கையை வாழுங்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் கரங்களில் மாத்திரமே காணப்படும் நீதி, மீட்பு மற்றும் நிவாரணத்தினத்திற்கு அழைத்துச் செல்லும் வாழ்க்கையை வாழ வேண்டும். அந்த மூன்றாவது சிலுவையில் நமக்காக மரித்தது நம் அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்து தானே. அவர் எனக்காக, உங்களுக்காக ,ஒட்டுமொத்த மனித இனத்திற்காக அந்தக் கோரச்சிலுவையில் தம்முடைய ஜீவனை விட்டார்.

## வேதாகமத்தின் தாக்கம்

## The influence of the Bible

*T.Pierce Brown*

இந்த நாட்களிலே நான் அதிகமாக வருத்தப்படும் காரியம் என்னவென்றால், முன்பு போல பழங்கால இலக்கியங்களை படிப்பதற்கு எனக்கு நேரம் கிடைப்பதில்லை என்பதுதான். இருந்தபோதிலும், நேற்று நான் சேக்ஸ்பியரின் சில படைப்புகளை வாசிக்க நேர்ந்தது. அப்போது சில வருடங்களுக்கு முன்பு புகழ்பெற்ற ஆசிரியர்கள் எழுதிய கட்டுரைகளில் பல கருத்துக்கள் சேக்ஸ்பியரின் படைப்புகளிலிருந்து எடுக்கப்பட்டதைப் பார்த்து பரவசமடைந்தேன். அந்நாட்களில் நடைமுறையில் எனக்குத் தெரிந்த எல்லோருமே ஒரு வேதாகம சம்பவத்தையோ அல்லது கதாபாத்திரத்தையோ தங்களுடைய படைப்புகளில் குறிப்பிடவோ அல்லது ஒப்பிடவோ செய்வார்கள். அத்தகைய எழுத்துக்களை படிக்கும் வாசகர் ஒருவர் வேதாகமத்தில் பரிச்சயம் இல்லாதவராக இருந்தால் அச்செய்தி அவருக்கு பழையதாகவும், பயனற்றதாகவும் இருக்கும்.

அந்நாட்களில் வாழ்ந்த பிரசித்திப் பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் வாசகர்களுக்கு வேதாகமத்தில் பரிச்சயம் இருக்கும் என்னும் யூகம் எழுத்தாளர்களுக்கு வேதாகமத்தில் இருந்த பரிட்சயத்தை வெளிப்படுத்துவது மாத்திரமல்லாமல் அவர்கள் எல்லோரும் வேதாகமத்தை எப்படி உயர்வாக எண்ணினார்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது. வாசகர்களால் அதிகமாக விரும்பி வாசிக்கப்பட்ட கட்டுரைகளில் எல்லாம் இலக்கியம், சிற்பம், அறிவியல் போன்ற துறைகளில் இருந்து கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட வேதாகமத்திலிருந்து சில வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டிருந்தபடியால் அந்த எழுத்தாளர்களுக்கு வேதாகமத்தின் மீது இருந்த மதிப்பும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அவைகளில் அதிகமாக என்னை கவர்ந்தது எதுவென்றால், அந்த எழுத்தாளர்கள் வேதாகம கதாபாத்திரங்களையும், வேதாகம சந்தர்ப்பங்களையும் குறிப்பிட்டி ருந்தாலும் கூட வாசகர்களுக்கு அந்த வேதாகம சம்பவத்தின் இடத்தையும், காலத்தையும் விவரிக்க குறிப்பு என்று தனியாக இடம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை என்பதுதான்.

அதைப்போல் ஷேக்ஸ்பியரின் எழுத்துக்களில் சுவாரசியமான காரியம் என்னவென்றால், அவர் படைப்பில் எட்வர்டின் மகன்கள் ஆபிரகா முடைய மடியில் உறங்கினதாக குறிப்பிட்டிருப்பார். இது ஷேக்ஸ்பியர் (லூக்கா 16:22) வசனப் பகுதியில் பரிச்சயப்பட்டிருக்கிறார்

என்பதைத்தான் நமக்கு காட்டுகிறது. அதைப்போல் அவருடைய படைப்புகளில் வரும் மற்றொரு கதாபாத்திரம் கடவுளுடைய கண்கள் எல்லோரையும் பட்சப்பாதமின்றி பார்க்கிறது. மேலும், அடைக்கலான் குருவிகள் தரையிலே விழாது போன்றவைகளை எல்லாம் நாம் படிக்கும் போது ஷேக்ஸ்பியர் (மத்தேயு 10:29-31) வசனங்களில் பரிச்சயப்பட்டிருக்கிறார் என்பது நமக்குத் தெளிவாக தெரிகிறது. Bunyan Milton போன்ற பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் வேதாகம கருப்பொருட்களை வைத்திருப்பதையும், அவைகளைப் பலர் படித்து பரவசமடைவதையும் பார்க்கும் பொழுது ஏதோ ஒரு இனம் புரியாத மகிழ்ச்சி நமக்குள் ஏற்படுகிறது.




இன்றைய நாட்களில் இலக்கிய உலகில் எண்ணற்ற படைப்புகள் அச்சடிக்கப்பட்டு வலம் வருகின்றன. அவைகள் எல்லாவற்றையுமே வாசிக்கும் வாய்ப்பு நமக்கு பல தளங்கள் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகளில் வேதாகமத்தை பற்றி ஒரு துளி கூட துணுக்குகள் இடம்பெறாமல் இருப்பது வேதாகமத்தை பற்றிய காரியங்களில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. நம் பிள்ளைகள் இதுவரை உள்ள இலக்கியங்களில் மிகச் சிறந்தது எது என்பதை புரிந்து கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் வேதாகமத்தை கற்றுக்கொள்ள நாம் அவர்களுக்கு உதவ வேண்டும்.

# தேவனுடைய சித்தத்தின் சத்தியங்களை கற்றுக் கொள்ளுதல்

# Learning the Truths of the will of God

*Ronald D .Reeves*

ஒரு மிகச்சிறந்த சபை தேவனுடைய சித்தத்தின் சத்தியங்களை ஏற்றுக்கொள்ள உற்சாகப்படுத்தப்படும் போது நேர்மறையாக பதில் அளிக்கிறது. தேவ ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற பரிசுத்த வாக்கியங்கள் நம்முடைய தனிப்பட்ட இரட்சிப்புக்கு மிகவும் அவசியமாகும். நம்முடைய ஆவிக்குரிய திரை தேவனுடைய வார்த்தை என்னும் மெல்லிய தென்றல், நம் ஒட்டுமொத்த ஆவிக்குரிய வீட்டிற்குள் ஆழமாக ஊடுருவ அனுமதிக்க வேண்டும். நம் ஆவிக்குரிய திரை நம் தனிப்பட்ட வாழ்விலும், சபை ஐக்கியத்திலும் தவறுகள் நுழையாத வண்ணம் தடுக்கிறதாக உறுதியாய் இருக்க வேண்டும் [எபேசியர் 5:11]. அத்தகைய ஜனங்களாய் இருப்பதற்கு, தேவனுடைய வார்த்தை அதிக அளவு அவசியப்படும் மாணவர்களாக நம்மை நாம் பார்க்க வேண்டும். நாம் ஆவிக்குரிய குழந்தை பருவத்தைத் தாண்டி நாள்தோறும் வளரத்தக்கதாக தீர்க்கமான செயல்பாடுகளுடன் நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். [எபேசியர் 4:14,15]. நாம் ஆவிக்குரிய வளர்ச்சியில் வெற்றிப்பெற



வேண்டுமென்றால் , நாம் நன்றாய் திட்டமிட்டு அதை சரியாய் நிறைவேற்ற வேண்டும். நாம் தேவனுடைய வார்த்தையின் அதிசயங்களைக் காணும்படி நம் கண்களை திறக்க வேண்டும். அதிக பசியும், தாகமும் உடையவர்களாய் இருப்போமாக[ மத்தேயு 5:6]. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்வது என்பது எப்போதும் தக்க பலனை அளிக்கும் என்பதில் எந்த சந்தேகம் இல்லை [2 பேதுரு 3:18].

# கடைத்தொகை

## The conclusion

*Denny petrillo*

இந்த தலைப்பைக் குறித்து அதிகமாக பேசப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து அதிகமான கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அதிலும் சாலமோன் ஞானி ஞானத்தால் தன்னுடைய முடிவுரையை அல்லது கடைத்தொகையை இரண்டு எளிய உண்மைகளாக குறைத்திருக்கிறார். தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளை கைக்ககொள் (பிரசங்கி 12:13). இவைகள் எல்லாம் உண்மையாகவே எளிய உண்மைகள் தானா? ஒருவிதத்தில் பார்த்தால் ஆம் அப்படித்தான் இருக்கிறது. ஏனென்றால், இதில் பெரிய அளவு இறையியல் ஈடுபடுத்தப்படவில்லை. அதன் காரணமாக இந்த வசனத்தின் பொருளை புரிந்து கொள்வதற்கு வேதவித்தகர்களின் உதவியை நாம் நாட வேண்டிய அவசியமில்லை. வேறு விதமாக பார்த்தால், இவ் வசனத்தின் கருத்துக்கள் சிக்கலாகவே உள்ளன. உண்மையாகவே (பிரசங்கி12:13)ஆம் வசனத்தில் இடம் பெற்றுள்ள வாக்கியங்களை குறித்து எண்ணற்ற புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன.

இவ்விரு உண்மைகளும் ஏன் கடைத்தொகையை அல்லது முடிவுரையை உள்ளடக்கியிருக்கின்றன? நாம் ஏன் தேவனுக்கு பயந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும்? இக்கேள்விகளுக்கான விடையை சாலமோன் ஞானி கீழ்க்கண்டவாறு கொடுக்கிறார்.

முதலாவது, இது உலகில் உள்ள எல்லோருக்கும் பொருந்துகிறது. பிரசங்கி புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கருத்துக்கள் சிலருக்கு பொருந்தும், சிலருக்கு பொருந்தாது. ஆனால், இந்த (பிரசங்கி 12:13)ன் கருத்துக்கள் அல்லது உண்மைகள் எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாக உள்ளது. செல்வந்தர்களும் ஏழைகளோடு சேர்ந்து இதைக்கேட்க வேண்டும். இந்த சத்தியங்களை தூரத்தில் உள்ளவர்களும் கேட்க வேண்டும் ,அருகில் உள்ளவர்களும் கேட்க வேண்டும். வாலிபர்களும் கேட்க வேண்டும், வயோதிகர்களும் கேட்க வேண்டும். அதைப்போல் பலவான்களும் கேட்க வேண்டும் , பெலவீனர்களும் கேட்க வேண்டும். இது குறித்து சிந்தித்துப் பாருங்கள். தேவனுக்கு பயப்படுங்கள் என்று யாருக்கு சொல்லக்கூடாது? தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளுங்கள் என்று யாரை நாம் உற்சாகப்படுத்தக் கூடாது?

தேவன் ஒவ்வொரு கிரியையையும் நியாயத்திலே கொண்டு வருவார். தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள் என்னும் வாக்கியத்தை எல்லோரும் கேட்க வேண்டும். ஏனென்றால், எல்லோரும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் [வெளிப்படுத்தின விசேஷம் 20:11-14]; 2 கொரிந்தியர் 5:10; அப்போஸ்தலர் 17:30,31]. இது உண்மையாகவே தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு யாரும் தப்ப முடியாது என்று பொருள் படுமா? ஆம், பொருள் படும். எனவேதான், ஜனங்களுக்கு நமக்கு முன்னே என்ன இருக்கிறது என்பதை அறிவது அவசியமாகிறது. ஜனங்கள் வருங்காலத்தை குறித்து சிந்தித்து அதற்காக ஆயத்தமாக வேண்டும் [மத்தேயு 24:36].

எல்லாவற்றையும் நாம் கேட்டிருக்கிறோம். இன்னும் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளை கைக்கொள்வோம்!

✝

---

## கிறிஸ்து தம்மைப் பற்றி சொன்னவைகள்

1. ஜீவ அப்பம் நானே (யோவான் 6:35 ).

2. நான் உலகத்திற்கு ஒளியாய் இருக்கிறேன் (யோவான் 8:12) .

3. நானே வாசல் (யோவான் 10:7)

4. நானே நல்ல மேய்ப்பன் (யோவான் 10:11) .

5. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் (யோவான் 11:25).

6. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன் (யோவான் 14:6).

7. நான் மெய்யான திராட்சைச் செடி (யோவான் 15:1).

## என் பெயர் அங்கே எழுதப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும்

## I know my name is written there

*Rodney Nulph*

ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்வதற்கு [கொலோ 3:16] என் பெயர் அங்கே எழுதப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும் என்னும் தலைப்பு கொண்ட ஆங்கிலப்பாடல் எல்லா காலத்துக்கும் ஏற்ற மிகச் சிறந்த பாடலாகும். இது ஒரு மார்க்கப்பிரிவினை பிரசிங்கியாரால் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பட்டிருந்தாலும் கூட இந்த பாடல் ஜீவ புத்தகத்தை மையமாக கொண்டு எழுதப்பட்ட ஒரு பாடலாகும். ஜீவ புத்தகம் வேதாகமத்தின் பரிசுத்த பக்கங்களில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஒரு விசேஷப் புத்தகமாகும். இந்த அற்புதமான புத்தகத்தில் தேவன் வெளிப்படுத்தி இருக்கிற காரியங்கள் எல்லாம் அவருடைய சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து அவருக்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு ஆறுதலை அளிக்கின்றன.

**ஜீவ புத்தகம் (கடந்த காலம்)**

ஜீவ புத்தகத்தைப் பற்றி பழைய ஏற்பாட்டில் முதன் முதலாக மோசே தான் பேசுகிறார். இன்னும் சொல்லப்போனால் இஸ்ரவேலர்களுக்காக மோசே தன் பெயரை ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கி போடும்படியாக கேட்டுக்கொள்கிறார். அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப்போய்: ஐயோ, இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகா பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.

ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும் என்றான் [யாத்திராகமம் 32:31,32]. மோசேயின் நோக்கத்தை தேவன் அறிந்திருந்தபடியால் தேவன் மோசேயின் என் பெயரை ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கிபோடவில்லை. சங்கீதக்காரனாகிய தாவீது இன்னும் ஒரு படி மேலே போய் தன்னுடைய சத்துருக்களின் பெயர்கள் கிறுக்கப்பட்டுப் போவதாக என்று விண்ணப்பித்தார் 28 ஜீவபுத்தகத்திலிருக்கிற அவர்கள்பேர் கிறுக்கப்பட்டுப்போவதாக, நீதிமான்கள் பேரோடே அவர்கள் பேர் எழுதப்படாதிருப்பதாக[சங்கீதம் 69:28 ; ஏசாயா 4:3 ; தானியேல்12:1 ; மல்கியா3:16].

பல்வேறுபட்ட பழைய ஏற்பாட்டு வசனப் பகுதிகளை வைத்து நாம் பார்க்கும் போது, யூதர்கள் தங்கள் குடிமக்களை குறித்து ஒரு பதிவேட்டை வைத்திருந்தது போல் தோன்றுகிறது. அதுதான் ஜீவனுள்ளோரின் புத்தகம் என்று அறியப்பட்டிருந்தது (எசேக்கியேல் 13:9; நெகேமியா 12:22,23). யூதர்கள் இந்தப் பதிவேட்டை வைத்துக் கொண்டு, பிறக்கும் குழந்தைகளின் பெயர்களைச் சேர்ப்பார்கள், அதே நேரத்தில் இருப்பவர்களின் பெயர்களை நீக்கிப் போடுவார்கள்.

ஜீவ புத்தகம் (நிகழ்காலம்) நாம் புதிய ஏற்பாட்டின் பக்கங்களுக்கு திரும்பும்போது, மறுபடியும் இந்த ஜீவ புத்தகத்தை பற்றி நாம் பார்க்கிறோம். ஆனால், இது சரீரப்பிரகாரமான இஸ்ரவேலோடு சம்மந்தப்படாமல் நம்முடைய கர்த்தருடைய சபையாகிய ஆவிக்குரிய இஸ்ரவேலோடு சம்மந்தப்படுகிறது. வரையறுக்கப்பட்ட கட்டளையை பெற்றுக் கொண்டு, அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையையும் பெற்றுக்கொண்டு பரவசத்தோடு திரும்பிய சீஷர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமை பெற்றுக் கொண்டதனால் களிகூர வேண்டாம் என்று சொல்லப்பட்டது. ‘ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்கா 10:20). ஆவியானவரால் ஏவப்பட்டு அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து சபையில் சிலர் சுவிசேஷ விஷயத்தில் தன்னோடு மிகவும் பிரயாசப்பட்டதாகவும் அவர்களுடைய நாமங்கள் ஜீவப் புத்தகத்திலிருக்கிறது என்றும் அறிவிக்கிறார். அப்போஸ்தலனாகிய யோவானின் நாட்களில் உபத்திரவத்திற்கு உட்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு இந்த உண்மைத் தன்மையின் காரணமாக தங்கள் நாமங்கள் ஜீவ புத்தகத்தில் இருந்து கிறுக்கி போடப்படாது என்பது எத்தனை ஆறுதலை கொடுத்திருக்கும். யோவான் பரலோகத்தை பற்றி எழுதும்போது இவ்விதமாய் எழுதுகிறார்

தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி 21:27).

ஜீவ புத்தகம்– தனிப்பட்ட முறையில் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் உங்கள் பெயர் எழுதப்பட்டிருக்கிறதா? ஜீவ புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டிருக்கிறவர்கள் மாத்திரமே பரலோகம் போக முடியும் (வெளிப்படுத்தின விசேஷம்21:27). எனவே தான் ஜீவ புத்தகத்தின் பக்கங்களிலே நம்முடைய பெயர்கள் பொறிக்கப்படுவது மிகவும் அவசியமாய் இருக்கிறது. ஒருவருடைய பெயர் எப்படி ஜீவ புத்தகத்தில் எழுதப்படுகிறது? நம்முடைய பெயர்கள் அந்த ஜீவ புத்தகத்தில் எழுதப்பட

வேண்டுமென்றால் நாம் பாவத்துக்கு மரித்து மறுபடியும் பிறக்க வேண்டும்(யோவான் 3:3–5); ரோமர்6:1–5). நாம் விசுவாசத்தை விட்டு வழுவாமல் தொடர்ந்து விசுவாசத்தில் நிலைத்திருந்தால் நம்முடைய பெயர்கள் ஜீவ புத்தகத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும் (ரோமர் 3:5). இருந்த போதிலும், நாம் உண்மையில்லாதவர்களாக இருந்தால் நம்முடைய நாமங்கள் ஜீவ புத்தகத்திலிருந்து கிறுக்கி போடப்படுவதற்கும் வாய்ப்பு உண்டு. ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புத்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்பேட்டால், ஜீவபுத்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்பேடுவார் (வெளி 22:19).

நீங்கள் இயேசுவுக்கு கீழ்ப்படிந்துவிட்டீர்களா? எப்போதும் நீங்கள் இயேசுவுக்கும் அவருடைய ராஜ்ஜியத்துக்கும் உண்மை உள்ளவர்களாக இருக்கிறீர்களா? இவ்வுலகில் இரண்டு வகையான மக்கள் தான் இருக்கிறார்கள் புத்தகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் ஒரு வகை; பெயர் எழுதப்படாதவர்கள் மற்றொரு வகை (வெளிப்படுத்தின விசேஷம்13:8;17:8). நித்தியம் ஆபத்தில் இருக்கிறது. எனவே, உங்கள் பெயர் ஜீவ புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறதா என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். என் பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிவேன் என்று பாடல் பாடுவது எத்தனை ஆறுதலாய் இருக்கிறது.

✝

## லாபம் என்ன?

பாவமும்,வேதனையும், மரணமும் நிறைந்த

இந்நிலத்தின் வழியாக பயணிக்கும்போது, என்னைச்

சுற்றிலும் இருக்கும் ஜனங்கள் கிடைக்காத பொருள்களுக்காக ,

பாடுபடுவதை என்னால் காண முடிகிறது.

அப்போது நான் கிறிஸ்துவால் நீண்ட காலத்திற்கு முன்பாக

கேட்கப்பட்ட கேள்வியை நினைத்துப்பார்த்தேன்.

“ மனுஷன் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன”?

## இரட்சிக்கப்பட ஒருவர் என்ன செய்ய வேண்டும் என்பதுபற்றி பவுல்?

## What was Paul's Must do to be saved?

*David Conley*

**நா**ம் எல்லோரும் நான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்‘? என்னும் கேள்வியை நன்றாய் அறிந்திருக்கிறோம். ஒருவர் எழுப்பும் கேள்வியிலேயே மிக முக்கியமான கேள்வி இதுதான். இக்கேள்வி பல நூற்றாண்டுகளாக இலட்சக்கணக்கான மக்களால் கேட்கப் பட்டிருக்கிறது. முதல் நூற்றாண்டு யூதர்கள் பேதுருவைப் பார்த்து இரட்சிக்கப்பட நாங்கள் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டபோது பேதுரு உடனடியாக நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பதில் அளித்தார் [அப் 2:38]. பவுல் எப்படி இரட்சிக்கப்பட்டார்? இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று கேள்வி கேட்டவர்களை கைது செய்யும்படியாக தமஸ்க்குவுக்கு செல்லும் பாதையில் பவுலுக்கு கேள்விக்கான பதில் கிடைத்தது. அவரும் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார். அப்படியென்றால், பவுலின் கூற்றுப்படி ஒருவர் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?

பவுல் தனிப்பட்ட முறையில் இயேசுவோடு பேசினார். ஆனால், இது அவரை இரட்சித்ததா? பவுல் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர்? என்று கேட்டார். அதற்கு கர்த்தர் நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்று பதிலளித்தார் [அப் 9:6]. பவுல் தனிப்பட்ட முறையில் இயேசு கிறிஸ்துவை சந்தித்து இருந்தாலும் கூட அது பவுலை இரட்சிக்கவில்லை. அங்கே ஏதோ ஒன்று சொல்லப்பட வேண்டியதாயிருந்தது.

பவுல் மூன்று நாட்கள் உபவாசம் இருந்தார், அது அவரை இரட்சித்ததா? பவுல் மூன்று நாட்கள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தார் [அப் 9:9]. அவர் இதற்காக மூன்று நாட்கள் ஜெபிக்கவும் செய்திருக்கிறார். ஆனால், அது அவரை ரட்சித்ததா? [ அப் 9:11]. அவர் தரிசனம் கண்டிருக்கிறார், ஆனால் அது அவரை இரட்சித்ததா [அப் 9:12]. பவுலுக்கு அற்புத விதமாக பார்வையும் கிடைத்தது. ஆனால், அது அவரை இரட்சித்ததா [அப் 9:18].

பவுல் பிற்பாடு இந்த அற்புதமான அனுபவத்தை நினைத்து பார்த்த போது இதை அவர் திரளான கூட்டத்திற்கு தெரிவித்தார். மேலும், தான்

செய்ய வேண்டியது தனக்குச் சொல்லப்பட்டதை குறித்தும் விளக்கினார். அப்போது அனனியா என்னும் பேர் கொண்ட ஒரு கிறிஸ்தவர் பவுலிடம் இவ்விதமாய் சொன்னார். இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம்பெற்று, உன் பாவங்கள் பேகக் கழுவப்படு என்றான் [அப்போஸ்தலர் 22:16].

பவுல் தமஸ்க்குவுக்கு செல்லும் பாதையில் கிறிஸ்துவை அவர் சந்திக்க வேண்டியதாயிருந்தது. அதுதான் அவரை விசுவாசிக்கவும், மனந் திரும்பவும், அறிக்கையிடவும் செய்தது. மேலும், அதுதான் வாசிக்கவும் ஜெபிக்கவும் அவரைத் தூண்டியிருக்கிறது. இருந்த போதிலும், ஞானஸ்நானம் பெறும்படியாக அவருக்கு சொல்லப்பட்டது. பவுல் தான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும் என்று அவருக்கு சொல்லப்பட்ட போது அவர் அப்படியே கீழ்படிந்தார். நாம் கீழ்ப்படிவோமா? ✝

## தேவன் மீதான நம்முடைய அன்பு இவைகளைச் செய்யத் தூண்ட வேண்டும்

1. நம் இருதயங்களை தேவனுக்கு அர்ப்பணிக்க தூண்ட வேண்டும் (1 சாமுவேல் 16:7) .

2. தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு முதலிடம் கொடுக்க நம்மை தூண்ட வேண்டும் (மத்தேயு 6:33).

3. தேவபக்தியுள்ள வாழ்க்கையை வாழ நம்மை தூண்ட வேண்டும் (1 தீமோத்தேயு 4:12).

4. வேதாகமத்தின் சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்படிய நம்மை தூண்ட வேண்டும் மத்தேயு 7:21

5. விசுவாசத்திற்காக தைரியமாய் நாம் போராட நம்மை தூண்ட வேண்டும் (யூதா 3)

6. உலகெங்கும் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க நம்மை தூண்ட வேண்டும் (மத்தேயு 28:18-20).

7. எத்தனை பாடுகள் வந்தாலும் மரணப்பரியந்தம் தேவனுக்கு உண்மையாய் இருக்க நம்மை தூண்ட வேண்டும் (வெளி 2:10).

# ஐக்கியத்திற்கு நம்மை நாம் அர்ப்பணித்திருக்கிறோமா?

## Are we devoted to the Fellowship ?

*Brian kenyon*

***லூ***க்ணீா ஆசிரியர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு பெந்தேகோஸ்தே நாளிலே எருசலேம் பட்டணத்திலே ஸ்தாபிக்கப்பட்ட முதல் கிறிஸ்துவின் சபையைப் பற்றி, அதன் தன்மையைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42 ல் சுருக்கமாக இவ்விதமாய்ச் சொல்கிறார். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப்போஸ்தலர் 2:42). இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள உறுதியாய் தரித்திருந்தார்கள் என்னும் சொற்றொடர் ஒருவர் தன்னை ஏதோ ஒன்றுக்கு அர்ப்பணித்துக் கொள்வது என்று பொருள்படுகிறது (அப்போஸ்தலர் (1:14;2:46;6:4; ரோமர் 12:12). ஆவிக்குரிய தன்மை கொண்ட குறிப்பிட்ட நான்கு காரியங்களில் இந்த ஆதி கிறிஸ்தவர்கள் உறுதியாய்த் தரித்திருந்திருக்கிறார்கள். நாம் இந்த கட்டுரையில் இரண்டாவதாக இடம்பெற்றுள்ள அந்நியோந்நியத்தில் உறுதியாய் தரித்திருந்தார்கள் என்பதைப் பற்றி சற்று ஆராய்ந்து பார்க்கப்போகிறோம். இங்கே அந்நியோந்நியம் என்னும் பதம் சங்கம், ஐக்கியம், கூட்டு பங்களிப்பு போன்றவைகளை குறிக்கிறது. ஆதித்திருச்சபை ஐக்கியமாய் இருந்தது என்பதன் பொருள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் அவர்கள் கூட்டாக பங்கெடுத்திருக்கிறார்கள் என்று தான் பொருள்( 1 கொரிந்தியர் 1:9). அவர்களுடைய ஐக்கியம் அல்லது அந்நியோந்நியத்தின் நோக்கம் தேவன் தான் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை( 1 யோவான் 1:3,7). இந்த ஐக்கியத்தின் ஒரு பகுதியாக விசுவாசிகள் எல்லோரும் ஒருமித்திருந்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். (அப்போஸ்தர் 2:44,45).



இதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் அப்போஸ்தலனாகிய பவுல் எருசலேமில் இருந்த யூத கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்வதற்காக புறஜாதி சபைகளில் பணம் சேகரித்ததாகும். அந்நியோந்நியம் அல்லது ஐக்கியம் என்பதற்கான கிரேக்க பதம் koinonia என்பதாகும். ஆனால், ரோமர்15:26 மற்றும் 2 கொரிந்தியர் 9:13 போன்ற வசனங்களில் தர்ம சகாயம் செய்தலாகவும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஜீவியங்களிலும் ஐக்கியம் அல்லது அந்நியோந்நியம் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்க வேண்டும். உண்மையான ஐக்கியம் கொள்ளாமல் எந்த ஒரு சபையும் தேவனை உண்மையாய் பின்பற்ற முடியாது (எபேசியர் 4:1-3). பொதுவாய் கிறிஸ்தவர்கள் உற்சாகப்படும்படியாகவும், ஆதரவுக்காகவும் மற்ற கிறிஸ்தவர்களை நாட வேண்டும். இதனால் தான் சபை கூடி வருதல் மிகவும் முக்கியமாக இருக்கிறது (எபிரேயர்10:23-25). ஐக்கியம் அல்லது அந்நியோந்நியத்திற்கு நம்மை நாம் எவ்வளவு அர்ப்பணித்திருக்கிறோம்?

## வேதாகமத்தின் காலங்கள்

- *ஜலப்பிரளயத்திற்கு முந்தைய காலம்*
- *ஜலப்பிரளயத்திற்கு பிந்தைய காலம்*
- *பிதாக்களின் காலம்*
- *அலைந்து திரிந்த காலம்*
- *படையெடுப்பின் காலம்*
- *நியாயாதிபதிகளின் காலம்*
- *ஐக்கிய ராஜ்யத்தின் காலம்*
- *பிளவு பட்ட ராஜ்ஜியத்தின் காலம்*
- *அடிமையின் காலம்*
- *மீட்டமைத்தலின் காலம்*
- *கிறிஸ்துவின் வாழ்க்கை காலம்*
- *பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடைப்பட்ட காலம்*

# சபை தலைமைத்துவம்
# Church Leadership
*Tom Baxley*

**ந**ம்முடைய மனித சரீரம் பல்வேறுபட்ட உறுப்புகள் அல்லது அவயவங்களை உள்ளடக்கியதாகும். சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும் வெவ்வேறு செயல்பாடுகளைக் கொண்டவைகளாகும். [1கொரி12;ரோமர் 12]. இது கர்த்தருடைய சரீரமாகிய சபைக்கும் உண்மையாயிருக்கிறது [கொலோ 1:18]. [எபேசியர்4:13] இவ்விதமாய்ச் சொல்கிறது: அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் [எபேசியர் 4:13]. இன்று உலகில் உயிரோடிருக்கும் எந்த ஒரு நபரும் அப்போஸ்தலருடைய தகுதியம்சங்களுக்கு உட்படுவதில்லை [அப் 1:21,22]. அதேபோல் தீர்க்கதரிசனம் கூட முதல் நூற்றாண்டில் கொடுக்கப்பட்ட ஓர் அற்புத வரம் தான். அது இன்றைய நாட்களில் எங்கும் இல்லை. அப்போஸ்தலர்கள் மாத்திரமே அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமையை மற்றவர்களுக்கு கொடுக்க முடிந்திருக்கிறது [அப் 8:18]. இவைகளை எல்லாம் வைத்துப் பார்த்தால் இன்றைய நாட்களில் சுவிசேஷகர்களும், மேய்ப்பர்களும் மாத்திரமே இருக்கின்றனர். சுவிசேஷகர்கள் என்பவர்கள் சுவிசேஷத்தை அறிவிப்பவர்கள். அது போல் மேய்ப்பர்கள் பொதுவாக மூப்பர்கள் என்று அறியப்படுகிறார்கள். இந்த மூப்பர்கள் வேத வாக்கியங்களில் மேய்ப்பர்களாக குறிப்பிடப்பட்டிருக் கிறார்கள் [அப்20:28;1 பேதுரு 5:2].

கர்த்தருடைய சரீரமாகிய சபையில் உதவிக்காரரும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக கருதப்படுகிறார்கள். ஆனால், அவர்களுடைய பங்கு அல்லது பணி வித்தியாசமானதாகும். அப்போஸ்தலருடைய நடபடிகள் ஆறாம் அதிகாரத்தில் உதவிக்காரர் நியமிக்கப்பட்டதை பற்றி நாம் வாசிக்கிறோம். உதவிக்காரர் ஏற்படுத்தப்பட்டதற்கான நோக்கம் விசுவாசிகளின் தேவைகளைச் சந்திப்பதற்காகத்தான். ஆனால், விசுவாசிகளின் ஆவிக்குரிய தேவைகளின் மீதும் கவனம் செலுத்தப்படுகிறது. இதன் பொருள், தலைமைத்துவப் பொறுப்புகள் உதவிகாரருடைய பொறுப்பு களை விட மேலானது என்றாகிவிடாது. அதாவது, எப்படி நம் சரீரத்தின் ஓர் உறுப்பு மற்ற உறுப்பை விட மேலானதில்லையோ அதைப்போல் தான் தலைமைத்துவ பொறுப்பு உதவிக்காருடைய பணியை விட மேலான தல்ல. வேறு விதமாகச் சொன்னால், சரீரம் நன்றாக செயல்பட வேண்டும் என்றால், சரீரத்தில் உள்ள அவயவங்கள் எப்படி ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமோ அதேபோல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் அங்கம் வைக்கும் நாம் ஒன்றிணைந்து செயல் பட்டால் தான் தலையாகிய கிறிஸ்துவுக்கு மகிமையைக் கொண்டு வர முடியும்.

## சபை வளர்ச்சி என்பது என்ன?
## What is church growth?
*Dan R.Owen*

ஒவ்வொரு பிராந்திய சபையின் உச்சக்கட்ட முக்கியத்துவம் சபை வளர்ச்சியாகத் தான் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு சபையும் கர்த்தருடைய பிரதான கட்டளையான உலகெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்து அதற்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்னும் கட்டளைக்கு உண்மையாக இருந்தால் சபை வளர்ச்சி உண்டாகும் [மத்தேயு 28:18-20]. சபை வளர்ச்சிக்கான வழிமுறைகள் [எபேசியர்4:1-6] மிக விவரமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதி பதினாறாம் வசனத்துடன் முடிவடைகிறது; ஆனால், ஏதோ ஒன்று சரியான வளர்ச்சியை உண்டாக்குகிறது என்று இவ்வசனம் தெரிவிக்கிறது. இவ்வசனப் பகுதியை நாம் ஆராய்ந்து பார்த்தால் சபை வளர்ச்சி உண்டாவதற்குத் தேவையான காரியங்களை நாம் அடையாளம் காண முடியும்.

முதலாவது, இவ்வசனப் பகுதியில் பல வசனங்கள் சபை அங்கத்தினர்கள் வளர்ச்சிக்கு தங்கள் பங்களிப்பை வெளிப்படுத் துவதற்கு தேவையான மனப்பான்மையும், குணாதிசயங்களும் என்னென்ன என்பதை குறிப்பிடுகின்றன. இவைகளுள் மனத்தாழ்மை, சாந்தம், நீடியபொறுமை அன்பினாலே ஒருவரை ஒருவர் தாங்குதல் அன்புடன் சத்தியத்தை கைக் கொள்வது போன்றவைகள் உள்ளடக்கம். பின்பு எபேசியர் 4:31,32 வசனங்களில் பவுல் சகலவிதமான கசப்பும், கோபம், மூர்க்கம் தூஷணம் மற்ற எந்த துர்க்குணம் உங்களை விட்டு நீங்கக் கடவது என்றும், ஒருவருக்கொருவர் தயவாயும், மன உருக்கமாயும் கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்றும் அறிவிக்கிறார்.

அடுத்ததாக, இங்கே பவுல் கிறிஸ்துவின் சரீரத்திற்காக ஒற்றுமையின் ஏழு அம்சங்களை பட்டியலிடுகிறார். இதை நான் [எபேசியர் 4:4-6] வசனங்களில் காண முடியும். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்று ஏழு ஒன்றுகளை பவுல் பட்டியலிடுகிறார். ஒற்றுமையின் இந்த ஏழு காரியங்களை ஒவ்வொன்றாக விளக்குவதற்கு முன்பாக ஜாக்கிரதையாகவும் விரிவாகவும் படித்து அனேகக் காரியங்களை புரிந்து கொள்வது அவசியமாய் இருக்கிறது [2 தீமோத்தேயு 3:16,17]. விரிவான வேத ஆராய்ச்சி இல்லாமல் இந்த ஆவிக்குரிய தேவையை நம்மால்

பூர்த்திசெய்ய முடியாது. பெரும்பாலான விசுவாசிகள் வேதாகமத்தை அரிதாகப் படிப்பதால் வேதாகமத்தை பற்றி குறைவான அறிவையே பெற்றிருக்கிறார்கள். இவர்கள் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற் கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாக இருக்கிறார்கள் (எபேசியர் 4:14).

இறுதியாக, நாம் ஒவ்வொருவரும் கிரியைச் செய்கிறவர்களாக இருந்து ஒவ்வொருவரும் தன் தன் பங்கையாற்றி சபையைக் கட்டி வளர்ச்சி ஏற்படுத்த வேண்டும் (எபேசியர்4:16). சபையானது அப்போஸ்தலர்களாலும், தீர்க்கதரிசிகளாலும் போதிக்கப்பட வேண்டும். அவர்களுடைய வார்த்தைகள் (வேதாகமம்) நம் போதனைக்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறது.




இன்றைய நாட்களில் சுவிசேஷகர்கள் மற்றும் போதகர்கள் கிறிஸ்தவர்களை ஊழியத்திற்கென்று பக்குவப்படுத்துவதற்காக தலைமைத்துவ பண்புகளை அவர்களுக்கு கற்றுக் கொடுக்கிறார்கள் (எபேசியர் 4:11,12). சபையங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு திறமைகளும், தாலந்துகளும், பெலன்களும் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் திறமைகள் மற்றும் வாய்ப்புகளை அடிப்படையாக வைத்து ஊழியத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் கர்த்தருடைய சரீரத்துக்கு சேவை செய்வதற்காக ஒவ்வொருவரும் நாம் பங்காற்றும் போது சபை விருத்தி அடையும். உங்களுடைய ஊழியம் எப்படிப்பட்டதாய் இருக்கிறது?

இவ்வுலகிலேயே மிக முக்கியமான அமைப்பாக சபை தான் இருக்கிறது. சபை என்பது இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகவும்,பரலோகத்தில் நித்திய நித்தியமாக ஆயத்தமாய் இருப்பவர்களின் கூட்டமாகவும் இருக்கிறது. சபை வளர்ச்சி என்பது கடினமான ஒன்றுதான். ஆனாலும், வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கும் வழிகாட்டுதல்களை பயன்படுத்தும்போது சபை வளர்ச்சி சாத்தியமே. எபேசியர்4:1–16 வசனங்களில் சபை வளர்ச்சிக்கு தேவையான வல்லமையான வழிகாட்டுதல்கள் இடம்பெற்றுள்ளன.

## ஆபிரகாமின் சந்ததி

## Seed of Abraham

*Dwight Fuqua*

தேவன் ஆபிரகாமிடம் இவ்விதமாய் வாக்குத்தத்தம் பண்ணினார்1 கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ [ஆதியாகமம் 12:1-3]. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.

உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களை சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். [ஆதியாகமம் 12:1-3]. பின்பு தேவன் தம்முடைய உடன்படிக்கையை புதுப்பித்தபோது ஆபிரகாமின் சந்ததியும் வானத்து நட்சத்திரங்களைப் போல எண்ணமுடியாததாய் இருக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணினார் [ஆதியாகமம் 15:5]. தேவன் இதே வாக்குதத்தங்களை ஈசாக்கோடும், யாக்கோபோடும் புதுப்பித்தார். இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக இருக்கின்றன? முதலில் நாம் இவைகளை வாசிக்கும்போது நம்முடைய எண்ணம் எல்லாம் இஸ்ரவேல் புத்திரரிடத்திலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தினிடத்திலும் தான் செல்கிறது. இருந்த போதிலும், இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் இஸ்ரவேல் என்னும் சரீரப்பிரகாரமான தேசத்தோடு முடிந்து போய் விடுவதில்லை. ஆபிரகாமின் சந்ததி என்பது சரீரப்பிரகாரமான மரபணுக்களையும், தேச எல்லைகளையும் கடந்த ஒன்றாகும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவரா? அப்படி என்றால் நண்பரே நீங்களும் கூட ஆபிரகாமின் சந்ததியாகத்தான் இருக்கிறீர்கள். கலாத்தியர் மூன்றாம் அதிகாரத்தைப் பாருங்கள். இவ்வதிகாரத்தில் பவுல் எப்படி கிறிஸ்து ஆபிரகாமின் சந்ததி என்பதை விவரமாக விவரிக்கிறார் [வசனம் 16]. பின்பு பவுல் எவ்விதமாய் முடிவுக்கு வருகிறார். **நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்** [கலாத்தியர் 3:29].

நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்! ஆபிரகாமின் சந்ததி! தேவனுடைய பிள்ளை, வாக்குத் தத்தத்திற்கு வாரிசு அல்லது சுதந்திரவாளி. இவைகள் எல்லாம் அருமையான அடைமொழிகள் அப்படித்தானே! எனவே தான், அப்போஸ்தலனாகிய யோவான்

இவ்விதமாக எழுதினார் நாம்தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள். உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை (1 யோவான் 3:1).

நாம் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறோம்! நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம்! ஆபிரகாமின் சந்ததியாக தேவனுடைய பிள்ளைகளாக வாக்குத்தத்தத்தின்படியே நாம் சுதந்திரராயிருக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 8:17 ல் நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே என்று சொல்கிறார் (ரோமர் 8:17). அருமையான சகோதரரே, அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய அந்த சுதந்திரம் பரலோகத்தில் உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிறது (1 பேதுரு 1:4,5).

நாம் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறோம். நாம் யூதர்களாக இருக்கிறோமா. அல்லது புறஜாதியாயிருக்கிறோமா, அடிமையாய் இருக்கிறோமா, சுயாதீனம் உள்ளவர்களாக இருக்கிறோமா ஆணா பெண்ணா என்பதெல்லாம் ஒரு பொருட்டே அல்ல. கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாரும் ஒன்றாய் இருக்கிறோம் (கலாத்தியர் 3:28).

ஒருவர் ஆபிரகாமின் சந்ததியாக அல்லது தேவனுடைய பிள்ளையாக எப்படி மாறுகிறார்? பவுல் இவ்விதமாய் எழுதினார்'நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே (கலாத்தியர் 3:26,27). ஒருவர் தேவன் பேரிலுள்ள விசுவாசத்தினாலும் ஞானஸ்நானத்தினாலும் எப்படி பாவத்திலிருந்து இரட்சிக்கப்படுகிறாரோ அப்படித்தான் ஒருவர் தேவனுடைய பிள்ளையாகவும் மாறுகிறார் (மாற்கு 16:16).

ஆபிரகாமின் சந்ததி! பிரியமானவர்களே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் (1யோவான் 3:2). இதைத்தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருங்கள்.

✝

---

**இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் இஸ்ரவேல் என்னும் சரீரப்பிரகாரமான தேசத்தோடு முடிந்து போய் விடுவதில்லை. ஆபிரகாமின் சந்ததி என்பது சரீரப்பிரகாரமான மரபணுக்களையும், தேச எல்லைகளையும் கடந்த ஒன்றாகும்.**

## கிருபையிலிருந்து கற்றுக் கொள்ளுதல்

## Learning from grace

*Wayne Barrier*

அப்போஸ்தலனாகிய பவுல் தேவ கிருபையை நாம் புரிந்து கொள்வதினால் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் சம்மந்தமாக தீத்துவுக்கு கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தினார். ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச்செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டைபண்ண இடங்கொடாதிருப்பாயாக. துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. ஏனெனில், முற்காலத்திலே நாம் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக, அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்த ஆவியை

நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார். இந்த வார்த்தை உண்மையுள்ளது. தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்துத் திட்டமாய்ப் போதிக்கவேண்டுமென்று விரும்புகிறேன். இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள். புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக் குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு. அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும். [தீத்து 2:11–3:9].

நாம் தேவ கிருபைக்கு சரியாக பதிலளிப்பதன் மூலமாக நீதியின் கிரியைகளைத் தாண்டி அபரிதமாக ஆசீர்வதிக்கப்பட முடியும். அவருடைய சொந்த ஜனம் என்னும் நிலைதான் எல்லாவற்றையும் விட பெரிதாக இருக்கிறது. இதை இயேசு கிறிஸ்து தான் சாத்தியமாக்குகிறார். கிருபையிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.

✝

# இயேசு அற்புதமானவர்

*1. இயேசுவின் பாதங்கள் அற்புதமானவைகள் (வெளி 2:18).*

*2. இயேசுவின் கைகள் அற்புதமானவைகள் (மத்தேயு 14:31).*

*3. இயேசுவின் கண்கள் அற்புதமானவைகள் ( வெளி: 2:18).*

*4. இயேசுவின் செவிகள் அற்புதமானவைகள் (எபிரேயர் 4:14-16).*

*5. இயேசுவின் உதடுகளும், நாவுகளும் அற்புதமானவைகள் (யோவான் 12:49).*

**நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை போல நாம் நம் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் தேவனுடைய மகிமைக்காக பயன்படுத்த வேண்டும்.**

# இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்

# Things the Gentiles seek

*Beth Johnson*



என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை யெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப் பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள், நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும் (மத்தேயு 6:31–34).

இன்றைய நாட்களில் சபையிலும் கூட பலர் நீண்ட நேரங்கள் வேலை செய்வதையும் ஒன்றுக்கும் மேற்பட்ட வேலையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதையும் நம்மால் காண முடிகிறது. அதுவும் மனைவிகளை வெளியே வேலைக்கு அனுப்புவது என்பது இந்த நாட்களில் சகஜமான ஒன்றாக மாறிவிட்டது. இவர்கள் எல்லாரும் உண்மையாகவே தேவன் மீது நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்களா என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. அவர்கள் விலை உயர்ந்த சொகுசு வாகனங்களை ஓட்டிச் செல்கிறார்கள், பெரிய வீடுகளை கட்டி அதில் வாழ்கிறார்கள். மேலும், இன்று பலர் மிகப்பிரமாண்டமான சொகுசு பேருந்துகளில் சுற்றுலா செல்லுகிறார்கள். அவர்கள் விளையாட்டு சினிமா என்று எல்லாவிதமான பொழுதுபோக்கு காரியங்களிலும் ஈடுபட்டு தங்கள் பணத்தை விரயம் செய்கிறார்கள். எல்லாவிதமான கேளிக்கைகளிலும் மூழ்கி அவைகளிலிருந்து தெளிந்த பிறகு உல்லாசத்திற்காக கடன் அட்டைகளை பயன்படுத்தினது பற்றியும் தங்கள் பொருட்களை அடமானம் வைத்ததைப் பற்றியும் கவலையில் மூழ்கிப் போய் விடுகிறார்கள்.

மத்தேயு 6:31–34 ல் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி அஞ்ஞானிகள் வேத வாக்கியங்களுக்கு அந்நியர்களாக கருதப்படுகிறார்கள்.

அதுமாத்திரமல்லாமல், அவர்கள் தேவனை பற்றித் துளியும் அறியாதவர்கள். மேற்ச்சொல்லப்பட்ட வசனப் பகுதியின்படி உணவுக்காகவும், உடைக்காகவும் அஞ்ஞானிகள் கவலைப்படுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பரலோகத்தில் இருக்கும் பிதாவைப் பற்றிய அறிவுடைய கிறிஸ்தவர்கள், தேவன் தேவைகளைச் சந்திப்பார் என்று அறிந்திருக்கும் கிறிஸ்தவர்கள் உணவுக்காகவும், உடைக்காகவும் ஒருபோதும் கவலைப்படக்கூடாது. கிறிஸ்தவர்கள் முதலில் தேவனுடைய ராஜ்யத்தையும் நீதியாய் இருப்பதையும் நாட வேண்டும். அப்பொழுது இவைகளெல்லாம் கூட கொடுக்கப்படும் எனும் புரிதலோடு கூட தேவ தயவை நாட வேண்டும். இவ்வுலகில் உள்ள எல்லாவற்றையும் தேவன் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். எனவே, கிறிஸ்தவர்களின் தேவைகளை தேவனால் சந்திக்க முடியும். தேவனுடைய பார்வையில் எது சிறந்தது என்று படுகிறதோ அதைத்தான் தம்முடைய பிள்ளைகளாகிய கிறிஸ்தவர்களுக்கு கொடுப்பார்.

நாம் இந்த பூமிக்குரிய சந்தோஷங்களுக்காக அதிக அக்கறைப்பட வேண்டுமா? நாம் இந்த உலகத்தின் போக்கிற்குகேற்ப போக போராட வேண்டுமா? உலகத்தின் போக்கு என்று நாம் பார்க்கும் பொழுது அங்கே ஆஸ்திகளும், ஆடம்பரமும் தான் ஆத்துமாவை விடவும், ஆண்டவருக்கு சேவை செய்வதை விடவும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நம்முடைய வாழ்க்கை முறையினாலும் நாளும் நம்முடைய குறிக்கோள்களினாலும் பிசாசின் பிள்ளைகளைப் போல நாம் இருக்க வேண்டுமா? எல்லையில்லா ஞானத்தை உடையவர் நம் பரம பிதா நம் தேவைகள் என்னவென்பதை அறிந்திருக்கிறார். அன்பும், ஞானமும் உடைய தகப்பனின் பண்பு தன்னுடைய பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமாக கொடுக்காமல் தேவை அறிந்து அவர்களுக்கு கொடுப்பதுதான்.

கிறிஸ்தவர்கள் இந்த உலகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும் நாம் ஆவிக்குரிய காரியங்களின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் இந்த வசனப் பகுதிகள் நமக்கு புத்தி சொல்கின்றன (லூக்கா 12:29-32); எபேசியர் 4:17-19). கிறிஸ்தவர்கள் மாம்ச இச்சைகளின் மீதும், தங்கள் சரீரப் பிரகாரமான தேவைகளின் மீதும் கவனம் செலுத்தும் புறஜாதியாரைப் போல சிந்திக்க்கூடாது. உலகத்தார் உலகப் பொருள்களின் மீது பேராசை உடையவர்களாயிருந்து அதை எப்படியாவது அடைய வேண்டுமென்று கவலைப்படுகிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பாக என்னை ஆச்சரியப்படுத்திய காரியங்களில் ஒன்று நாம் நம் வாழ்க்கைத்துணையை தெரிந்தெடுக்கும்

விதம் தேவனுக்கு முக்கியமானதாகும் என்பதுதான். நாம் புறஜாதியார் செய்வது போல காம இச்சையினால் நம்முடைய வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுக்க கூடாது[ 1 தெசலோனிக்கேயர் 4:3–5]. நாம் நம் வாழ்க்கை துணையை தெரிந்தெடுப்பது அந்தத் துணையின் ஆவிக்குரியத் தன்மை மற்றும் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டுதான் இருக்க வேண்டும். இருந்த போதிலும், குடும்ப அங்கத்தினர்கள் இடையே தகாத உறவு கொள்வது தவறு என்பதை உலகத்தாரும் அறிந்திருக்கிறார்கள் [1கொரிந்தியர் 5:1].

நாம் நம்முடைய ஒவ்வொரு தேவைக்கும் உண்மையாக தேவனை சார்ந்திருந்து அவரை அண்டிக் கொண்டால் வாழ்க்கை எவ்வளவு எளிதான ஒன்றாக இருக்கும் என்பதையும், இவ்வுலக கவலைகளை மேற்கொள்வது எவ்வளவு எளிதாய் இருக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

✝

## ஏன் சிலர் பின்வாங்குகிறார்கள்?

☆ *சத்தியத்தை சரியாகப் புரிந்து கொள்ளாததால் (17:32)*

☆ *சத்தியத்திற்கு கீழ்ப்படியத் தேவையில்லை என்று நினைப்பதால் (அப்போஸ்தலர் 24:25)*

☆ *உலகத்தை அதிகம் சிநேகிப்பதால் ( யோவான் 12:42)*

☆ *சத்தியத்தில் நிலைத்திருக்க முடியாதென்று நினைப்பதால் (மத்தேயு 10:22)*

☆ *கொடுக்க வேண்டிய விலை அதிகமென்று எண்ணுவதால் (மாற்கு 8:34)*

☆ *தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் எந்தச் சூழ்நிலையிலும் பின்வாங்க கூடாது (எபி 10:38)*

செயலில் கிறிஸ்தவம்

# சுய சேவை செய்யும் உலகில் தேவனை சேவித்தல்

# Serving God in a self serving world

*Emily Fisher*




**வி**ரிவான அளவில் பார்த்தால் நமது கலாச்சாரம் நாளுக்கு நாள் சுயத்தை மையமாக வைத்து வளர்ந்து கொண்டிருக்கிறது. இதில் பெரிய ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆரம்பத்திலிருந்தே சாத்தான் நாம் நினைப்பது தான் சிறந்தது என்றும் ,அதன் காரணமாக தேவனுடைய வார்த்தையை நாம் சந்தேகிக்கும்படி செய்வதன் மூலமாக மனித இனத்தை சுயமாகச் சேவிக்கச் செய்து அந்த சோதனையில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறான் [ஆதியாகமம்3:1-7]. நாம் வரலாறு முழுவதும் பார்த்தால் தேவன் எவைகளை நல்லதாக உண்டாக்கி இருக்கிறாரோ அவைகளை சாத்தான் தொடர்ந்து சீரழித்து வருவதை நம்மால் காண முடியும். சில வேளைகளில் உண்மையாகவே தேவன் நம்மை விடுவிப்பாரோ? இந்த பொற்கன்றுகுட்டியை நம்முடைய தெய்வமாக நாம் வணங்குவோம் என்று சொல்லும் அளவுக்கு இஸ்ரவேல் தேவன் மீது சந்தேகப்பட்டது [யாத்திராகமம் 32; எண்ணாகமம் 14]. சில ஆண்டுகளுக்குள் அதிலும் குறிப்பாக, மனித இனம் டார்வின் கொள்கையை அறிந்த பிறகு ஆதியாகமம் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள சிருஷ்டிப்பின் விவரங்களை நம்பமுடியாததாக உள்ளது என்று மனித இனம் கேள்வி கேட்கிறது. மேலும், மனித இனம் கடவுள் உண்மையாகவே சொல் அர்த்த ரீதியாக ஆறு நாட்களில் இந்த உலகத்தை உண்டாக்கினாரா என்று சந்தேகத்துடன் கேள்வி கேட்கிறது. மனித இனம் அதிகமாக சிந்திக்கும் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கடவுள் என்று ஒருவர் உண்மையாகவே இருக்கிறாரா? என்று கேள்விக்கணைகளை தொடுத்து கொண்டிருக்கும் சமூகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாத்திகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மனிதன் தனக்குத்தானே கடவுளாய் இருக்கிறான் என்னும் சுலோகம் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்[ 2 தீமோத்தேயு 3:1-5].

எனவே, இத்தகைய மனித கலாச்சாரத்தில் இவ்வுலகம் தனக்குத்தானே சேவை செய்து கொண்டிருப்பதை அனுதினமும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஊடகங்கள் சுயம் எனும் தத்துவத்தை நாள்தோறும் நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருவதை தொலைக்காட்சிகளிலும், இணைய தளங்களிலும் நம்மால் காண முடிகிறது. விளம்பரங்களில் அழகாக தோன்றுபவர்கள் தான் நம்முடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட பொருட்கள் நமக்கு தேவை என்பதைத் தீர்மானிப்பவர்களாக இருப்பது வேதனையிலும் வேதனை. அந்த விளம்பரங்களை நாம் பார்க்கும் போது நாம் அந்தப் பொருளை வாங்கினால் அந்த விளம்பரத்தில் தோன்றுபவர்களைப் போல மகிழ்ச்சியாக இருக்க முடியும். என்னும் ஒரு எண்ணத்தை இந்த உலகம் நமக்குள் உருவாக்கி விட்டது. இன்றைய நாட்களில் தொழில்நுட்பம் நமக்கு உடனடி சுய திருப்தியை உண்டாக்குகிறது. நாம் விரும்பும் பொருள் அடுத்த நாளே நமக்கு கிடைக்க வேண்டும் என்று பதிவு செய்கிறோம். நாம் விரும்பும் காரியங்களை பதிவேற்றவும் பதிவிறக்கவும் செய்கிறோம். மேலும், இன்றைய நாட்களில் தகவல்கள் எல்லாம் விரல் நுனியில் இருக்கின்றன. உன்னையே நீ நம்பு, உனக்கு எது மகிழ்ச்சியை தருகிறதோ அதை செய், நீ விரும்புகின்றபடி காரியங்களைச் செய் போன்ற சுலோகங்கள் இன்றைய நாட்களில் சகஜமாகிவிட்டன. அதேபோல் இன்றைய நாட்களில் செல்பி எடுத்து சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்வது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. இவைகளை எல்லாம் பார்க்கும் பொழுது நம் மனதில் என்ன ஓடுகிறது. நான் அவர்களைப் போல அழகாக இல்லை, விளம்பரங்களில் தோன்றுபவர்களைப் போல நான் வசீகரமாக இல்லை, நான் அவர்களைப் போல இருந்தால் நன்றாக இருக்கும். போன்ற எண்ணங்கள் நம் மனதினுள் ஓடுகின்றன.

சுயநலம் என்னும் பிரச்சனையின் மற்றுமொரு விளைவு தான் குடும்ப சீரழிவு. கணவனும், மனைவியும் அன்பான விவாகத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல கடினமாக உழைக்க விரும்புவதும் இல்லை, எந்த ஒரு தியாகத்தை செய்ய விரும்புவதுமில்லை. பிள்ளைகள் (அவர்கள் கருவிலே கொல்லப்படாவிட்டால்) அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்கள் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறபடியால் அவர்கள் தனியே விடப்படுகிறார்கள். இப்படி இந்த பட்டியல் நீண்டு கொண்டே இருக்கும். ஆனால், நம்முடைய கவனம் எவ்விதமாக சிதறடிக்கப்படுகிறது என்பதை நம்மால் எளிதாகக் காண முடிகிறது. மேற்சொல்லப்பட்ட காரியங்களில் உதாரணமாக பொருட்களை துரிதமாக ஆர்டர் செய்வதில் எந்தப் பாவமும் இல்லை. ஆனால், அது நம் மீது தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்கிறது. அந்தத் தாக்கம் நல்லதுக்கா அல்லது கெட்டதுக்கா எனும் கேள்வியை நமக்குள்ளாக நாம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இப்படித் தன்னைக் குறித்து ஒருவர் சிந்திப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று சிலர் கேட்கலாம். நான் என்னைப் பற்றி ஏன் சிந்திக்க கூடாது, மற்றவர்கள் அவர்களைப் பற்றி ஏன் சிந்திக்க கூடாது என்று கேட்கலாம் . இதற்கான பதில் மிக எளிமையானது: தேவனுடைய வார்த்தை மேற்சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு நேர் எதிரான கருத்தை போதிக்கிறது. நாம் எப்போதுமே நம்மைப் பற்றியோ நம்முடைய உணர்வுகளைப் பற்றியோ நம்முடைய விருப்பங்கள் மற்றும் தேவைகளைப் பற்றியோ சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடாது. நாம் இதை மலைப் பிரசங்கத்தின் வசனங்களை வாசித்துப் பார்த்தாலே கண்டுகொள்ள முடியும் [ மத்தேயு5-7].

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி, நான் சுயநலமாக நமக்கு நாமே சேவை செய்து கொள்ளும்போது அதிக மகிழ்ச்சியுடையவர்களாக இருக்கிறோம் என்னும் பொய்யை நம்பச் செய்ததன் மூலமாக பிசாசு நம்மை வஞ்சித்திருக்கிறான். பரிணாமக் கொள்கை என்பது மனிதன் ஒரு செல் ஜீவராசியிடமிருந்து கோடிக் கணக்கான வருடங்களில் மனிதனாக உருமாறி இருக்கிறான் என்னும் பொய்யான கொள்கையாகும். தகுதி உள்ளவைகள் தப்பி பிழைத்துக் கொள்ளும் என்னும் டார்வினின் கூற்று சுயநலவாதிகளின் கூற்றை உறுதிப்படுத்தியது. பெரும்பாலான மக்கள் தகுதி உள்ளவைகள் தப்பி பிழைத்துக் கொள்ளும் என்னும் பொய்யை நம்பி, அதை ஏற்றுக் கொண்டபடியால் வாழ்க்கையில் முதலிடம் என்னும் மனப்பான்மை மக்கள் மனதில் வேரூன்றத்தொடங்கியது. இவ்வகையான எண்ணம் கிறிஸ்தவ தன்மையை தரம் தாழ்த்துகிறது. எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் ஜாக்கிரதையாக இல்லாவிட்டால் நாம் உலகத்தைப் போலவே பார்க்க, பேச ,நடக்கத் தொடங்கி விடுவோம். அப்படிச்செய்தால் நம்மால் உலகத்திற்கு உப்பாக இருக்க முடியாது [மத்தேயு 5:13-16,44-48; 6:30-33].

அப்படியென்றால் என்ன செய்யப்பட வேண்டும்? சுயம் என்னும் தத்துவ ஞானத்திற்கு எதிராகக் கிறிஸ்தவர்கள் எப்படிப் போராட முடியும்? நாம் தேவனுடைய வார்த்தைகளில் நிலைத்து இருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து இவ்விதமாய்ச் சொன்னார்' இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள், **சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்** என்றார் [யோவான் 8:32].

நம்மிடம் சத்தியம் உள்ளது அரைகுறையான சத்தியமல்ல, முழுமையான சத்தியம் உள்ளது. நாம் அதிக நேரத்தை சத்தியத்தோடு செலவழிக்கிறோமா அல்லது திரைப்படங்கள் பார்ப்பது ,விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பது, விளையாடுவது இன்னும் பல பொழுதுபோக்கு அம்சங்களில் நம் நேரத்தை செலவழிக்கிறோமா? நம்முடைய இருதயம் எங்கே இருக்கிறது என்பதை நாம் சற்று நேர்மையாக மதிப்பீடு செய்து

பார்க்கலாம். பூமியிலே பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது என்பது சுய சேவையாகும். அதே நேரத்தில், பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைப்பது என்பது பிறருக்காக சேவை செய்வதாகும். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை.

உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் [மத்தேயு 6:21]. சுயத்தை நாடுதல் தண்டனைக்குரியது என்பதை நாள்தோறும் நாம் நினைவில் கொள்ள வேண்டும் [மத்தேயு 23:25;2கொரிந்தியர் 12:20; கலாத்தியர்5:20;2 பேதுரு2:9,10]. இந்த வசனப்பகுதிகளை எல்லாம் நன்றாக படித்துப் பார்த்து ஜெபத்திலே அதிக நேரத்தை செலவிட்டு சுயத்தை எப்படி மேற்கொண்டு,தேவனுக்கு மாத்திரம் சேவை செய்வது எப்படி என்பதை அறிந்து கொள்ளுங்கள்[ மத்தேயு 6:24; யாக்கோபு 3:13-18; ரோமர்12:1-2].'ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் [பிலிப்பியர் 2:3].

✝

## நம் ஜெபங்களுக்கு தேவன் ஐந்து விதங்களில் பதில் தருகிறார்

- ஆம் என்று சொல்வதன் மூலமாக (யாக்கோபு 5:17)
- இல்லை என்று சொல்வதன் மூலமாக (மத்தேயு 26:39-44)
- கொஞ்சம் காத்திருங்கள் என்று சொல்வதன் மூலமாக ( எரேமியா 42:4-7)
- மாற்றாக வேறொன்றை நமக்கு தருவதன் மூலமாக (2கொரிந்தியர் 12:7-9)
- நாம் ஜெபிப்பதற்கும் அதிகமாக நமக்குத் தருவதன் மூலமாக (எபேசியர் 5:20)

செயலில் கிறிஸ்தவம்

# நியாயமான சோதனை

## A Fair Test

Aaron Cozort

**பா**பிலோனின் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார், ஓர் ஆணையைப் பிறப்பித்தான். ராஜா தான் உண்ணும் போஜனத்திலேயும், தான் குடிக்கும் திராட்ச ரசத்திலேயும் தினம் ஒரு பங்கை தன் அரசாங்கத்தில் சேவை செய்ய பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த நான்கு வாலிபர்களுக்கும் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆனால், அந்த நான்கு வாலிபர்களும் ராஜா தங்களுக்கு ஒதுக்கிய போஜன பதார்த்தத்தையும், திராட்ச ரசத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா ஆகிய நான்கு வாலிபரும் யூதாவைச் சேர்ந்தவர்கள். இந்த நால்வரும் தான் யூதா தேசத்திலேயே மிகச் சிறந்தவர்களாக இருந்தார்கள். பாபிலோனிய ராஜா யூதாவை முற்றுகையிட்டபோது அவர் இந்த நால்வரையும், வேறு பலரையும் தன் அரமனையிலே சேவை செய்ய பயிற்சி அளிக்கும்படியாகக் கொண்டு போனார்.




தானியேலும், அவருடைய நண்பர்களும் ராஜாவால் நியமிக்கப்பட்ட உணவு வகைகள் ருசியுள்ளதாய் இருக்கும் என்பதை அறிந்திருந்தார்கள். அதே நேரத்தில் தேவன் மோசே மூலமாக தங்கள் முற்பிதாக்களிடத்தில் என்ன பேசினார் என்பதையும் அறிந்திருந்தார்கள். அதாவது, ருசியுள்ள அந்த ராஜ போஜனத்தையோ அல்லது போதை தரும் அந்த திராட்சரசத்தையோ ருசிபார்க்கக்கூடாது என்பதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அப்படிச் செய்வது தேவனுக்கு முன்பாக அவர்களை அசுத்தப்படுத்துவது மாத்திரமல்ல, தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமாக அவர்களை மாற்றும்.

எனவே, இந்த நால்வரும் தங்களுக்கு மாற்று ஆகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். தானியேல் ராஜ

போஜனத்தினாலும், திரட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக்கொண்டான். ஆனால், பிரதானிகளின் தலைவன் ராஜா தன்னை சிரச்சேதம் செய்வார் என்று பயந்து தானியேலின் விண்ணப்பத்திற்கு தயக்கம் காட்டினார்.

**தானியேல் மாற்றை நாடினார்.**

தானியேல் 1:12–13 வசனங்கள் இவ்விதமாகச் சொல்கின்றன. "அப்பொழுது பிரதானிகளின் தலைவனாலே, தானியேல், அனனியா, மீஷாவேல் அசரியா என்பவர்கள் மேல் விசாரிப்புக்காரனாக வைக்கப்பட்ட மேல்ஷார் என்பவனைத் தானியேல் நோக்கி : பத்துநாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப் பாரும். எங்களுக்குப் புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து, எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப்பாரும், என்று"

**சோதனை அங்கீகரிக்கப்பட்டது.**

**பத்துநாள் சென்ற பின்பு ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது** [தானியேல் 1:15]. தேவன் தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா போன்றோருடைய உண்மைத் தன்மைக்காக அவர்களை ஆசீர்வதித்தார். ஞானத்துக்கும், புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக்கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும், ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

இச்சம்பவத்திலிருந்து இங்கே நமக்கு சில பாடங்கள் உள்ளன. நன்மை, தீமை இரண்டில் ஒன்றைத் தெரிந்தெடுக்கும்படி நமக்கு சூழ்நிலை ஏற்பட்டால், நாம் முடிவெடுத்துவிட்டால், அவிசுவாசிகள் நம் வழியில் குறுக்கே தடையாக வரும்போது நாம் பின்வாங்கக்கூடாது. கடைசியாக, நாம் சரியான செயலை செய்யத் தெரிந்தெடுத்து, அதில் பொறுமையோடு நிலைத்திருக்கும் போது, தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாகி, நம்மை விசாரிக்கும் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

✝

# கொடுத்தல்
# Giving
*Dean Kelly*



கொடுத்தல் என்பது தேவனுடைய கட்டளை என்று பிரசங்கிக்கிற காரணத்தினால், அப்படி பிரசங்கிக்கிறவர்களைத் தாக்கி எழுதப்பட்ட பல கட்டுரைகளை நான் வாசித்திருக்கிறேன். இக்கட்டுரைகளின் நோக்கம் என்ன என்பதை கண்டுபிடிக்க நான் முயற்சிக்கிறேன். அப்படிச் செய்யும் போது கர்த்தருடைய நாளில் ஆராதிக்கும் போது சில காரியங்கள் காணப்பட வேண்டும் என்பதை இந்தக் கட்டுரைகளை எழுதிய ஆசிரியர்கள் எதிர்க்கிறார்கள் என்று நான் யூகிக்கிறேன். வேறு சிலர் வெளிப்படுத்திய எண்ணங்களின் கலவையை நான் கவனித்துப் பார்க்கும்போது சில காரியங்களைக் முக்கிய காரணிகளாக நான் பார்க்கிறேன். சிலருடைய வாதங்கள் இவ்விதமாய் இருக்கின்றன: கொடுத்தல் கட்டளையாக கொடுக்கப்பட்டிருந்தால் அது விசனமாயும், கட்டாயமாயும்தான் செய்யப்படும் (2 கொரிந்தியர் 9:7). 1கொரிந்தியர் 16:1-2; மற்றும் 2 கொரிந்தியர் 8:9 போன்ற வசனங்கள் நமக்குப் பொருந்தாது. ஏனென்றால், இவ்வசனப் பகுதி ஒரு விசேஷித்த கொடுத்தலுக்காக அதாவது, பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப் பணமாக இருக்கிறது.

இப்போது நாம் சில காரியங்களை கவனிப்போம். முதலாவது, சில கட்டளைகளை நாம் கவனிப்போம்.. விசுவாசித்தல் (அப்போஸ்தலர்16:31) மனந்திரும்புதல் (அப்போஸ்தலர்2:38; 17:30) மற்றும் ஞானஸ்நானம் (அப்போஸ்தலர்10:48) இப்போது வைக்கும் வாதங்களை எடுத்துக்கொண்டு இந்தக் கட்டளைகளோடு நாம் ஆராய்ந்து பார்ப்போம். இந்த மூன்று காரியங்களுமே கட்டளையிடப்பட்டிருக்கிறபடியால் இவைகள் குறிப்பாக கட்டளைகள் என்றுதான் அழைக்கப்படுகின்றன. இக் கட்டளைகள் எல்லாம் விசனமாயும், கட்டாயமாயும் தான் செய்யப்பட வேண்டும் என்று பொருள்படாது. ஒருவரால் எவ்வித விசனமும் இல்லாமல் கட்டாயமும் இல்லாமல் காணிக்கை கொடுப்பது என்பது மாத்திரமல்ல அப்படி கொடுக்க வேண்டும் என்று உறுதியாக நான் வாதாடுகிறேன். எனவே, கொடுத்தல் என்னும் கட்டளைக்கு ஒருவர்

எவ்வித விசனமுமின்றி கட்டாயமுமின்றி கீழ்ப்படியமுடியும். ஏனென்றால், விவாசித்தல், மனந்திரும்புதல் ஞானஸ்நானம் பெறுதல் போன்ற கட்டளைகளை நாம் விசனத்தோடும், கட்டாயத்தோடும் செய்வதில்லையே!

மேற்ச்சொல்லப்பட்ட மூன்று கட்டளைகளுக்கும் பல வசனங்களை நம்மால் பட்டியலிட முடியும். வேத வாக்கியங்கள் தனித்தனியாகக் குறிப்பிட்டு நீங்கள் விசுவாசிக்க வேண்டும், மனந்திரும்ப வேண்டும் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று சுட்டிக் காட்டாது. ஒரு தனி நபராக நாம் தான் இது, எனக்கும் பொருந்தும் இந்தக் கட்டளைகளுக்கு நான் கீழ்படிய வேண்டும் என்று முடிவுக்கு வர வேண்டும்.

இங்கே பின்னணி என்னவென்றால், எருசலேமிலிருந்த ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவும்படியாக காணிக்கை சேகரிக்கப்பட்டது. சபையின் விசேஷித்த தேவைகள் சந்திக்கப்படும்படியாக சபை இப்படித்தான் கொடுக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும். இன்றைய நாட்களில் சத்தியத்தை சரியாக பிரசங்கிப்பவர்களை பொருத்தமற்ற முறையில் பரிகாசம் செய்வதும், இகழ்ந்து பேசுவதும் வாடிக்கையாகிவிட்டது. இன்றைய கட்டுரையாளர்கள் சத்தியத்தை சரியாகப் போதிக்கும் பிரசிங்கியார்களை அவமதிப்பதையும், அவமரியாதை செய்யும் போக்கையும் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இங்கே காணப்படும் மிக முக்கியமான கருத்து எளிமையானது. அப்போஸ்த லனாகிய பவுல் கொடுத்தலை கட்டளையாகத்தான் சொல்லியிருக்கிறார், இவ்விதமாக நிதி திரட்டுவது தான் வேத வாக்கியங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஒரே வழியாக உள்ளது. பவுல் 2 கொரிந்தியர் 8-9 அதிகாரங்களில் கொடுக்கும் மனப்பான்மை பற்றி விவாதிக்கிறார். மேலும், பவுல்8:8-12 வசனப் பகுதியில் அவர்களுக்கு என்ன இருந்ததோ அதிலிருந்துதான் கொடுக்கும் படியாக சொன்னாரே தவிர இல்லாதவை களிலிருந்து கொடுக்கும்படியாக ஒருபோதும் கட்டளையிடவில்லை. மேலும், அந்த ஜனங்கள் ஆயத்த மனதோடு கொடுக்க வேண்டுமென்று தனிப்பட்ட முறையில் தான் அவர்களை உற்சாகப்படுத்தினார். தேவனுடைய மற்ற கட்டளைகளுக்கு நாம் எப்படி மனப்பூர்வமாய் கீழ்ப்படிய வேண்டுமோ அதேபோல்தான் கொடுத்தல் என்னும் கட்டளைக்கும் நாம் மனப்பூர்வமாய் கீழ்ப்படிய வேண்டும். கொடுத்தல் என்பது தேவனுடைய கட்டளையில் குறைவான மதிப்புடைய ஒரு கட்டளை அல்ல என்பதை நாம் புரிந்து கொண்டு மனப்பூர்வமாய் அக்கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.

✝

ஆராதனை

## இயேசுவைப் பிரசங்கியுங்கள்

## Preach Jesus

*Cecil may, Jr*



அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பிரசங்கியார்கள் கர்த்தராகிய இயேசுவைப் பிரசங்கித்திருக்கிறார்கள் (அப்போஸ்தலர் 11:20). அப்போஸ் தலனாகிய பவுல் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை யேயன்றி வேறொன்றையும் அறியாதிருக்க தீர்மானித்திருந்ததாகச் சொல்கிறார் (1 கொரிந்தியர் 2:2). நாம் இயேசுவை அவருடைய போதனைகளை, வாழ்வை, மரணத்தை, உயிர்த்தெழுதலை அவர் பரமேறினதை பிரசங்கிக்க வேண்டும். மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார் (எபிரேயர் 7:25).

எத்தியோப்பிய மந்திரிக்கு இயேசுவைப் பிரசங்கித்தது என்பது ஞானஸ்நானத்தை பற்றியபிரசங்கத்தை உள்ளடக்கியதாகும் (அப்போஸ்தலர்8:35-38). எபேசு பட்டணத்தார் கிறிஸ்துவை கற்றுக் கொண்ட போது அவர்கள் ஒழுக்க ரீதியான பரிசுத்தமான வாழ்க்கை முறையை கற்றுக் கொண்டார்கள். அந்த வாழ்க்கை முறை புறஜாதிகளிடமிருந்து முற்றிலும் மாறுபட்ட வாழ்க்கை முறையாக இருந்தது (எபேசியர் 4:17-20).

கணவனும், மனைவியும் ஒருவருக்கொருவர் எப்படியாக நடந்து கொள்ள வேண்டும் (எபேசியர் 5:22,23) கிறிஸ்தவர்கள் வேலை ஸ்தலங்களில் எப்படியாக நடந்து கொள்ள வேண்டும் (கொலோசெயர் 3:22-24) கிறிஸ்தவர்கள் அநியாயமாய் பாடுபடும்போது எப்படி நடந்து கொள்ள வேண்டும்( 1 பேதுரு 2:19) கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எப்படியாய் மன்னிக்க வேண்டும் (எபேசியர் 4:32)போன்றவைகளை பற்றிய வேதாகமப் பிரசங்கங்கள் எல்லாமே கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்டவைகள் தான்.

# தனிமை

## Solitude

*Michael brooks*



உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்திற்குப் போகும்படி ஏவினார். அவர் வனாந்தரத்திலே நாற்பது நாள் இருந்து, சாத்தானால் சோதிக்கப்பட்டு, அங்கே காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக்கொண்டிருந்தார், தேவதூதர்கள் அவருக்கு ஊழியஞ்செய்தார்கள் [மாற்கு 1:13].


நான் தூர இடங்களுக்கு சில சமயம் பரிச்சயமற்ற இடங்களுக்கு பயணிக்கும் போது, என் வீட்டையும், குடும்பத்தையும், நண்பர்களையும், நான் வழக்கமாக செய்யும் வேலைகளையும் நினைத்து ஏங்குவேன். நான் எப்போதும் பரபரப்பாக ஜனங்களோடு இருந்தாலும் கூட நான் யாரோடு இருக்க வேண்டுமோ அவர்களோடு இல்லாதபடியினாலும், நான் வழக்கமாகச் செய்யும் வேலைகளை செய்யாதபடியினாலும் தனிமையாக இருப்பது போல் தான் உணர்வேன். ஏகாந்தம் என்பது நம்மில் பலர் சில சமயங்களில் அனுபவிக்கும் ஒரு தனிமையான நிலையாகும். பொதுவாக தனிமை என்பது ஒரு இனிமையான அனுபவம் அல்ல.

இயேசு கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெறும்படி யோர்தான் நதிக்கு போன பிறகு, அவர் வனாந்திரத்திற்கு போகும்படி ஆவியானவரால் ஏவப்பட்டார் அங்கே அவர் 40 நாட்கள் உபவாசம் இருந்தார். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் மனிதனாக இருந்தபடியால் அவருக்கு பசி, தாகம் போன்றவைகளெல்லாம் இருக்கத்தான் செய்தது. ஆனால், இங்கே மாற்கு ஆசிரியர் உண்மையாக நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தனிமையாக இல்லை என்று சொல்கிறார். சுவிசேஷ புத்தகத்தின் இரண்டாம் புத்தகமாகிய மாற்குவில் இரு வசனங்களை உள்ளடக்கிய

இந்தப் பகுதியில் நமக்கு அநேக பாடங்கள் உள்ளன. இதை நான் நாம் ஒருபோதும் தப்பிக்க முடியாத நான்கு காரியங்கள் என்று அழைப்பேன்.

**முதலாவது இயேசு ஆவியானவரால் ஏவப்பட்டார்**

இங்கே மாற்கு ஆசிரியர் தெரிந்து கொண்ட வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஆவியானவரால் வனாந்திரத்திற்கு போகும்படி ஏவப்பட்ட போது அவர் சுமார் 30 வயது உடையவராக இருந்தார். இயேசுவானவர் பன்னிரண்டாம் வயதிலிருந்து தம் தகப்பனுடைய தொழிலை செய்வதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார் (லூக்கா 2:41-52). இயேசு கிறிஸ்து தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தை தொடங்கவிருந்த காலம் அது, அப்போது ஒரு மாதத்திற்கு மேலாக வனாந்தரத்தில் நேரத்தைச் செலவழிக்க இயேசு விரும்பியிருக்க மாட்டார் என்று நான் நினைக்கிறேன். இருந்தபோதிலும், இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் 40 நாட்களை கழிக்க வேண்டியது தேவனுடைய திட்டமாக இருந்தது. இயேசுவால் தேவனுடைய ஆவியை தவிர்க்க முடியவில்லை அதாவது தேவனுடைய, நோக்கத்தையும் திட்டங்களையும் இயேசுவால் தவிர்க்க முடியவில்லை.



நம்மால் அப்படி செய்ய முடியாது. நம்மால் ஆவியை அலட்சியப்படுத்த முடியும், ஆவிக்கு கீழ்படியாமல் போக முடியும், ஆவியை அணைத்து போட முடியும். ஆனால், தேவனுடைய நோக்கங்களிலிருந்து நாம் ஒருபோதும் தப்பித்துக் கொள்ளவே முடியாது.

**இரண்டாவது சரீரப்பிரகாரமான சூழ்நிலைகளிலிருந்து நம்மால் தப்ப முடியாது.**

இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்தாலும் கூட அவரால் உஷ்ணம், குளிர், மலை, வெயில் என்ற எல்லாவிதமான தட்பவெட்ப நிலைகளையும் உணர முடிந்தது. மேலும், அவர் நம் எல்லோரையும் போலவே பலவிதமான ஆபத்துகளுக்கும் உட்படுத்தப்பட்டார். எனவேதான், மாற்கு ஆசிரியர் இயேசு கிறிஸ்து காட்டு மிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் என்று சொல்லுகிறார். நாம் இவ்வுலகில் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான திறவுகோல் சூழ்நிலைகளை

ஏற்றுக் கொள்வதும் அவைகளை விடாமுயற்சியுடன் மேற்கொள் வதுமாகும். அப்போஸ்தலனாகிய பவுல் இதை உணர்ந்தவராகத்தான் பிலிப்பியர் 4:11-ல் இவ்விதமாய் சொல்லுகிறார்: என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை. ஏனெனில், நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன் [பிலிப்பியர் 4:11].

உஷ்ணம்,குளிர், மழை, வறட்சி போன்றவைகளைப்பற்றி முறுமுறுப்பதற்கு பதிலாக அல்லது முறையிடுவதற்கு பதிலாக தேவன் தந்த இந்த உலகத்தின் மதிப்பை உணர்ந்து கொள்ளவும், எல்லா சூழ்நிலைகளுக்கும் தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கும் கற்றுக் கொள்வோம்.

**மூன்றாவது தீமையையும்,சோதனையையும் எதிர்கொள்ளாமல் நம்மால் தப்பவே முடியாது.**

கடினமான சூழ்நிலையில் இயேசு கிறிஸ்து தனியாக இருந்தபோது சாத்தான் அவரைப் பல விதங்களில் சோதித்து இயேசு தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றாமல் போகும்படி முயற்சித்தான். ஆனால், சாத்தானால் எதையுமே சாதிக்க முடியவில்லை என்பதை நாம் வாசிக்க முடியும்.

ஒருமுறை தன் மனைவிக்கு உண்மையாய் இருக்க முடியவில்லை என்று என்னிடம் ஆலோசனைக்காக வந்த ஒரு நபரிடம் சில காரியங்களை நான் கேட்டறிந்தேன். அந்த நபர் வழக்கமாக குடிப்பதற்காக மதுபான கடைக்கு செல்வதையும், அதன் அருகில் நிற்கும் பெண்களிடம் தவறான உறவு கொள்வதற்காக அவர்களிடம் பழகுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்ததாக என்னிடம் சொன்னார். அப்பொழுது நான் அந்த நபரிடம் அப்படி யென்றால் மதுபான கடைக்கு போவதை நீங்கள் தவிர்க்கவும் என்று சொன்னேன். இங்கே இடம் முக்கியமல்ல சுயக் கட்டுப்பாடு இல்லை என்று சொன்னால் எந்த இடத்திலேயும் ஒருவர் சோதனையில் விழுவதற்கு அதிக வாய்ப்புகள் உண்டு.

நாம் எங்கே இருக்கிறோம் என்பது ஒரு பிரச்சனை அல்ல. பல பெற்றோர்கள் அரசு பள்ளிகளுக்கு தங்கள் பிள்ளைகள் சென்றால் அங்கே அவர்கள் எதிர்கொள்ளும் சோதனைகளுக்கு அடிபணிந்து விடுவார்கள் என்னும் அச்சத்தால் தனியார் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள். பல தனியார் பள்ளிகளில் போதை வஸ்துகள், வன்முறை,இன்னும் பல பிரச்சினைகளை பிள்ளைகள் எதிர்கொள்ளாமல் இருப்பது உண்மையாக இருந்தாலும் கூட சோதனைகள் பல உருவங்களில் வருவதை நம்மால் தவிர்க்கவோ தடுக்கவோமுடியாது. பாவம் முற்றிலுமே இல்லை என்று சொல்லும் ஒரு இடம் இவ்வுலகில் இல்லவே இல்லை.

**நான்காவது தேவ தூதர்கள் இயேசுவுக்கு ஊழியஞ்செய்தார்கள்.**

தேவனுடைய கிருபையிலிருந்து நம்மால் ஒரு போதும் தப்பிக்கவே முடியாது. நாம் எவ்வளவு பாவிகளாக இருந்தாலும் தேவனிடத்திலிருந்து பிரிந்து சென்றாலும் நாம் எங்கு போனாலும் தேவனுடைய அன்பை நாம் கண்டடைய முடியும். அது மாத்திரமல்ல, நாம் மனந்திரும்பி அவரிடத்தில் திரும்பும்போது தேவனுடைய கிருபை நம்மை சுத்திகரிக்கும். இவ்வுலகிலுள்ள எந்த ஒரு சிருஷ்டியும் கிறிஸ்து இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய அன்பிலிருந்து நம்மை பிரிக்கவே முடியாது (ரோமர் 8:39).

நாம் தேவனுடைய கிருபையை மறுக்கவோ, எதிர்க்கவோ முடியும்ல. ஆனால், அதன் எல்லைக்கு அப்பால் நம்மால் போகவே முடியாது. அதே நேரத்தில், நாம் மனந்திரும்பி கிறிஸ்துவின் தியாகத்தை உணர்ந்தவர்களாய் தேவனிடத்தில் திரும்பும்போது அவர் நம்மை அரவணைத்து ஆசீர்வாதங்களை அளிக்க வல்லவராயிருக்கிறார் (1யோவான் 1:5–10).

✝

## கேளுங்கள்

கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதைகள் வழியருகே விழுந்தது; ஆகாயத்துப் பறவைகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டது. சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது; அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது; வெயில் ஏறினபோதோ, தீய்ந்துபோய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று. சிலவிதைகள் முள்ளுள்ள இடங்களில் விழுந்தது; முள் வளர்ந்து, அது பலன் கொடாதபடி, அதை நெருக்கிப் போட்டது. சிலவிதைகள் நல்ல நிலத்தில் விழுந்தது, ஓங்கி வளருகிற பயிராகி ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும். ஒன்று நூறுமாகப் பலன் தந்தது. கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.... விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான் ***(மாற்கு.4:3–9,14).***

# கிறிஸ்துவின் சேனையில் போர்ச்சேவகர்களின் சீருடை

## The uniform of soldiers in the Army of Christ

*Ardron Hinton*

நம்முடைய வசனப் பகுதியான எபேசியர் 6:10–20 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் ராஜ்ஜியம் அந்தக்காரத்தின் ராஜ்ஜியத்தோடு ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக நமக்கு நினைப்பூட்டுகிறார். [கொலோ 1:13; வெளி 12:17]. இந்த யுத்தம் சரீர சக்திகளுக்கான யுத்தமல்ல. மாறாக, இது உண்மைக்கும் பொய்யுக்கும் இடையேயான யுத்தமாகும் . அதுபோல, இது நன்மைக்கும், தீமைக்கும் இடையேயான யுத்தமாகும். கிறிஸ்தவர்கள் பிசாசின் சேனைகளோடு யுத்தம் செய்து அவர்களை வீழ்த்த எப்போதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். கிறிஸ்துவின் எதிரிகளை தோற்கடிக்க, நாம் எவ்விதமான ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி கீழ்கண்டவாறு காண முடியும். கிறிஸ்துவின் போர்ச் சேவகர்களால் அணியப்படும் உடையின் ஒவ்வொரு பகுதியையும், தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்வதின் அவசியத்தையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

1. **சத்தியம் என்னும் கச்சை** - ஒருவருடைய உடலின் நடுப்பகுதியில் அணியப்படும் இந்தக் கச்சை ஆடை கீழே அவிழ்த்து விடாமல் பாதுகாப்பது மாத்திரமல்லாமல் மார்க்கவசத்தையும் தாங்கிப் பிடித்துக் கொள்கிறது. பிசாசுக்கு எதிரான நம்முடைய யுத்தத்தில் சத்தியம் மிகவும் அவசியமாயிருக்கிறது. நாம் அதை அறிய வேண்டும், விசுவாசிக்க வேண்டும், அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. **நீதி என்னும் மார்க்கவசம்** - சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளும் பாதுகாக்கப்பட வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய இருதயம் பாதுகாக்கப்பட வேண்டும், இது நீதியின் வேலையாயிருக்கிறது. இங்கே நீதி என்னும் வார்த்தை ஒருவர் நீதியான அல்லது சரியான வாழ்க்கை வாழ்வதைக் குறிக்கிறது. ஒருவர் தவறான வாழ்க்கை வாழும் போது அந்த நபரை நம்முடைய சத்துருவாகிய சாத்தான் ஆவிக்குரிய பிரகாரமாக கொல்வது எளிதாகி விடுகிறது.

3. **ஆயத்தம் என்னும் பாதரட்சை** - நாம் பாதரட்சையை அணியாமல் ஆடைகளை மாத்திரம் அணிந்திருந்தால் அது அதிக நன்மையை நமக்கு பயக்காது. இந்த கிறிஸ்தவ போர்ச்சேவகருக்கான சீருடைடையில்

சமாதானத்தின் சுவிசேஷத்தை ஆயத்தமாக்குவது அவசியமாய் இருக்கிறது. நாம் கர்த்தருக்கு எப்படி சேவை செய்வது என்பதை பற்றியும் ஆவியின் பட்டயத்தை எப்படி பயன்படுத்துவது என்பதைப் பற்றியும் சரியாக கற்றுக் கொள்ள வேண்டும்.

4. **விசுவாசமென்னும் கேடகம்** - சாத்தானின் ஆயுதங்களுக்கு எதிராக ஒரு கிறிஸ்தவனின் ஒட்டுமொத்த பாதுகாப்பும் கிறிஸ்தவனுடைய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவைப்பற்றியும்,அவருடைய போதனைகளைப் பற்றியும் என்ன விசுவாசிக்கிறீர்கள் அவருடைய வாக்குத்தத்தங்களை எப்படி உறுதியாக ஏற்றுக் கொள்கிறீர்கள் போன்றவைகள் எல்லாம் உங்கள் விசுவாசத்தில் உள்ளடக்கம். அதாவது, இவைகளை உள்ளடக்கியவைகள்தான் விசுவாசமாயிருக்கிறது. உங்களுக்கு போதுமான அளவு விசுவாசம் இல்லையென்றால், பிசாசு உங்களை பாதுகாக்கின்ற கேடகத்தில் ஒரு ஓட்டையை கண்டுபிடித்து நீங்கள் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உறவை முற்றிலுமாய் அழித்துப் போடுவான்.

5. **இரட்சணியமென்னும் தலைச்சீரா** - நம்முடைய ஒட்டுமொத்த சரீரத்தையும் கட்டுப்படுத்தும் மையமாக தலை இருக்கிறபடியால் அது எல்லா விதத்திலும் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த ஆவிக்குரிய சீருடையில், இரட்சிப்புத்தான் நம் கட்டுப்பாட்டு மையத்தை பாதுகாக்கிறது. கிறிஸ்து எப்படி இரட்சிக்கிறார் என்பதை அறியாத ஒருவர் கிறிஸ்துவின் போதனைகளுக்கு கீழ்ப்படியாத ஒருவர் ஆவிக்குரிய கட்டுப்பாட்டு மையத்திற்கு எவ்வித பாதுகாப்புமின்றி சாத்தானோடு விருதாவாக போர்ச்செய்கிறார். இத்தகைய ஒருவர் சாத்தானோடு போரிட்டு வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு முற்றிலுமாக இல்லை.

6. **ஆவியின் பட்டயம்** - எந்த ஒரு போரிலும் ஒரு போர் வீரனுக்கு ஆயுதம் அவசியமாயிருக்கிறது. இந்த ஆவிக்குரிய யுத்தத்தில் நம்முடைய ஆயுதம் ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தை தான். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவன் இந்த உலகத்திற்கு அனுப்பிய செய்தி தான் இவ்வுலகில் காணப்படும் தவறான எண்ணங்கள் மற்றும் கள்ள உபதேசங்களை அழிப்பதற்கான நம்முடைய ஆயுதமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டின் போதனைகளை சத்தியத்தின் சத்துருக்களை அமைதிப்படுத்துவதற்காக அடிக்கடி பயன்படுத்தியிருக்கிறார் ( இயேசு கிறிஸ்து பழைய பிரமாணத்தின் கீழ்தான் வாழ்ந்தார் ). ஆனால், அப்போது வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை விட இன்றைய நாட்களில் வாழும் நமக்கு கிறிஸ்துவின் உபதேசத்தை புதிய ஏற்பாட்டிலே அப்போஸ்தலர்கள் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால் நாம் பாக்கியவான்கள் ( எபிரேயர் 1:1-2 ; 2:1-4 ; யோவான் 16:13 ; 2 பேதுரு 1:2-4 ).

## விசேஷமாக உண்டாக்கப்பட்டார்கள்
## Especially made
*Betty burton choate*



இன்றைய உலகில் பெண்களைப் பற்றி பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் பெண் என்பவள் கூலி கொடுக்கப்படாத வேலைக்காரியை விட சற்று மேலானவள், அவள் தன் கணவனுடைய விருப்பங்களை நிறைவேற்றும் படியும் அவனுடைய தேவைகளை சந்திக்கும்படியும் அனுதினம் கணக்கில்லா மணிநேரங்கள் வேலை செய்யும்படி கடமைப்பட்டிருக்கிறாள் என்று எண்ணுகிறார்கள்.

ஆனால், அதே நேரத்தில் மறுமுனையில் நாம் பார்க்கும் போது, இன்றைய நவநாகரிக மங்கைகள் ஆண்களின் உலகில் அத்துமீறி தங்களை ஆண்களுக்கு சமமாக பாவித்து கொண்டு தாங்கள் விரும்பியபடி செய்கிறார்கள். இன்னும் சில பெண்கள் ஒரு படி மேலே சென்று ஆண்களுக்கு என்னென்ன சுதந்திரமும் சலுகைகளும் உள்ளதோ அவைகளெல்லாம் தங்களுக்கும் வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்துப் போராடுகிறார்கள். அப்படிப் போராடும் அதே நேரத்தில் தாங்கள் பெண்கள் என்பதால் தங்களுக்கு கருணை காட்ட வேண்டும் என்றும், சில சிறப்பு சலுகைகளை அளிக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள். இவ்வகையான பெண்கள் உண்மையாக விரும்புவதெல்லாம் சலுகைகளும் ,பொறுப்புகளிலிருந்து விடுதலையும் தான்.

மேற்சொல்லப்பட்ட இரண்டு மிஞ்சிய நிலைபாடுகளுமே தவறானவைகள் தான். அதைத் தாண்டி ஒரு பெண் என்ன நோக்கத்திற்காக தேவனால் உண்டாக்கப்பட்டாளோ அவ்வகையான பெண்ணைப்பற்றி தான் நாம் பார்க்க போகிறோம். ஆதியிலே அந்த ஏதேன் தோட்டத்து காட்சியை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் மகுடமாகிய மனிதனுக்காக ஒரு அருமையான இடத்தை அதாவது ஒரு குட்டிப் பரலோகத்தை ஆயத்தமாக்கியிருந்தார். தேவன் மனிதனை மண்ணிலிருந்து தம்முடைய சாயலில் அன்பாகவும், அருமையாகவும் உருவாக்கினார். பின்பு தேவன்

அவனுடைய நாசியில் ஜீவ சுவாசத்தை ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். முதல் மனிதனாகிய ஆதாம் இயங்கும் திறனுடனும் சிந்திக்கும் திறனுடனும், தேவனுடைய ஒழுக்க ரீதியான திட்டங்களை தன் மனசாட்சியில் பதிக்கப்பட்டவனாக உண்டாக்கப்பட்டான்.

படைப்பின்போது மற்ற ஜீவராசிகள் எல்லாம் ஜோடி ஜோடியாக படைக்கப்பட்டன, ஆதாமுக்கு மாத்திரம் ஏற்ற துணை உருவாக்கப் படவில்லை. மற்ற ஜீவராசிகள் எல்லாவற்றையும் தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார். பின்பு தேவன்: பூமியானது ஜாதி ஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டுமிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டுமிருகங்களையும், ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. (ஆதியாகமம் 1:22,24) என்று தேவனிடமிருந்து கட்டளை பெற்றன. இப்படி மற்ற ஜீவராசிகள் எல்லாம் தேவனால் ஜோடி ஜோடியாக படைக்கப்பட்டிருக்க, ஆதாம் தனியாக இருந்தான். ஆதாமுக்கு ஏற்ற துணை இன்னும் காணப்படவில்லை (ஆதியாகமம் 2:20). அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான். அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமாய் இருக்கிறாள். இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் (ஆதியாகமம் 2:21-24).

**மேற்சொல்லப்பட்ட வசனங்களில் இருந்து நாம் எதை கற்றுக் கொள்கிறோம்?**

1 மனிதன் தனியாக முழுமை பெற்றவனாக இருக்க முடியாது.

2 மனுஷியை உண்டாக்கியதற்கான தேவனுடைய நோக்கம் மனிதனுக்கு ஒப்பாக ஒரு துணையை வடிவமைப்பதாக்த்தான் இருந்தது. அதாவது, ஒரு ஆண் கடுமையாக இருக்கும் போது அந்த கடுமையை மிருதுவாக்குவதற்கும்,மனிதனுடைய பலவீனத்தில் அவனுக்கு பெலன் கொடுக்கும் படியாகவும் இவ்விதமாய் சரீரப்பிரகாரமாகவும் ,உணர்வுபூர்வமாகவும் ,ஆவிக்குரியப்பிரகாரமாகவும் மனுஷனும் மனுஷியும் ஒன்றிலும் குறைவுபடாதவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் தேவன் மனுஷியை அவ்விதமாய் சிருஷ்டித்தார்.

3. பெண் வேறொரு களி மண்ணிலிருந்து உண்டாக்கப்படவில்லை. ஆனால், அவள் மனிதனிடமிருந்து உருவாக்கப்பட்டாள். அதன் காரணமாக, தேவன் மனுஷனிடமிருந்தும், மனுஷியிடமிருந்தும் எதிர்பார்க்கின்ற ஒருமைத்தன்மையை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

4 ஒரு ஆணும், பெண்ணும் விவாகம் செய்து கொள்ளும்போது அவர்கள் ஒருவருக்கொருவர் வாழ்க்கை முழுவதும் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

எனவே, ஜீவனுள்ளோர் எல்லோருக்கும் தாயாகிய ஏவாள் ஆதாமுக்காக விசேஷத்தவிதமாக உண்டாக்கப்பட்டவள். தொன்று தொட்டு வரலாறு முழுவதும் பார்த்தால் ஒரு நல்ல மனைவி அவளுடைய கணவனுக்கும், வீட்டுக்கும் தேவனுடைய மிகப்பெரிய வெகுமதியாக இருக்கிறாள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும்.

## தேவனுடைய வார்த்தையை

1. பிரசங்க மேடை வேகத்தில் வேதத்தை வாசித்து முடிக்க 70 மணி நேரம் 40 நிமிடம் ஆகும்.
2. பழைய ஏற்பாட்டை வாசிக்க 52 மணி நேரம் 20 நிமிடங்கள் ஆகும்.
3. புதிய ஏற்பாட்டை வாசிக்க 18 மணி நேரம் 20 நிமிடங்கள் ஆகும்.
4. பழைய ஏற்பாட்டில் நீண்ட அதிகாரங்களை உடைய சங்கீதப் புத்தகத்தை வாசிக்க 4 மணிநேரம் 28 நிமிடங்கள் ஆகும்.
5. புதிய ஏற்பாட்டில் அதிகமான அதிகாரங்களை உடைய லூக்கா நற்செய்தி நூலை வாசிக்க 2 மணிநேரம் 43 நிமிடங்கள் ஆகும்.

தேவனுடைய வார்த்தையை வாசிப்பதை விட உங்கள் நேரத்தை செலவு செய்ய சிறந்த வழி உங்களிடம் உண்மையாகவே இருக்கிறதா?

## வசன ஆராய்ச்சி

## 1 கொரிந்தியர் 15:29-49

*Jerry Bates*

1. ஏன் பவுல் தான் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாய் இருக்கிறதாக சொல்கிறார்?

2. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், எந்த வழக்கத்தின்படி அல்லது தத்துவ ஞானத்தின்படி மனிதர்கள் வாழ வேண்டும்?

3. ஆகாத, சம்பாஷணைகள் ...................... கெடுக்கும் (வசனம் 33)

4. கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று பவுல் அவர்களை உற்சாகப்படுத்தினார்? (வசனம் 34).

5. உயிர்த்தெழுதலைப் பரிகாசம் செய்யும்படி சந்தேகப் பேர்வழிகள் எழுப்பும் கேள்வி என்ன? (வசனம் 35)

6. உயிர்த்தெழுதலுக்கு பிறகு நமக்கு எவ்விதமான மேனி கொடுக்கப்படும் மற்றும் அந்த மேனியை யார் கொடுப்பதாக பவுல் சொல்கிறார்?

7. எத்தனை வகையான மாம்சங்கள் உள்ளன?

8. வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமையும் பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் ஒரே மாதிரியானதா?

9. அழிவுள்ளதாய் விதைக்கப்படும்......... எழுந்திருக்கும்

10. ................. சரீர முண்டு ....................... சரீர முண்டு.

11. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் .................. ஆவியானார். 1 கொரி. 15:45

**12.** முந்தின மனுஷன் .................... மண்ணானவன். இரண்டாம் மனுஷன் .................. வந்த கர்த்தர்' (1 கொரிந்தியர் 15:47).

**13.** நாம் உயிர்த்தெழுந்த பிறகு எந்த சாயலில் இருப்போம் (வசனம் 49)?
1 கொரிந்தியர் 15:29–49

மேலும், மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?

நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன். அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேனென்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன். அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனமென்ன? மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே?

மோசம்போகாதிருங்கள், ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ்செய்யாமல், நீதிக்கேற்கப விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள். சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே. உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன். ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அதற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல. மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு. வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே. சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே. மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய்

விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். ஜென்மசரீரமுண்டு, அவிக்குரிய சரீரமுண்டு. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும், ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே. வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும், மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். (1 கொரி 15:29-49).

✝

## உங்கள் குழந்தை தகுதி பெற்றிருக்கிறது

- ★ **உங்கள் குழந்தை** நீங்கள் ஜெபிப்பதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிறது.
- ★ **உங்கள் குழந்தை** உங்களோடு ஆராதனைக்கும் வேதபாட வகுப்புகளுக்கும் வரத் தகுதி பெற்றிருக்கிறது.
- ★ **உங்கள் குழந்தை நீங்கள் கர்த்தருக்காகத் தியாகம் பண்ணுவதைக் காணத் தகுதி பெற்றிருக்கிறது.**
- ★ **உங்கள் குழந்தை** நீங்கள் கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லுவதைக் கேட்கத் தகுதி பெற்றிருக்கிறது.

# A wise son and a Foolish son


# புத்தியுள்ள மகன் புத்தி இல்லாத மகன்

*Aaron cozort*

**நீ**தி உள்ள எந்த ஒரு தகப்பனும் தன் பிள்ளைகளை நீதியின் பாதையில் நடத்த வாய்ப்புகளை எதிர்நோக்குகிறான். மேலும், ஒரு தகப்பன் தன் பிள்ளைகள் வளர்வதைக் கண்டு, வருங்காலத்தில் ஏதோ ஒரு நாள் தன் பிள்ளைகள் உண்மையின் பாதையில் நடந்து கர்த்தருக்கு கீழ்ப் படிவார்கள் என்று கற்பனை செய்கிறார். தன் பிள்ளைகள் தேவ பக்தியிலும், நீதியிலும், அன்பிலும் வளர்ந்து அவைகளை வெளிப்படுத்தும் போது இந்த இருதயம் களி கூருகிறது. மேற்ச்சொல்லப்பட்ட காரியங்களும் இன்னும் சில காரியங்களும் ஒரு ஞானம் உள்ள குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

நீதிமொழிகள் புத்தகத்தில் ஞானம் என்னும் வார்த்தை பலமுறை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீதிமொழிகள் 9:10-ல், நாம் இவ்விதமாய் வாசிக்கிறோம். கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு [நீதிமொழிகள் 9:10]. ஞானம் கர்த்தருக்கு பயப்படுவதினால் ஆரம்பமாகிறதென்றால், ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக இருந்து கொண்டு உண்மையான ஞானத்தை ஒருபோதும் பெற்றுக் கொள்ளவே முடியாது. இதைப் பற்றி யாக்கோபு ஆசிரியர் இவ்விதமாய் சொல்கிறார். உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும், விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும், விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு. பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானம் சாந்தம் இணக்கள்ளதாகவும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. [யாக்கோபு3:13-18].

ஞானத்தின் ஆதாரம் நீதியுள்ள நடக்கையை நடப்பிப்பதுதான். ஒருவர் தன்னை ஒரு பெரிய ஞானியாகக் காட்டிக் கொள்ளலாம். ஆனால், அந்த நபர் உட்புறமாக அநீதியில் ஞானியாக இருக்கலாம், நீதியில் ஞானியாக இருக்க முடியாது. இவ்வகையான துன்மார்க்கமான நடத்தையை ஒரு வகையான ஞானம் என்று யாக்கோபு விவரிப்பதை நாம் கவனிக்க வேண்டும். ஆனால், இவ்வகையான ஞானம் தேவனிடத்திலிருந்து வராதபடியால் இது எந்த நன்மையையும் கொண்டு வராது. உண்மையில் இவ்வகையான ஞானம் முட்டாள்தனமானது. எனவேதான், சாலமோன் ஞானி இது ஒரு தாய்க்கு சஞ்சலத்தை ஏற்படுத்தும் என்று சொல்கிறார்..



ஒரு தேவ பக்திக்குரிய தாய், தன் மகன் பொறாமை இச்சை மற்றும் உலகப் பிரகாரமான காரியங்களால் நிறைந்திருக்கிறான் என்பதை உணரும் போது அது அவர்களுடைய இருதயத்தில் சொல்லொண்ணா துயரத்தை உண்டாக்குகிறது. அந்தத் தாயின் மனம் வாழ்நாள் முழுவதும் தன் மகனை சரியான திசையில் திருப்ப வார்த்தைகளைத் தேடிக்கொண்டே இருக்கிறது. இருந்தபோதிலும், தன் வாயின் வார்த்தைகளின் படி அல்ல, சரியான திசையில் திரும்ப தன் மகன்தான் ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று அறிந்து கொள்கிறாள்.

இருதயத்தில் ஞானமுள்ளவன் கட்டளைகளை ஏற்றுக்கொள்கிறான்: அலப்புகிற மூடன் விழுவான். உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான் [நீதிமொழிகள் 10:8,9] நீங்கள் நீதியுள்ள பெற்றோரின் மகனாக அல்லது மகளாக இருக்கிறீர்களா? நீங்கள் எந்த பாதையை தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள்? நீங்கள் உங்கள் தாய்க்கு சஞ்சலத்தை ஏற்படுத்துகிறவர்களாக இருந்தால், நீங்கள் இன்றே ஞானத்தின் இடத்திற்கு திரும்பி நீதியின் கனியை கொடுக்க தொடங்குவீர்களா? சாலொமோனின் நீதிமொழிகள்: ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சலமாயிருக்கிறான் [நீதிமொழிகள் 10:1].

✝

# தன் குமாரனை தேவனுக்கு அர்ப்பணித்த பெண்ணாகிய அன்னாள்

## Hannah, a woman who dedicated her son to God.

*Gary C. Hampton*

அன்னாள் தனக்கு பிள்ளைகள் இல்லாதபடியால் மிகவும் துக்கம் அடைந்தாள். இது அவள் கணவனாகிய எல்க்கானாவை அதிகமாக சஞ்சலப்படுத்தியது (1 சாமுவேல் 1:2,7–8). அன்னாள் தன் மன துயரத்தை தேவனிடத்தில் ஜெபத்தின் மூலமாகக் கொண்டு போனாள் (1 சாமுவேல் 1:10–11). அன்னாள் பிள்ளைகள் வேண்டி தேவனிடத்தில் விண்ணப்பித்தது பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்பதற்கு ஒத்ததாயிருக்கிறது (ஆதியாகமம்33:5; சங்கீதம்127:3). பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்பதை நாம் ஒத்துக் கொள்வது தேவனுக்கு பிரியமாக நாம் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்பதின் முக்கியத்துவத்தை நாம் உணரத் தூண்டுகிறதாக இருக்க வேண்டும்.

அன்னாள் தேவனால் தனக்கு கொடுக்கப்பட்ட குமாரனுக்கு கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு சாமுவேல் என்று பேரிட்டாள். அது மாத்திரமல்லாமல், தேவனிடத்தில் இருந்து தான் பெற்றுக் கொண்ட ஈவை மறுபடியும் தேவனிடத்திற்கே அர்ப்பணித்தாள் (1 சாமுவேல் 1:20,28). பிள்ளைகளை கர்த்தருக்கு அர்ப்பணிப்பது என்பது வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் பிள்ளைகள் கர்த்தருக்கு முதலிடத்தை கொடுக்க அவர்களை உற்சாகப்படுத்துகிறதை உள்ளடக்கியதாக இருக்கிறது. சாமுவேலை வளர்ப்பதில் அன்னாள் அத்தனை அக்கறை காட்டினபடியால் தேவன் அவளுடைய முயற்சிகள் எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் (1 சாமுவேல் 2:10–21). நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்போலவே சாமுவேலும் **ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய்** விருத்தியடைந்தார் (1 சாமுவேல் 2:26; லூக்கா 2:52). தீமோத்தேயுவின் தாயும், பாட்டியும் தீமோத்தேயுவிற்கு பரிசுத்த வேத எழுத்துக்களை சிறு வயது முதல் போதித்தார்கள். நாம் நம் பிள்ளைகளுக்கு சிறு வயது முதலே பரிசுத்த வேத எழுத்துக்களை போதிக்க ஆரம்பிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 3:14,15).

ஏலியின் குமாரர்கள் தேவனை கனம் பண்ணாதபடியினால் அவர்கள் தேவனுடைய உறவிலிருந்து முறிந்து போனார்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் தன்னுடைய இருதயத்தின் விருப்பத்தை நிறைவேற்றும் ஓர்

உண்மையுள்ள தீர்க்கதரிசியை எழுப்புவதாகச் சொன்னார் (1 சாமு 2:27-35). ஏலி இஸ்ரவேலிலே ஓர் ஆசாரியனாகவும், நியாயாதிபதியாகவும் இருந்தார். ஏலி மரித்த பின்பு அப்பொறுப்பை சாமுவேல் ஏற்றுக்கொண்டார். சாமுவேலின் முயற்சியினால் இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரை மாத்திரமே சேவித்தார்கள் (1 சாமுவேல்7:3-4). அன்னாள் தன் குமாரனை கர்த்தருக்கு அர்ப்பணித்ததை கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மத்தியில் மிகுந்த கனிகளை உண்டாக்கும்படி பயன்படுத்தினார்.

நாம் நம்முடைய மனதுயரங்களை ஜெபத்தின் மூலமாக கர்த்தரிடத்திற்கு கொண்டு செல்ல இந்த அன்னாளின் உதாரணத்தை பின்பற்ற வேண்டும். நம் பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். நம் பிள்ளைகளின் வாழ்வு தேவனிடத்தில் அர்ப்பணிக்கப்பட வேண்டும். இங்கே அன்னாள் நம்முடைய பிள்ளைகளை நாம் தேவனுடைய மகிமைக்காக அர்ப்பணிக்கும்படி போதிக்கிறாள்.

## ஆராதனையில் பய பக்தி

- எப்படியாயினும் கிறிஸ்தவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளும் போது தேவனுடைய பிரசன்னத்தை உணர வேண்டும் (யோவான் 4:24)
- ஆராதனையில் நாம் காட்டும் பயபக்தியின் மூலமாக நம் மதிப்பையும், மரியாதையையும் தேவனுக்கு செலுத்த வேண்டும்.
- மற்ற எல்லோரையும் விட கிறிஸ்தவர்கள் ஆராதனையில் தங்கள் பயபக்தியை வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

## தீமோத்தேயுவின் தாய்

## The mother of Timothy

*Ernest S. Underwood*

*சா*லமோன் ஞானி இவ்விதமாய்ச் சொன்னார். **பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்** [நீதிமொழிகள் 22:6]. உங்களில் யாருக்காவது தீமோத் தேயுவின் தகப்பன் பெயர் தெரியுமா? எனக்கும் அந்தப் பெயர் தெரியாது. வேதாகமம் தீமோத்தேயுவின் தகப்பனை பற்றி சொல்வதெல்லாம் அவன் ஒரு புறஜாதியான் அதாவது ஒரு கிரேக்கன் என்பது மாத்திரமே. தீமோத்தேயுவின் வளர்ப்பில் அவருடைய தந்தைக்கு ஏதாவது பங்கு இருந்ததா என்று பார்த்தால், அதைக் குறித்து வேதாகமம் மௌனமாய் இருக்கிறது. அப்படியென்றால், யார் இந்த தீமோத்தேயு? இன்றைய கிறிஸ்தவர்கள் ஏன் இவரைப் பற்றி ஆர்வமாய் இருக்க வேண்டும் அல்லது அக்கறையாய் இருக்க வேண்டும்? கீழ்க்காணும் காரியங்களை கவனியுங்கள்:

நாம் முதலில் இந்த வாலிபனைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகள் 16 ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். அங்கே, இவ்விதமாய் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதன்பின்பு அவன் தெர்பைக்கும், லீஸ்தீராவுக்கும் போனான். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷன் இருந்தான். அவன் தாய் விசவாசமுள்ள யூதஸ்திரீ, அவன் தகப்பன் கிரேக்கன் [அப்போஸ்தலர் 16:1]. மேலும், இந்த வாலிபன் தெர்பையிலும் லீஸ்திராவிலும் உள்ள கிறிஸ்தவர்களால் நன்றாக பேசப்பட்டு இருக்கிறான் என்று நாம் அறிந்து கொள்கிறோம்.

இப்போது கேள்வி என்னவென்றால், இந்த இளம் வாலிபன் யாரால் வைத்து வைக்கப்பட்டான். யாரால் வளர்க்கப்பட்டான்? அவன் எதைக் கொண்டு பயிற்றுவிக்கப்பட்டான்? அப்போஸ்தலனாகிய பவுல் திமோத்யேவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் இவ்விதமாய் எழுதினார்.



அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன் [2 தீமோத்தேயு 1:5].

பிற்பாடு பவுல் தீமோத்தேயுவுக்கு இவ்விதமாய் எழுதினார்‘ நீ கற்று நிச்சயித்துக்கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். [2 தீமோத்தேயு 3:14,15]. மேலும், பவுல் பிலிப்பியருக்கு இவ்விதமாய் எழுதினார் 19 அன்றியும், நானும் உங்கள் செய்திகளை அறிந்து மனத்தேறுதல் அடையும்படிக்குச் சீக்கிரமாய்த் தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பலாமென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்பியிருக்கிறேன்.

அதேனென்றால், உங்கள் காரியங்களை உண்மையாய் விசாரிக்கிறதற்கு என்னைப்போல மனதுள்ளவன் அவனையன்றி வேறொருவனும் என்னிடத்திலில்லை. மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக்குரியவைகளையே தேடுகிறார்கள். தகப்பனுக்குப் பிள்ளை ஊழியஞ்செய்வதுபோல, அவன் என்னுடனேகூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ்செய்தானென்று அவனுடைய உத்தம குணத்தை அறிந்திருக்கிறீர்கள். ஆகையால், என் காரியங்கள் இன்னபடி நடக்கும் என்று நான் அறிந்தவுடனே அவனை அனுப்பலாமென்று நினைத்திருக்கிறேன். [பிலிப்பியர் 2:19–23].

இந்த இளம் வாலிபனாகிய தீமோத்தேயுவைக் குறித்து இன்னும் அநேக வசனங்களை நம்மால் மேற்கோள் காட்ட முடியும். அப்போஸ்தலனாகிய பவுல் ஏன் இந்த இளம் வாலிபனிடம் அவ்வளவு அன்பையும், நம்பிக்கையையும் கொண்டிருந்தார்? பவுல் இத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருக்க குறைந்தபட்சம் இரண்டு காரியங்கள் நம் கண்களுக்கு முன்பாகத் தோன்றுகிறது. முதலாவது, தேவனுடைய பரிசுத்த எழுத்துக்களை போதிக்கும் அளவுக்கு அன்பு கொண்ட தாயும், பாட்டியும் இருந்தார்கள். தீமோத்தேயுவும் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வேத எழுத்துக்களை ஆர்வமாக கற்றுக் கொண்டார். இரண்டாவது, இந்த தீமோத்தேயு பவுலை சந்தித்த அந்த முதல் நாளில் இருந்து, அப்போஸ்தலனுடைய மரணம் வரை அவரை ஒரு மாதிரியாக கொண்டு பின்பற்றி இருக்கிறார்.

கிறிஸ்தவ தாய்மார்களும், தகப்பன்மார்களும் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து: அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் [நீதிமொழிகள் 22:6]. என்று பெற்றோருக்கு கட்டளையிடும் வசனப்பகுதிகளை தழுவிக்கொள்ள வேண்டும் [நீதிமொழிகள் 22:6] பிள்ளை வளர்ப்பை வலியுறுத்துகின்ற ஒரு பிரபலமான வசன பகுதியாகும். அதே நேரத்தில் அநேக பெற்றோர்கள் அதிலும் குறிப்பாக, கர்த்தருடைய

சபையில் அங்கம் வகிக்கும் பெற்றோர்களும் கூட தேவனுடைய வார்த்தையை பிள்ளைகளுக்கு போதிக்காமல் இருப்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவ வீட்டின் குழந்தைகள் வேதாகம போதனையை கேட்பது ஞாயிற்றுக்கிழமை ஆராதனை வேளையில் பிரசங்கிக்கப்படும் அந்த 45 நிமிட பிரசங்கமாகத்தான் இருக்க முடியும். பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வேத பாட வகுப்பிற்கு கொண்டு வருவதே இல்லை. தாய்மார்களே ,தகப்பன்மார்களே நீங்கள் உங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து தேவனுடைய வார்த்தையைப் படிப்பதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒதுக்குகிறீர்களா? இங்கே இருதயத்தை நொறுக்கும் கேள்வி என்னவென்றால், இன்று நம் பிள்ளைகள் தங்கள் சிருஷ்டிகரை சந்திக்க நேர்ந்தால் தங்கள் நித்தியத்தை எங்கே செலவழிப்பார்கள்? என்பதுதான்.

## அப்படித்தானே?

**உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு நேரமாக அழைத்துச் செல்கிறீர்கள். ஆனால், ஆராதனைக்கு தாமதமாக அழைத்துச் செல்கிறீர்கள். அப்படித்தானே?**

**உங்கள் குழந்தைகளின் வீட்டு பாடங்களை தவறாமல் சோதித்துப் பார்க்கிறீர்கள். ஆனால், அவர்களுடைய வேத பாடங்களை ஒரு போதும் சோதித்துப் பார்ப்பதில்லை. அப்படித்தானே ?**

**உங்கள் குழந்தைகளுக்கு விருப்பமில்லாமல் இருந்தால் கூட அவர்கள் பள்ளிக்குப் போகாமல் இருப்பதை நீங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால், அவர்கள் ஆராதனையை தவற விட நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அப்படித்தானே?**

**உங்கள் குழந்தைகள் பள்ளிக்குச் செல்லும் நாட்களில் இரவு வேலைகளில் நீண்ட நேரம் கண் விழிக்க அவர்களை விடுவதில்லை. ஆனால், சனிக்கிழமை இரவுகளில் அதற்கு அனுமதி கொடுத்து விடுகிறீர்கள். அப்படித்தானே?**

# தேவன் தாக்குதலுக்குள்ளாகிறார்!

## God is under attack!

*Byron Nichols*

அருமையான நண்பர்களே, நான் இந்தக் கட்டுரையை பாரமான இருதயத்துடன் எழுதுகிறேன். நான் எழுதப்போகும் காரியம் மிகவும் சோககரமானது. ஆனால், அதே நேரத்தில் உண்மையானது. நாம் யுத்தத்தில் இருக்கிறோம். இந்த யுத்தம் அமெரிக்காவில் நடந்து கொண்டிருக்கிறது, உலகம் முழுவதிலும் நடந்து கொண்டிருக்கிறது. நான் இங்கே சொல்லும்போது ராணுவ யுத்தத்தைப்பற்றியோ,அரசியல் காரியங்களை குறித்தோ பேசவில்லை. மாறாக, ஆவிக்குரியக் காரியங்களை குறித்து பேசிக் கொண்டிருக்கிறேன். அதாவது, உலகெங்கும் மிகத் தீவிரமாக பரவி வரும் ஆவிக்குரிய யுத்தத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறேன்.

### இந்தக் கவலைக்கான காரணம் என்ன?

ஒரு காலை வேளையில் வழக்கம் போல் நான் கையில் கிடைத்த செய்தித்தாளைப் படித்துக் கொண்டே காலை ஆகாரத்தைப் புசித்துக் கொண்டிருந்தேன். அச்செய்தித்தாளில் நான் படித்த ஒரு கட்டுரை அந்த நாள் முழுவதையும் சீர் குலைத்து விட்டது. அக்கட்டுரையானது நாடு முழுவதும் உள்ள பல பத்திரிகைகளுக்கு தலையங்கம் எழுதும் ஒரு பிரசித்திப்பெற்ற நபரால் எழுதப்பட்டது. கட்டுரையின் தலைப்பு இவ்விதமாய் இருந்தது. **எப்போது கடவுள் தன் செயலுக்கு பொறுப் பேற்பார்?**. அக்கட்டுரையிலிருந்து குறிப்பாக நான் தெரிந்தெடுத்த சில காரியங்களை இப்போது நான் வெளிப்படுத்துகிறேன்.

பொதுவாக, நாம் யாவரும் வல்லவர் என்று சொல்லப்படும் இந்த கடவுளை அவருடைய செயல்பாடுகளுக்காக பொறுப்பேற்க வைப்ப தில்லை அல்லது அவர் மீது எந்த குற்றச்சாட்டையும் வைப்பதில்லை. காலையில் பனி மழைப்பொழிந்து,சுமார் இரண்டு அடி உயரத்துக்கு பனிக்கட்டிகள் குவியலாக கிடக்கும்போது மத்தியானத்திற்கு முன்பாகவே அதை அப்புறப்படுத்தவில்லை என்று நீங்கள் அரசாங்கத்தின் மீது பழியைப் போடுகிறீர்கள். ஆனால், அந்தப் பனிமழையைப் பெய்யச் செய்த கடவுளின் மீது எந்தப்பழியையும் போடுவதில்லை. அவரைக் குறித்து ஒரு வார்த்தையும் கூடப்பேசுவதில்லை. கடவுளில் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம்' என்று நம்முடைய மனதில் எழுதப்பட்டுள்ளது.

ஆனால், கடவுள் என்ன செய்வதாக நம்புகிறோம் என்று அதில் எழுதப்படவில்லை. நாம் கடவுள் நீதி உள்ளவராகவும், அன்பு உள்ளவராகவும் இருக்க வேண்டுமென்று நம்புகிறோமா? கடவுள் அப்படி இருப்பதாக நான் நம்பவில்லை. ஏன் என்று சொன்னால், அவர் அப்படி இருப்பது போல் எனக்கு தெரியவில்லை. ஒரு மோசமான நிலைமையை மிக மோசமான நிலைமைக்கு கொண்டு செல்ல கடவுளுடைய சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிட வேண்டாம். ஆனால், பெரும்பாலும் நம்முடைய மோசமான நிலைமைகளுக்கெல்லாம் அரசாங்கத்தின் மீதுதான் பழி போடப்படுகிறது.



நான் மேற்கோள் காட்டிய வாக்கியங்கள் எல்லாம் நம்முடைய சிருஷ்டிகரை இழிவுபடுத்தி, கேலிக்கூத்தாக்கி முட்டாள்த்தனமாக அந்த நபர் எழுதியவைகளில் ஒரு சிறு பகுதிதான். தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்துவருகிறார்கள், நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை (சங்கீதம் 14:1).

மேற்ச்சொல்லப்பட்ட கட்டுரையாளரும் வேறு சிலரும் கடவுள் என்று ஒருவர் இருந்தாலும் கூட அந்தக் கடவுள் பெலவீனரும் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டவருமாகத்தான் இருக்க வேண்டும் என நாம் நம்ப வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், ஆதியாகமம் புத்தகத்தில் சிருஷ்டிப்பை பற்றிய விவரிப்புகள் ஒன்றான மெய்தேவனைப்பற்றி இவர்கள் சொல்வது போல் அல்லாமல் முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் சொல்கிறது. நாம் அதை வைத்துப் பார்க்கும் போது, நம் தேவன் இந்த உலகத்தை உண்டாக்கினதோடு உலகின் சகல காரியங்களையும் அவர் கண்காணித்து, தம்முடைய சிருஷ்டிகளை அவர் பராமரித்து வருகிறார். ஒருவர் நம்முடைய சுற்றுப்புறத்தை சற்று உற்று நோக்கி மதிப்பீடு செய்தாலே தேவன் இருக்கிறார் என்பதையும், தேவனுடைய அன்பு மற்றும் வல்லமை எப்படிப்பட்டது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். ஆனால், அதற்கு ஒருவருக்கு நேர்மையான மனதிருக்க வேண்டும்.

சங்கீதம் 19:1 இவ்விதமாக அறிவிக்கிறது. ‘‘வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது’’ (சங்கீதம் 19:1). அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய தெய்வீகத் தன்மை பற்றியும், வல்லமை பற்றியும் ரோமர்1:20ல் இவ்விதமாய் எழுதுகிறார்.

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிற வைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால், அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை (ரோமர் 1:20). மேற்சொல்லப்பட்ட கட்டுரையாளரும் இன்னும் வேறு சில பேரும் நம்முடைய அன்பான தேவனை மிகவும் கடுமையானவராகக் காட்ட விரும்புகிறார்கள். அதாவது, ஒரு பெரிய தடியை எடுத்துக்கொண்டு உதவியற்றவர்களையும், நம்பிக்கையற்றவர்களையும் அழிக்கும் ஒருவராக காட்ட விரும்புகிறார்கள்.

நேர்மையான மற்றும் நியாயமான புத்தகமாகிய வேதாகமம் சூழ்நிலைகளைப் பொறுத்து அவர் கடுமையானவராகவும் இருக்க முடியும் என்று விவரிக்கிறது. ஆனால், பொதுவான அடிப்படையில் மிகவும் அன்பானவர் என்று வேதாகமம் விவரிக்கிறது. ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார், விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார், அந்தத்தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும், நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய் (ரோமர் 11:22). தேவன் எப்படிப்பட்டவர் என்பதை உண்மையாக அறிய விரும்பும் ஒருவர் தேவன் மிகவும் அன்புள்ளவர் என்பதை அறிந்து மகிழ்ச்சியில் மூழ்கி விடுவார். தேவன் அதிகமான அன்பு கொண்டவர். அதனால்தான் அப்போஸ்தலனாகிய யோவான் 1 யோவான்4:8 மற்றும்16 ஆம் வசனத்தில் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று நம்பிக்கையுடன் தெரிவிக்கிறார். மேலும், யோவான் தேவன் அன்பின் உருவமென்றும், அன்பிற்கு மிகச் சிறந்த உதாரணம் என்றும் உறுதிப்படுத்துகிறார். தேவன் நம்மிடத்தில் மிக உயர்வான அன்பை வெளிப்படுத்துகிறார்.

சாத்தானுடைய கைகளில் பகடைக்காய்களாக இருக்கும் பலரால் நம்முடைய தேவன் தாக்குதலுக்கு உட்படுத்தப்படுகிறார் என்பதை நாம் புரிந்து கொள்வது அவசியமாகும். நாம் ஒன்று இயேசுவுக்காக நிற்கிறோம் அல்லது அவருக்கு எதிராக நிற்கிறோம் என்று இயேசு கிறிஸ்து சொன்னார் (மத்தேயு 12:30). இது தேவனுடைய காரியத்திலும் உண்மையாயிருக்கிறது.

**நல் மீட்பர் பட்சம் நில்லும்** எனும் பாடலை நாம் பலமுறை பாடியிருக்கிறோம். நாம் கிறிஸ்தவர்களாக தேவனுக்காகவும் இயேசு கிறிஸ்துக்காகவும் நிற்கும் வேளை வந்துவிட்டது. பெயர் தெரியாத இந்த ஆசிரியரால் எழுதப்பட்ட வார்த்தைகள் நமக்கு மிகுந்த பயனுள்ளதாக இருக்கும் என்று சொல்லி நான் நம்புகிறேன்.

## வேதாகம கதாபாத்திரம்

# அலைந்து திரியும் கூடார வாசியிலிருந்து பட்டண வாசி வரை

## From wanderer to city &dweller

*Rebecca Rushmore*

ஆதியாகமம் 11:27 ல் லோத்து வேதாகமத்தில் அறிமுகமாகிறார். இவர் ஆபிரகாமின் சகோதரனாகிய ஆரானின் குமாரனாய் இருக்கிறார். ஆதியாகமம் 11:31 க்கும் 13:4 க்கும் இடையேயான வசனப் பகுதி ஆபிரகாம் மற்றும் லோத்து உட்பட அவருடைய குடும்பத்தினருடைய கூடார வாழ்க்கையைப் பற்றி விவரமாக விளக்குகிறது. அதிலும் குறிப்பாக, 13 ஆம் அதிகாரத்தின் ஐந்து மற்றும் ஆறு வசனங்கள் ஆபிரகாம் கொண்டிருந்த செல்வங்களைப் பற்றி விவரிக்கிறது. ஆபிராமுடனே வந்த லோத்துக்கும் ஆடுமாடுகளும் கூடாரங்களும் இருந்தன.

அவர்கள் ஒருமித்துக் குடியிருக்க அந்தப் பூமி அவர்களைத் தாங்கக்கூடாதிருந்தது. அவர்களுடைய ஆஸ்தி மிகுதியாயிருந்தபடியால், அவர்கள் ஒருமித்து வாசம்பண்ண ஏதுவில்லாமற்போயிற்று. செல்வச் செழிப்பின் காரணமாக ஆபிரகாமின் மந்தை மேய்ப்பருக்கும், லோத்தின் மந்தை மேய்ப்பருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது அதைத் தவிர்த்து சமாதானத்தை நிலை நாட்ட ஆபிரகாம் லோத்தை பார்த்து இவ்விதமாய் சொன்னார். ஆபிராம் லோத்தை நோக்கி: எனக்கும் உனக்கும், என் மேய்ப்பருக்கும் உன் மேய்ப்பருக்கும், வாக்குவாதம் வேண்டாம், நாம் சகோதரர்.

இந்தத் தேசமெல்லாம் உனக்குமுன் இருக்கிறது அல்லவா? நீ என்னை விட்டுப் பிரிந்துபோகலாம். நீ இடதுபுறம் போனால், நான் வலதுபுறம் போகிறேன். நீ வலதுபுறம் பேனால், நான் இடதுபுறம் போகிறேன் என்றான். (ஆதியாகமம் 13:8,9). ஆனால், லோத்துவோ யோர்தான் நதிக்கு அருகான சம பூமி முழுவதும் நீர் வளம் பொருந்தினதாய் இருக்க கண்டு யோர்தானுக்கு நேரே கூடாரம் போட்டான். இந்த சமயத்தில் கூட லோத்து சோதோம் பட்டணத்தில் குடியேறவில்லை. ஆனால், சோதோமுக்கு மிக அருகில் கூடாரம் போட்டு அங்கே வாழ்ந்து வந்தார். 13 ஆம் அதிகாரம் 13 ஆம் வசனம் சோதோம் பட்டணத்து மக்களைப் பற்றி சொல்கிறது. சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள் (ஆதியாகமம் 13:13).

14 ஆம் அதிகாரத்தில் இரண்டு ராஜாக்களிடையே நடந்த யுத்தத்தில் லோத்து சிறைபிடிக்கப்பட்டு கொண்டு போகப்பட்டத்தை ஒருவர்

வாசிக்க முடியும். மேலும், லோத்து சோதோமிலே குடியிருந்த போதுதான் சிறைபிடிக்கப் பட்டார் என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும் [14:12]. முன்பு சோதோமுக்கு மிக அருகில் கூடாரம் போட்டிருந்த லோத்து இப்போது சோதோம் பட்டணத்திற்குள் குடியேறிவிட்டார். சிறைபிடிக்கப்பட்ட லோத்தை ஆபிரகாம் மீட்டப்பிறகு மீண்டும் லோத்து சோதோமுக்குள் சென்று விட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும் [19:1].

நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள் [ஆதியாகமம் 13:13]. ஆபிரகாம் தேவனோடு சோதாமின் அழிவைப் பற்றியும், அங்கு இருக்கும் நீதிமான்களைப் பற்றியும் பேசினார். இறுதியில் கர்த்தர் அந்த சோதோம் பட்டணத்தில் 10 நீதிமான்கள் இருந்தால் அதை அழிக்கப் போவதில்லை என்று ஆபிரகாமிடம் சொன்னார். அடுத்த அதிகாரத்தில் தேவ தூதர்கள் லோத்தையும், அவனுடைய குடும்பத்தையும் காப்பாற்றும் படி அந்த சோதோம் பட்டணத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். லோத்து தன் குடும்பத்தினரோடு கெஞ்சி மன்றாடினார். ஆனாலும், அவருடைய மருமகன்களும் திருமணமான மகள்களும் அவருடைய வார்த்தைக்கு செவி சாய்க்கவில்லை. இறுதியில், லோத்துவும், அவருடைய மனைவியும், மற்றும் திருமணமாகாத இரண்டு மகள்களும் மாத்திரமே சோதோமின் அழிவிலிருந்து தப்பினார்கள் [19:15,16]. லோத்தின் வாழ்க்கையை உற்று நோக்கியதிலிருந்து கற்றுக் கொண்ட மூன்று கருத்துக்களை கவனியுங்கள்.

லோத்து பாவத்திற்கு அருகில் படிப்படியாகச் செல்ல தன்னை அனுமதித்தார். சில காலம் லோத்து விசுவாசம் உள்ள ஆபிரகாமின் கீழ் அதாவது அவருடைய அரவணைப்பில் வாழ்ந்து வந்தார். ஆனால், அவர் ஆபிரகாமை விட்டு பிரிந்து வந்ததிலிருந்து பாவத்தின் இடத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்தார். பிற்பாடு அவர் பட்டணத்திற்கு உள்ளே பிரவேசித்து விட்டார். அலைந்து திரிந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதன் இப்பொழுது சொகுசான பட்டண வாழ்க்கையை தெரிந்து கொண்டார். லோத்து தனக்கு இருந்த திரளான ஆடு மாடுகளைப் பராமரிக்கும்படி பிறரிடம் ஒப்படைத்து விட்டு வந்தாரா ?அல்லது அந்த ஆடு மாடுகளை விற்ற பணத்தில் ஆடம்பர வாழ்க்கையை பட்டணத்தில் வாழ்ந்தாரா என்பதை பற்றி வேதாகமம் எதுவும் தெரிவிக்கவில்லை. எப்படிப் பார்த்தாலும் லோத்து இப்போது அலைந்து திரியும் கூடார வாழ்க்கையை வாழவில்லை. மாறாக, பாவம் நிறைந்த செழிப்பான பகுதியில் அதாவது பட்டணத்தில் சௌகரியமாக வாழ்ந்தார்[ஆதியாகமம் 18:20-21; 19:4-11]. யாக்கோபு ஆசிரியர் நம்முடைய வாழ்வில் பாவம் படிப்படியாகத்தான் பிரவேசிக்கிறது என்று சொல்லுகிறார்[ 1:14-15]. பாவத்தை விட்டு ஓடுவதற்கு பதிலாக அதற்கு

இணங்கும் போது பாவம் ஆரம்பமாகிறது. கிறிஸ்தவர்களும் பிசாசுக்கு எதிர்த்து நின்று அதற்கு பதிலாக தேவனிடத்தில் திரும்பும் படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் (யாக்கோபு4:7). பாவம் நம்முடைய எண்ணங்களிலிருந்து ஆரம்பமாகி பாவமான செயல்பாடுகளுக்குள் வழி நடத்துகிறது (மத்தேயு 15:18,19).

லோத்து துன்மார்க்கருக்கு மத்தியிலும் தன்னை நீதிமானாகக் காத்துக் கொண்டார். சோதோம் கொமோரா பட்டணங்களும் அதைச் சுற்றிலும் இருந்த சம பூமியின் பட்டணங்களும் தேவனால் அழிக்கப்பட்டன (ஆதியாகமம் 19:24-25). இருந்தபோதிலும், லோத்து நீதிமானாக இருந்தபடியால் அவர் அழிவிலிருந்து தப்பிக் கொண்டார் (2பேதுரு 2:7,8). தேவ தூதர்கள் சோதோம் பட்டணத்துக்கு வந்த போது பட்டணத்தின் துன்மார்க்கரிடமிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பை அளிக்கவும் அந்த தேவ தூதர்களை நன்கு உபசரிக்கவும் லோத்து விரும்பினார் (ஆதியாகமம் 19:1-11). லோத்து அப்பட்டணத்தின் துன்மார்க்கம் தன் வாழ்க்கையில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த அனுமதிக்கவில்லை. இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களும் கூட நம்மைச் சுற்றிலும் துன்மார்க்கமான காரியங்கள் நடந்தாலும் கூட நம்மை நாம் நீதிமான்களாக காத்துக் கொள்ள வேண்டும் .நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

லோத்து நீதிமானாக தன்னைக் காத்துக் கொண்டார். ஆனால், அவர் தன் ஒட்டுமொத்த குடும்பத்தையும் இழந்து விட்டார். லோத்துவின் குமாரத்திகள் அந்த சோதோம் பட்டணத்து ஆண்களை திருமணம் செய்தது போல் தான் தெரிகிறது. லோத்து அழிவு வருவதற்கு முன்பாக அந்த சோதோம் பட்டணத்தை விட்டு வெளியேறும்படி தன் மருமகன்களோடு மன்றாடின போதும் கூட அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்து விட்டார்கள் (ஆதியாகமம் 19:14). லோத்துவும், அவருடைய மனைவியும் மற்றும் அவருடைய இரண்டு திருமணமாகாத குமாரத்திகளும் மாத்திரமே அழிவிற்கு முன்பாக அப்பட்டணத்தை விட்டு வெளியேறினார்கள் (19:16). பட்டணத்தை விட்டு வெளியேறின பிறகு, லோத்தின் மனைவி பின்னிட்டு பாராதே என்னும் கட்டளையை மீறினாள் (19:17) அதன் காரணமாக தேவன் அவளை உப்புத்தூணாக மாற்றினார்( 19:26). பின்பு லோத்துவின் குமாரத்திகள் தங்கள் சந்ததி செழித்தோங்க வேண்டும் என்பதற்காக தங்கள் தகப்பனுக்கு மதுவை கொடுத்து அவரோடு தவறான உறவு கொண்டார்கள் (19:30-38). லோத்துவின் குமாரத்திகளுக்கு தேவன் தங்களுக்கு சந்ததியை கொடுப்பார் என்பதில் விசுவாசம் இல்லாத காரணத்தினால் தான் துன்மார்க்கமான அந்த சோதோம் பட்டணத்தின் தாக்கம் அவர்களிடத்தில் தொடர்ந்து

இருந்தபடியினாலும் அவர்கள் தங்கள் தகப்பனோடு இவ்விதமாய் நடந்து கொண்டார்கள். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் குடும்பத்தை இழந்து போகாமல் இருள் சூழ்ந்த இவ்வுலகில் சுடர்களைப் போல ஒளி வீசி இழந்து போனவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். (மாற்கு 16:15).

தேவனுடைய கட்டளைகளை பிள்ளைகளுக்கு கருத்தாய் போதிக்க வேண்டும் என்னும் பழைய ஏற்பாட்டு போதனையையும், (உபாகமம் 6:7; நீதிமொழிகள் 22:6) பிள்ளைகளை கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக (எபேசியர் 6:4) என்னும் புதிய ஏற்பாடு போதனையையும் நாம் ஒருபோதும் அற்பமாக எண்ணக்கூடாது. அதோடு கூட உங்கள் பிள்ளைகள் உங்களைப் பின்பற்றத்தக்கதாக தேவ பக்தி உள்ள வாழ்க்கை வாழ்ந்து அவர்களுக்கு ஒரு மாதிரியை முன் வைப்பது அவசியமாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 11:1; பிலிப்பியர் 3:17). அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 15:4ல் முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார். லோத்து என்னும் கதாபாத்திரம் குறைவான வசனங்களில் இடம் பெற்று இருந்தாலும் கூட, இந்த நீதியுள்ள மனிதனிடமிருந்து அதிகமான காரியங்களை நம்மால் கற்றுக் கொள்ள முடியும்.

## முடியாது

- தேவனுடைய அன்பின் வல்லமையைக் குறைக்க **முடியாது**
- தேவனுடைய ராஜ்யத்தின் விதையை அழிக்க **முடியாது**
- வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தைத் தோற்கடிக்க **முடியாது**
- நம்மை தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்ய நிர்ப்பந்திக்க **முடியாது**
- தேவனுடைய கரத்திலிருந்து நம்மை விலக்க **முடியாது**
- தேவனுடைய பண்புகளை மாற்ற **முடியாது.**




புதிய ஏற்பாடு, சாத்தானை தேவனுடைய ஜனங்களை விழுங்கும்படி வகை தேடிச் சுற்றித் திரியும் கெர்சிக்கிற சிங்கம் என்று சொல்கிறது (1 பேதுரு 5:8). கிறிஸ்தவர்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்தக்கதாக தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்து கொண்டிருக்கிறார்கள் (எபேசியர்6:11-17). பிசாசு எப்படிச் செயல்படுகிறான் என்பதை நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ அவ்வளவு அதிகமாக அவனை எதிர்த்து நிற்கும் முயற்சிகளில் நாம் சிறந்து விளங்குவோம். கிறிஸ்தவர்களாக நாம் பிசாசுக்கு பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், இயேசு கிறிஸ்து சாத்தானையும் அவனுடைய வல்லமையும் அழித்துப் போட்டார் எபிரேயர்2:14-15). இருந்த போதிலும் நாம் அவனுக்கு இணங்கி விட்டால் அவன் நம் மீது ஆதிக்கத்தை செலுத்துவான்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பல்வேறுபட்ட பிரச்சனைகள் பற்றி பேசுகிறார்: அதாவது, பவுல் இந்த நிருபத்தில் தன்னுடைய அப்போஸ்தலத்துவத்திற்கு ஆதரவாக பேசுவது மாத்திரமல்லாமல் எருசலேம் சபைக்கு கொடுக்க வேண்டிய பொருளாதார உதவிகளைப் பற்றியும், பவுல் ஏற்கனவே 1 கொரிந்தியரில் எழுதாமல் விட்ட காரியங்களைப் பற்றியும் விவாதிக்கிறார். மேலும், பவுல் இந்த நிருபத்தில் சாத்தான் செயல்படும் விதங்களை தன்னுடைய முந்தைய நிருபங்களைக்காட்டிலும் சற்று விவரமாகப்பேசுகிறார் கொரிந்து சபை பல பிரச்சினைகளுக்கு பேர் போன ஒரு சபையாக இருந்தது. எல்லா சபைகளைப் போலவே கொரிந்து சபையிலும் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனைகள் இருக்கத்தான் செய்தன. பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய இந்த இரு நிருபங்களும் அவர் அந்த சபைகளுக்கு கொடுத்த வழிகாட்டு நெறிமுறைகளை

வெளிப்படுத்துகின்றன. பவுல் கொரிந்து பட்டணத்து சபையாருக்கு கொடுத்த எச்சரிக்கைகளையும், அவர் சாத்தானின் கிரியைகளை விவரித்த விதங்களையும் பார்க்கும்போது பிசாசை எதிர்த்து நிற்க நாம் சிறந்த முறையில் ஆயத்தமாக முடியும். சாத்தான் எப்படி கிரியை செய்கிறான் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.

இரண்டு கொரிந்தியர் இரண்டாம் அதிகாரத்தில் பவுல் மனந் திரும்பிய ஒருவரை ஏற்றுக் கொள்வது பற்றி எழுதுகிறார். பவுல் அந்த கொரிந்து பட்டணத்து சபையாரிடம் தண்டிக்கப்பட்ட சகோதரனுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையானது என்ன என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்று எழுதினார்( 2 கொரிந்தியர் 2:6). தண்டிக்கப்பட்ட அந்த சகோதரன் அதிக துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடிக்கு அவர்கள் அவனை மன்னித்து ஆறுதல் செய்ய வேண்டும் என்றும் எழுதினார்(2 கொரிந்தியர் 2:7).

மேலும், சபையார் அந்த சகோதரனிடம் இரக்கம் காண்பிக்கும்படி அவர்களை வேண்டிக் கொள்கிறார்( 2 கொரிந்தியர் 2:8). சாத்தானின் தந்திரங்கள் அந்த சபையாருக்கு தெரிந்திருந்தபடியால் மேற்கண்ட காரியங்களை செய்யும்படி பவுல் அவர்களை உற்சாகப்படுத்தினார் (2கொரிந்தியர் 2:11).

சாத்தான் கொரிந்து பட்டணத்து சபையில் நிலவிய சூழ்நிலைகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தாதபடிக்கு அவர்கள் ஞானமாய் நடக்க வேண்டியதாய் இருந்தது. பிசாசின் தந்திரங்கள் நமக்கும் தெரியாததல்லவே. சாத்தான் எப்படி செயல்படுகிறான் என்பதைப் பற்றி வேதாகமத்தில் ஏராளமான, தாராளமான தகவல்கள் உள்ளன.

ஆதியாகமம் மூன்றாம் அதிகாரத்தில், சாத்தான் தேவனை பற்றியும் அவருடைய வார்த்தைகளைப் பற்றியும் நம் மனதில் சந்தேகத்தை உண்டாக்குகிறதை கற்றுக் கொள்கிறோம் (ஆதியாகமம் 3:1-6). பிற்பாடு அன்பின் அப்போஸ்தலனாகிய யோவான் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை மற்றும் ஜீவனத்தின் பெருமை போன்றவர்களை பற்றி பேசுகிறார் (1 யோவான் 2:15-17). சாத்தான் தேவனுடைய குமாரனையே சோதிப்பதையும் அவர் சரீரப்பிரகாரமாக இருந்தபோது அவரை சோதிக்க முயற்சிப்பதையும் நாம் வாசிக்கிறோம்( மத்தேயு4:1-11). பவுல் கொரிந்து சபையார் சாத்தானுடைய தந்திரங்களை நன்கு அறிந்து சரியான முடிவுகளை எடுக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார். நம்மை எவைகள் அதிகமாக சோதிக்கின்றன என்பதை பற்றியும் சாத்தான் கடந்த காலங்களில் அவைகளை எப்படி நம்மை பாவத்தில் தள்ள பயன்படுத்தினான் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். நாம் பிசாசின் தந்திரங்களை நன்கு அறிந்து அதற்கேற்ப நடந்து கொள்கிறவர்களாக இருக்க வேண்டும்.

சாத்தான் எப்போதுமே சாத்தான் போன்று,தோற்றமளிப்பதில்லை பவுல் தனக்கு எதிராக கொரிந்தியார்களை திருப்ப முயற்சித்த கள்ளப்போதகர்களோடு போராடினார். பவுல் அந்த கள்ளப்போதகர்கள் கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவனுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்து கொண்டவர்கள் என்று குற்றம் சாட்டினார்( 2 கொரிந்தியர் 11:13). மேலும், பவுல் அந்தக் கள்ளப்போதகர்கள் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்ளும் சாத்தானைப் போன்றவர்கள் என்றும் குறிப்பிடுகிறார்

(2 கொரிந்தியர் 11 :14). கிறிஸ்துவுக்காக ஸ்தானபதிகளென்று சொல்லிக்கொண்ட சிலர் கூட வேறொரு சுவிசேஷத்தை போதித்திருக்கிறார்கள் (கலாத்தியர் 1:6-10). பெரும்பாலான மக்கள் சாத்தானை பற்றி நினைக்கும்போது சிவப்பு ஆடை, தலையில் கொம்புகள் போன்றவைகளைத் தான் தங்கள் மனதில் கொண்டு வருகிறார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், சாத்தான் அனேகமாக நம்மிடம் உதடுகளில் வேதாகம வசனத்துடனும், தன் இருதயத்தில் பாடலுடனும் வரலாம். கிறிஸ்தவர்களாகிய நாம் முட்டாள்களாகாதபடி எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும்( 1 தெசலோனிக்கேயர் 5:21). நாம் வஞ்சிக்கப்படாதபடி நமக்கு எவைகளெல்லாம் போதிக்கப்படுகிறதோ அவைகளெல்லாம் வேத வாக்கியங்களின் படி சோதித்து பார்க்க வேண்டும் (1 யோவான் 4:1). **பொல்லாங்கனின் வேஷத்தை** பலர் அறியாதபடியினால் அவர்கள் வழி தப்பி போய்விட்டார்கள். சாத்தான் தன்னுடைய தோற்றத்தை மறைக்க முயற்சித்தாலும் கூட தன்னுடைய கனியை அவனால் மறைக்க முடியாது. ஜனங்கள் தாங்கள் கொடுக்கும் கனிகளால் அறியப்படுவார்கள் என்று இயேசு கிறிஸ்து நமக்கு நிச்சயமாக தெரிவித்திருக்கிறார்( மத்தேயு7:15-20).

எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் (கொலோசெயர் 1:28). இங்கே கிறிஸ்து இயேசு யார் என்பதை கவனியுங்கள். கிறிஸ்து என்பது அவருடைய கடைசி பெயர் அல்ல, மாறாக, அவர் யார் என்பதைக் காட்டுகிறது. கிறிஸ்து என்பது மேசியா என்னும் எபிரெய பதத்திற்கு இணையான கிரேக்கப் பதமாகும். இதன் பொருள் **அபிஷேகம் பண்ணப்பட்டவர்.** அதாவது, நம்முடைய இரட்சிப்புக்காக அபிஷேகம் பண்ண பட்டவர் எனப்படும்.

✝

# 1,2,3 யோவான் மூலமாக தேடுதல் வேட்டை
## Rebecca Rushmore

1. அப்போஸ்தலனாகிய யோவான் தான் 1 யோவான் நிருபத்தை ஏன் எழுதினதாகச் சொன்னார்?

2. யார் நமக்காக தேவனிடத்தில் பரிந்து பேசுகிறார்?

3. நாம் ஒளியிலே நடந்தால் எதைப் பெற்றுக் கொள்வோம்?

4. நாம் அவரை அறிந்திருக்கிறோம் என்பதை எப்படி அறிந்து கொள்வோம்?

5. பாவம் என்பது என்ன?

6. எங்கே இருந்து அன்பு வருகிறது?

7. எப்போது தேவன் நமக்கு செவி கொடுக்கிறார்?

8. அப்போஸ்தலனாகிய யோவான் எதைக் குறித்து சந்தோஷப்பட்டு இருக்கிறார்?

9. மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவனை யோவான் எப்படி அழைக்கிறார்?

10. சபையில் முதன்மையாயிருக்க விரும்பின எந்த நபரை யோவான் கண்டிக்கிறார்?



## சத்திய வழி

❖ பேச்சாளர் : **சகோ. P.R. சுவாமி (ஊழியர்)**


❖ நிகழ்ச்சி : வேதாகமக் கல்வி & அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

<u>தொடர்புக்கு</u> : சத்திய வழி, அஞ்சல் பெட்டி 8405, பெங்களூர் – 560084.

போன் : 080-25463507, செல் : 098440 70763

---

## கிறிஸ்துவின் வசனம்



❖ பேச்சாளர் : **சகோ. B. அர்ஜூனன்**

❖ நம்பிக்கை TV : திங்கள் & சனி மாலை 7:30 – 7:45 மணி

❖ மாத இதழ் : கிறிஸ்துவின் வசனம்


<u>ஆவிக்குரிய புத்தகங்கள் கிடைக்குமிடம்</u> ;

கிறிஸ்துவின் சபை, தபால் பெட்டி 5, வத்லகுண்டு – 624 206.

திண்டுக்கல் மாவட்டம். போன் : 04543 263278 செல் : 94435 58041

---

## கிருபையுள்ள வார்த்தை



❖ பேச்சாளர் :**சகோ. P.C. பிலேமோன் ராஜா**

❖ தமிழன்/நம்பிக்கை :ஞாயிறு காலை 6:45 & வெள்ளி காலை 6:15 மணி

❖ பைபிள் பாடங்கள் :அடிப்படை மற்றும் மேல்நிலை தபால் பாடங்கள்

❖ பார்வையற்றோருக்கு THE VOICE OF TRUTH ப்ரைல் இதழ் (தமிழ் / English)

❖ தமிழ் மாதப் பத்திரிக்கை : கிருபையுள்ள வார்த்தை

❖ **English Quaterly Magazine** : THE VOICE OF TRUTH INTERNATIONAL


❖ **J.C. School of Evangelism** : கிறிஸ்தவர்களுக்கான சுவிசேஷப் பள்ளி

<u>தொடர்புக்கு</u> : தபால் பெட்டி 15, அரசரடி, மதுரை – 625 016.

செல் : 92 4421 4424, 92 4431 4431, 92 4420 4420

## திருமறை தியானம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**



| | | | | |
|---|---|---|---|---|
| நம்பிக்கை | TV | செவ்வாய் | காலை | 6.30 மணி |
| நம்பிக்கை | TV | வெள்ளி | காலை | 7:30 மணி |

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**வேதாகம** அஞ்சல்வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம் ஆம், வேதாகமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **7** பகுதிகளாப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

தொடர்புக்கு
இயக்குநர், அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ. எண் 27, காங்கேயம் 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**பரிசுத்த வேதாகமத்தின் தெளிவான உபதேசத்தை வெளிப்படுத்தும் பல்வேறு தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ள பல வண்ணங்களில் ஆன கைப்பிரதிகள்** (Tracts) **வேண்டுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்**

E.Z.S. **ராஜநாயகம்** : 98427 30382
P.R. **சுவாமி** : 098440 70763
P.C. **பிலேமோன் ராஜா**: 9244204420
B. **அர்ஜுனன்** : 994435 58041

## ' சத்தியத்தின் குரல் ' சந்தா விண்ணப்பம்

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு நான் சந்தாதாரராக இருக்க விரும்புகிறேன். இத்துடன் ரூ. 100 ( 4 இதழ்கள் ) (அ) ரூ. 200 ( 8 இதழ்கள் ) க்கான காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன். என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழுக்கு என்னுடைய .............................................. முன்னிட்டு ஒருதரம் வெகுமதி (A Gift) கொடுக்க விரும்புகிறேன். அதற்கான ரூ. ...................... காசோலையை இத்துடன் இணைத்துள்ளேன் என் விலாசம் கீழே உள்ளது.

❑ "சத்தியத்தின் குரல்" நூலை காலாண்டு தோறும் 25 பிரதிகள் பெறுவதற்காக ரூ. 500 அனுப்ப விரும்புகிறேன். அல்லது ஒவ்வொரு வருடமும் ரூ. 1500 அனுப்பி நான்கு காலாண்டுகளுக்கு 25 பிரதிகள் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். (சபையார் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் பயன்பெறுங்கள்)

**(இந்தப் படிவத்தை உங்கள் காசோலையுடன் இணைத்து அனுப்புங்கள்)**

கடிதங்களும், காசோலைகளும், வரைவோலைகளும் அனுப்ப வேண்டிய முகவரி


**E.Z.S. ராஜநாயகம்**

"சத்தியத்தின் குரல்" காலாண்டு இதழ்

**288, தாராபுரம் ரோடு, காங்கேயம் – 638 701.**

**Ph : 04257 230030, Cell : 98427 30382, 99655 30385**

**E-mail : rajarichal@yahoo.co.in**


பெயர் : ____________________

தெரு / ரோடு : ____________________

நகரம் : ____________________ பின் கோடு : ____________

மாநிலம் : ____________________

# 5 நிமிட வேத பாடம்

## கர்த்தர் மேல் நம்பிக்கை வையுங்கள்

Paula Bates

1. கர்த்தர்மேல் ............................... கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே ...................................... கால்வாய் ஓரமாகத்தன்வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் ................................... மரத்தைப்போலிருப்பான் [எரேமியா 17:7,8].

2. கர்த்தர் ........................................ ஊழியக்காரரின் ஆத்துமாவை மீட்டுக்கொள்ளுகிறார், அவரை ..................................... ஒருவன்மேலும் குற்றஞ்சுமராது [சங்கீதம் 34:22].

3. இதினிமித்தம் பிரயாசப்படுகிறோம், ........................ அடைகிறோம். ஏனெனில், எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகிய ஜீவனுள்ள தேவன்மேல் .......................................... வைத்திருக்கிறோம் [1 தீமோத்தேயு 4:10].

4. ............................பலத்தினாலே உங்களுக்கு ............................... பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் ................. உங்களை நிரப்புவாராக[ரோமர் 15:13].

5. ...................... பிறப்பதெல்லாம் உலகத்தை ................. நம்முடைய விசுவாசமே .................. ஜெயிக்கிற ஜெயம். இயேசுவானவர் தேவனுடைய .............................. விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? [1 யோவான் 5:4–5].

For Further Information, Please Contact :

# சத்தியத்தின் குரல்




## இந்நூலை நீங்கள் இவ்விதங்களில் பயன்படுத்தலாம்

* காலை, இரவு குடும்ப ஜெப நேர தியானத்திற்காக
* சபை கூட்டங்களில் வேத ஆராய்ச்சிக்காக
* புதிய ஆத்துமாக்களோடு சத்தியத்தைப் படிப்பதற்காக
* மாத இதழ்களில் கட்டுரைகள் வெளியிடுவதற்காக
* பிறருக்குக் கொடுக்கத்தக்கவர்களுக்குக் கொடுப்பதற்காக
* பக்தியில் வளர்ந்து சத்தியத்தில் ஊன்றக் கட்டப்படுவதற்காக
* கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றவர்களுக்குக் கொடுப்பதற்காக
* சிறைச்சாலை ஊழியங்களில் பயன்படுத்துவதற்காக
* பள்ளி, கல்லூரி விடுதிகளில் வைப்பதற்காக
* மருத்துவமனை ஊழியங்களுக்கு கொண்டு செல்வதற்காக
* பிறரோடு சேர்ந்து வேதாகமத்தின் காரியங்களைக் கற்றுக்கொள்வதற்காக
* தொலைதூரப் பயணங்களில் படிப்பதற்காக

**பயன்படுத்தப்படாமல் வெறுமனே**
**ஒரு மூலையில் கிடக்க அனுமதிக்காதீர்கள்**

**வீணாகப் போடப்படும் எதுவும் எதையும் எப்போதும் சாதிக்காது!!**

எங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பாருங்கள்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
செவ்வாய் காலை 6.30 - 7.00 மணி

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

எங்கள் மாத இதழ்களைப் படியுங்கள்

' திருமறை ஆசான் '
' கிருபையுள்ள வார்த்தை '
' வேர்டு ஆப் கிரைஸ்ட் '

மேலும் விபரங்களுக்கு : E.Z.S. **ராஜநாயகம்,** தபால் பெட்டி 27, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
போன் : 04257 230030, செல் : 98427 30382, 99655 30385